விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in SriLanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(த-39940)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 12 வெள்ளிக்கிழமை (28.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 283

சர்வதேச சட்டத்தை இலங்கை மீறினால்

# ஐ.நா அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கும்

## பிரித்தானிய எம்.பி ஸ்டீபன் தீம்ஸ் நம்பிக்கை தெரிவிப்பு



(ஜெனிவா) இலங்கையில் கடந்த 2009-ம் ஆண்டு இறுதிக்கட்ட போரின் போது என்ன நடந்தது என்பது குறித்து விசாரிக்க இலங்கை அரசாங்கம் சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைய விசாரணை கட்டமைப்பை ஏற்படுத்த தவறினால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக் குழு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கும் என நம்புவதாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் தீம்ஸ் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

காற்றாலை ஒப்பந்தத்தை

## மீளாய்வு செய்வதற்கு மாகாணசபையில் முடிவு

(யாழ்ப்பாணம்)

காற்றாலை ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து மாகாண சபைக்கு வருமானத்தை ஏற்படுத்த முடியுமா என்று மீளாய்வு செய்யவேண்டும் என வடக்கு 23☛

## வாள்வெட்டுக்குழு நவாலியில் அட்டகாசம்

(மானிப்பாய்)

நவாலி பிரதான வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட வாள்வெட்டுக் கும்பல் ஒன்று கடைக்குள் புகுந்து பணம் மற்றும் பொருட்களை சூறையாடிச் சென்றுள்ளது. இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் நவாலி பிரதான வீதியில் 23☛

6 பேர் கொண்ட வாள்வெட்டுக்குழு


## கொக்குவில் நந்தாவிலில் வீடு புகுந்து அட்டூழியம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் லேனில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த 6 பேர் கொண்ட வாள்வெட்டுக் கும்பல் வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் அங்கிருந்த பொருள்களை அடித்து சேதப்படுத்தித் தப்பித்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். 24☛

கைதான வாள்வெட்டுக்குழு உறுப்பினர் இருவர் வழங்கிய தகவலையடுத்து

## ஆலய கோபுரத்திலிருந்து பெருமளவு வாள்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களால் கொக்குவிலி 24☛

## சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பையடுத்து

சிற்றுண்டிகளின் விலை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து, சிற்றுண்டிகளின் விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை தீர்மானித்துள்ளது.

ஆயிரத்து 538 ரூபாயாக காணப்பட்ட, 12.5 கிலோகிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை ஆயிரத்து 733 ரூபாயாக நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சிற்றுண்டி உணவுகளின் விலை அதிகரிக்கப்படும் என சிற்றுண்டிச்சாலைகள் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் 23☛

## தொண்டைக்குள் பிட்டு சிக்கியதில் மூதாட்டி மரணம்

(சாவகச்சேரி)

காலை உணவாக சாப்பிட்ட பிட்டு தொண்டைக்குள் சிக்கியதில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் மேற்கு மீசாலையில் நேற்று வியாழக் 24☛

## இராணுவத்தால் தொடர் அச்சுறுத்தல்

ஐ.நாவில் அனந்தி சசிதரன்

(ஜெனிவா)

இலங்கை இராணுவத்தினரால் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதாக வட 23☛

## இராணுவத்தை அரசு பாதுகாக்கும்

அமெரிக்காவில் மைத்திரி

(நியூயோர்க்)

தீவிரவாதத்துக்கு எதிராக போரிட்ட கடைசி இராணுவ சிப்பாய் முதல் இராணுவத் தளபதி வரையான அனைவரும் 23☛

## எரிபொருள் விலை மீண்டும் உயரும் - நிதி அமைச்சர்

(கொழும்பு)

எரிபொருள் விலைச் சூத்திரம் எதிர்வரும் 10-ம் திகதி வருவதாகவும் அதற்காகத் தயாராகுமாறும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர நேற்று பகிரங்க அறிவித்தல் விடுத்தார்.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகளவு அதிகரித்துள்ளது. ஒரு பீப்பா மசகு எண்ணெய் 80 டொலர் வரை 23☛

## வட மாகாண அமைச்சரவை விவகாரம் சபையில் மீண்டும் கருத்து மோதல்

### முயற்சி வெற்றியளிக்கவில்லை என அவைத் தலைவர் வருத்தம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை அமைச்சரவை விவகாரம் தொடர்பில் மீண்டும் சபையில் குழப்பநிலை ஏற்பட்டதுடன், நேற்று வழமை போன்று கருத்து மோதல்கள் நீண்ட நேரம் இடம்பெற்றன.

அமைச்சரவை விவகாரம் தொடர்பில் எனது முயற்சி வெற்றியளிக்கவில்லை என அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் வருத்தம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 132 ஆவது சபை அமர்வு நேற்று கைதடியில் அமைந்துள்ள 23☛

## யுத்தத்தால் வடக்கில் சுற்றுலாத்துறை பாரிய வீழ்ச்சி

விக்னேஸ்வரன் கவலை

(யாழ்ப்பாணம்)

வட பகுதியின் சுற்றுலா அபிவிருத்தி வளர்ச்சியடையாமைக்கு இந்த பகுதியில் இடம்பெற்ற நீண்ட கால யுத்தம் ஒரு காரணமாக காட்டப்படுகின்றது என வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக் 23☛

அதிகாரப் பகிர்வு கொண்டுவரப்பட்டால்

## வடக்கு, கிழக்கு மாகாண ஸ்திரத்தன்மை பாதிக்கும்

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

வடக்குக்கும் கிழக்குக்கும் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால் மாத்திரமே, நாட்டைக் கட்டியெழுப்பலாம் என்று காணப்படும் கருத்தியல் தவறானது எனக் குறிப்பிட்ட அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அவ்வாறு நடந்தால் நாட்டின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே 23☛

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

### யாழில் மீண்டும் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை நாளை சனிக்கிழமை முற்பகல் 11.30 அளவில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக நடத்துவதற்கு அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துகின்ற யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து அழைப்புவிடுத்துள்ளன.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கொக்குவிலில் அமைந்துள்ள 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்டில் சுற்றுலாத்துறையை கட்டியெழுப்பும் அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சுற்றுலாத்துறையை கட்டியெழுப்பும் அரசு தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க வேண்டும் என தெரிவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா, தமிழ் மக்கள் கண்ணீருடன் இருப்பதை வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பார்ப்பது நாட்டின் கௌரவத்திற்கு நல்லதல்ல எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சுற்றுலா தினத்தை முன்னிட்டு, தேசிய சுற்றுலா தின நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ள வடக்கு மக்கள் மத்தியில் அவர்களோடு இணைந்து சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய வந்தமையை நாம் வரவேற்கின்றோம். இச் சுற்றுலாத்துறையை பொறுத்த வரையில் வடக்கில் பல இடங்கள் காணப்படுகின்றன. அவற்றை விருத்தி செய்வதனூடாக இச் சுற்றுலா துறையை மேலும் முன்னேற்ற முடியும்.

சுற்றுலாத்துறையில் புதிய தொழில்நுட்ப கலாசாரம் உட்புகுந்துள்ளது. ஆனால் அப் புதிய கலாசாரம் எமது பாரம்பரிய, பண்பாடு கலை கலாசாரங்களை அழித்து விடாமல் பாதுகாக்க வேண்டும்.

தற்போது எமது இளம் சமுதாயம் வேலை வாய்ப்புக்கள் இன்றி காணப்படுகின்றார்கள். அதேபோன்று எமது பிரதேசத்தில் தொழிற் துறைகளும், தொழிற்சாலைகளும் இல்லாமல் காணப்படுகின்றது. எனவே

இச் சுற்றுலாத் துறை அபிவிருத்தியூடாக எமது பிரதேசத்தில் தொழிற்துறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் போது எந்த பகுதியில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படுகின்றதோ அப் பகுதி உள்ளூராட்சி சபைகளுக்கு அச் சுற்றுலாத்துறையால் கிடைக்கப்படுகின்ற இலாபத்தில் ஒரு பகுதி வழங்கப்பட வேண்டும். அவ்வாறாயின் அப் பகுதிகளை மேலும் அபிவிருத்தி செய்ய கூடியதாக இருக்கும்.

வரவு செலவு திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டம் தொடர்பாக இம் மாத இறுதியில் அல்லது எதிர்வரும் மாத ஆரம்பத்தில் எமக்கும் ஜனாதிபதி, பிரதமருக்கும் இடையில் சந்திப்பொன்றுள்ளது. இது தொடர்பில் நாம் ஜனாதிபதி பிரதமருக்கு தெரிவிக்கவுள்ளோம். அதே நேரம் திட்ட முன்மொழிவுகளை அதில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

இதேபோன்று வடக்கில் முழுமையாக நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. அவ்வாறு விடுவிக்கப்படாத நிலையில் எமது கடல் வளம், விவசாயம் பாதிக்கப்படுகின்றது. அந் நிலங்கள் விடுவிக்கப்பட்டால் அதனூடாக மேலும் சுற்றுலாத்துறை வளர்ச்சியை பெற்றுக்கொள்ள முடியும். எனவே சுற்றுலாத் துறை அமைச்சு திட்டங்களை வகுக்கின்ற போது இந்த விடயங்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இதேவேளை இந் நாட்டில் தமிழ் மக்கள் தமது அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கும், இனப் பிரச்சினைக்கான தீர்வாக புதிய அரசியலமைப்பை பெற்றுக்கொள்வதற்கும் எமக்கு அங்கிகாரமளித்து வாக்களித்துள்ளார்கள்.

இந் நிலையில் தமிழ் மக்கள் வீடற்ற நிலையிலும், வறுமையிலும், வேலைவாய்ப்பை இழந்தும் கண்ணீருடன் இருப்பதை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பார்ப்பது இந் நாட்டின் கௌரவத்திற்கு இழிவானதாக இருக்கும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

# பாலைதீவு படையினரின் கட்டுப்பாட்டில் தொடர்ந்திருப்பதை அனுமதிக்க முடியாது

## சி.வி.விக்னேஸ்வரன் விசனம்

பூநகரிப் பிரதேசத்திற்கு உட்பட்ட பாலைதீவு கடற்பகுதி தொடர்ந்தும் இலங்கைப் படையினரின் கட்டுப்பாட்டில் காணப்படுவதை அனுமதிக்க முடியாது என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற உலக சுற்றுலாத் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், பாலைதீவு கடற்பகுதி தற்போது முற்றுமுழுதாக இலங்கை பாதுகாப்பு படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனைத் தொடர்ந்து ஏற்க முடியாது. இப்பகுதிகளை விடுவித்து சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் ஆர்வமுடைய வட மாகாண முதலீட்டாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் கையளிக்கப்பட வேண்டும்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள டச்சுக் கோட்டைப் பகுதி அழகுபடுத்தப்பட வேண்டும். இதற்கு நெதர்லாந்து அரசு எமக்கு போதிய உதவிகளைச் செய்யக் காத்துக் கிடக்கின்றது.

பாரிய சுற்றுலா உணவகங்கள் எம் சுற்றாடலின் எளிமையையும் அமைதியையும் பாதிப்பன என்பது எமது கருத்து. எனவே, எம்மிடமுள்ள சமையல் திறமைகளையும் மருத்துவ பாரம்பரியங்களையும் எடுத்துக் காட்டகூடியவாறு பாரம்பரிய உணவு விற்பனை மையங்களை ஏற்படுத்தலாம்.

சுற்றுலாத் துறையினால் பல நன்மைகள் ஏற்படும் அதே வேளை, சூழல் பாதிப்பு, உள்ளூர் மக்கள் ஒதுக்கப்படுதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எனவே, இவை தொடர்பாக கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும் எனத தெரிவித்தார். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1592

## ஹோம வழிபாடுகள்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் வீணாகான குருபீடம்பதி உறையும் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில் புரட்டாதி 2-ம் சனிக்கிழமை விரத ஹோம வழிபாடுகள் நாளை சனிக்கிழமை காலை 09.00 மணிமுதல் சனீஸ்வரபகவானுக்கு அடியார்களின் தோஷ நிவர்த்திக்கான ஹோம வழிபாடுநடைபெறும். தொடர்ந்து சிவன், அமபாள், நாராயணர், ஆஞ்சநேய வழிபாடுகளும் இடம்பெறவுள்ளதாக குருமுதல்வர் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள் அறிவித்துள்ளார். (ம)

## மணமகள் தேவை

பிறந்த திகதி:-22.06.1991
குலம்:-சைவ வேளாளர்
நட்சத்திரம்:-சித்திரை 4ம் பாதம்
செவ்வாய்:-5ம் இடம்
கிரக பாவம்:-13 1/4
கல்வி:-G.C.E O/L
தொழில்:-சுயதொழில்
மாத வருமானம்:-40,000/-
உயரம்:-165CM
குறிப்பு:-சீதனம் எதிர்பார்க்கப்படாது
முன்னுரிமை:-விவசாய குடும்பம் வடமராட்சி பகுதிக்கு
**தொடர்பு:-0212263321, 0776082596**
(சி-3982)

## துயர் பகிர்கின்றோம்

### அமரர் நடராசா வள்ளிப்பிள்ளை



21.09.2018 அன்று இறைபதமடைந்த யா/நவாலி மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் திரு.ந.கோபாலகிருஸ்ணன் அவர்களின் பாசமிகு தாயார் அமரர் நடராசா வள்ளிப்பிள்ளை அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

(5807)

**பாடசாலைச் சமூகம்**
**யா/நவாலி மகா வித்தியாலயம், மானிப்பாய்**

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள இரும்பினால் ஆன நிலையுடன் கடைக் கதவு 7'X 9' உடன் விற்பனைக்கு உண்டு.
**0761711231**
(சி-3980)

## உடன் விற்பனைக்கு

யமகா வெளி இணைப்பு இயந்திரம் 25 HP, 30 HP (பெற்றோல்) மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு.
**0761711231**
(சி-3980)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர்
**திரு.செல்லையா இளங்கோ**
M.Ed (Hons), PGDEM (Merit), SLPS-I

எமது கல்லூரியின் அதிபர் **திரு.செல்லையா இளங்கோ** 2015.11.23 தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றிற்கு (SLPS-I) பதவி உயர்வு பெற்றுள்ளார். இவரை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல உயர்வுகள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

(சி-3979)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி**

## பாராட்டி

*Best Wishes* வாழ்த்துகின்றோம்



செல்வி **சகிலா சரவணை**

எமது பாடசாலையில் சேவையாற்றும் ஆசிரியை செல்வி சகிலா சரவணை அவர்கள் 26.04.2018 அன்று நீதிவான் திரு.மா.இளஞ்செழியன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையை முன்னிட்டு அவரைப் பாடசாலைச் சமூகம் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(5819)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்**

## 4ஆம் ஆண்டு நினைவேந்தல்

### அமரர் பாமதி-அமிர்தகுமார்



பூப்போல குறுஞ்சிரிப்பு
போன திசை எது?
வானத்து நட்சத்திரங்கள்
வற்றிய நாள் எது?
தமிழ் சொல்லும் குரல்
தகர்ந்த வழி எது?
மணக்கோலம் கண்டு
மகிழ்ந்திருந்த எமக்கு
பிணக்கோலம் காட்டிப்
பிழிந்த கதை எது?
ஆண்டு நாலு போனது
அழுகை இன்னும் தொடருது!
ஓம் சாந்தி

அன்னை மடியில்
13.09.1970
ஆண்டவன் அடியில்
28.09.2014

(5820)

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்

மறப்பதை நினைக்க
முடியாத குடும்பத்தினர்

# 'பாதுகாப்பானதோர் எதிர்காலத்தை நோக்கி' யாழில் ஆராய்ச்சி மாநாடு



படங்கள்:-சோபிகா, தாரணி

(யாழ்ப்பாணம்)

"பாதுகாப்பானதோர் எதிர்காலத்தைநோக்கி" என்ற தொனிப்பொருளில் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு நேற்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் கூவர் கலையரங்கில் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்திவரும் குறித்த சர்வதேச ஆராய்ச்சி மாநாடு நான்காவது தடவையாக விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சும், இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையின் அனுசரணையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன், விவசாய பிரதி அமைச்சர் இ.அங்கஜன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சர்வதேச நாடுகளில் இருந்து வருகை தந்துள்ள ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரி, கொழும்பு காலி முகத்திடல் பகுதியில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் குறித்த பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் நீர்த்தாரை வாகனங்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.



அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த பிக்குகள் மற்றும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-60)










## சீனாவிடமிருந்து இலங்கைக்கு எந்த அரசியல் அழுத்தமும் வராது

### அமைச்சர் மலிக் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் வர்த்தக உறவுகளே காணப்படுகின்றன. எதிர்காலத்திலும் இந்த நிலையே காணப்படும் என இலங்கையின் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் டைம்ஸ் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை-சீனா உறவுகள் குறித்து வெளியிட்டிருந்த செய்திகள் ஆதாரமற்றவை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் இலாபத்தில் இயங்குவதை உறுதி செய்வதற்காக அரசாங்கம் புதிய திட்டமொன்றை வகுத்துள்ளது.

மகிந்த அரசாங்கத்தின் கீழ் துறைமுகத்தை இலாபகரமானதாக்குவதற்கான திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை. அவர்கள் அதனை அமைத்து விட்டு அனைத்தும் தானாக நடைபெறும் என வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரங்களில் சீனாவின் பரந்துபட்ட பங்களிப்பு குறித்து நான் கவலையடையவில்லை எனவும் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

நாங்கள் இது குறித்து அதிகம் கவலையடைய வேண்டிய அவசியமில்லை என நான் கருதுகின்றேன், சீனாவுடனான எங்கள் உறவுகள் வெறுமனே வர்த்தக அடிப்படையிலானவை, எதிர்காலத்திலும் அவ்வாறான நிலையே காணப்படும். அரசியல் அழுத்தங்கள் எதுவும் காணப்படாது என நான் கருதுகின்றேன் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

## மனிதவுரிமை விவகாரம்

## கர்தினாலின் கருத்துக்கு அஸ்கிரிய பீடம் ஆதரவு

(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை தெரிவித்திருந்த கருத்து சரியானது எனவும், அதனை ஏற்றுக் கொள்வதாகவும் அஸ்கிரிய பிரிவின் சங்க சபை அறிவித்துள்ளது.

அப்பிரிவின் பதிவாளர் கலாநிதி மெதகம தம்மானந்த தேரர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமைகள் தொடர்பில் சமய ரீதியில் மட்டுமன்றி, உலக வரலாற்றிலும் முதலில் கருத்துத் தெரிவித்திருப்பவர் புத்தர் பெருமானே ஆவார். அதேபோன்று, கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை மனித உரிமைகள் தொடர்பில் கத்தோலிக்க மக்கள் சார்பாக கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மிகவும் தெளிவான முறையில் சர்வதேச ரீதியில் எமக்குள்ள சவால்கள் மற்றும் மனித உரிமைகளை முன்னிறுத்தி நாட்டிற்கு விடுக்கும் அழுத்தங்கள் என்பவற்றுக்கு பதிலளித்திருந்தார்.

மனித உரிமை என்பது சமயத்துக்குள் உள்ள ஒன்றாகும். இதனால், சமயம் இன்றி உரிமைகள் என தனியாகப் பிரித்து கருத்துத் தெரிவிக்க முடியாது எனவும் அஸ்கிரிய பதிவாளர் மேலும் தெரிவித்தார். . (இ-7)

## ஐ.நா அபிவிருத்தி நிதியத்துடன் இலங்கை புதிய உடன்படிக்கை

(நியூயோர்க்)

நாட்டின் சமூக அபிவிருத்தியில் நேரடித் தாக்கங்களைச் செலுத்தும் துறைகளில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிதியத்துடனான புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அமெரிக்க விஜயத்தின் போது நேற்று முன்தினம் பிற்பகல் நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

இதற்கமைய, சமூக முன்னேற்றத்திற்கான நிதியம் மற்றும் சமூக தொழில் முயற்சியாண்மைக்கான நிதியம் ஆகியவற்றை தாபித்தலுடன் தொடர்பான புதிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிதியத்தின் இலங்கைக்கான செயற்றிட்டங்களில் தனியார் துறையினரின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ள இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பனவின் பங்குபற்றலில் இவ் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி கலாநிதி ரொஹான் பெரேரா மற்றும் பிரதி நிரந்தர பிரதிநிதி சத்யா ரொட்ரிகோ ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

# ஆசியாவை ஆளப்போவது யார்?

## விறு... விறு இறுதியில் இந்தியா - பங்களாதேஷ் இன்று மோதல்

ஆசிய கிண்ண தொடரில் இன்று நடக்கும் இறுதியில் ஆறு முறை சம்பியனான இந்தியா, பங்களாதேஷை சந்திக்கிறது. இதில் சாதித்து இந்திய அணி கிண்ணத்துடன் நாடு திரும்புமா? அல்லது கடந்த கால தோல்விகளுக்கு பங்களாதேஷ் பரிகாரம் தேடுமா? என இரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

**3**

இந்தியா கடைசியாக பங்கேற்ற 5 தொடர்களின் இறுதியில் 3இல் கிண்ணம் வென்றது. 2013ல் மே.தீவுகளில் நடந்த முத்தரப்பு தொடர், 2016 ஆசியா கிண்ணம், 2018 'ரி20' முத்தரப்பு தொடரில் சாதித்த இந்தியா, 2014 'ரி20' உலக கிண்ணம், 2017 சம்பியன்ஸ் டிரொபியில் தோற்றது.

**7**

ஆசிய கிண்ண வரலாற்றில் இந்திய அணி இதுவரை அதிக பட்சமாக 6 முறை (1984, 1988, 1990-91, 1995, 2010, 2016) கிண்ணம் வென்றது. இன்று சாதித்தால் 7ஆவது முறையாக சம்பியன் ஆகலாம்.


ரோகித் சர்மா

இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி 2 வருடங்களுக்கு ஆசியாவின் ஜாம்பவானாக வலம் வரலாம்.

ஐக்கிய அரபு எமிரேட்சில் (யு.ஏ...,) ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இச் சுற்றுத் தொடர் குழு நிலை போட்டிகள், சுப்பர் 4 சுற்றுக்களை கடந்து இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

இதில் இன்று நடக்கும் இறுதியில் நடப்பு சம்பியன் இந்திய அணி, பங்களாதேஷை சந்திக்கிறது.

இத்தொடரில் லீக் சுற்றில் இதுவரை தோல்வியடையாமல் வலம் வந்தது இந்திய அணி. (4 வெற்றி, 1 'சமனிலை') கிண்ணம் வெல்லும் பட்சத்தில் சமீபத்திய இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் அடைந்த தோல்விக்கு ஆறுதலாக அமையலாம்.



வெற்றிக் கிண்ணம்

**துடுப்பாட்டம் நம்பிக்கை**

அணித் தலைவர் ஹோலி இல்லாத போதும் ரோகித் சர்மா தலைமையில் (269 ஓட்.,) அணி வெற்றி நடை போடுகிறது. இத்தொடரில் 2 சதம் அடித்த ஆரம்ப வீரர் ஷிகர் தவான் தான் (327) இந்திய துடுப்பாட்டத்தின் முதுகெலும்பாக திகழ்கிறார்.

அடுத்து 'நடுத்தர வரிசையில்' வரும் அம்பதி ராயுடுவும் (173) தன் பங்கிற்கு அசத்துகிறார். லோகேஷ் ராகுல் அரைச்சதம் அடித்து இருந்தாலும், இந்த ஆண்டு இலங்கையில் நடந்த முத்தரப்பு 'ரி20' தொடரின் இறுதியில் பங்களாதேசுக்கு எதிராக சிக்சர் அடித்து கிண்ணம் வென்று கொடுத்த தினேஷ் கார்த்திக் அணியில் தொடர்வார்.

அதேநேரம் 'சீனியர்' தோனி, கேதர் ஜாதவ் தொடர்ந்து தடுமாறுவது சற்று ஏமாற்றம் தருகிறது. இவர்களது துடுப்பாட்டத்தில் இன்று முன்னேற்றம் கிடைக்கும் என நம்பலாம்.

**பும்ரா வருகை**

கடந்த போட்டியில் ஓய்வு எடுத்த இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் பும்ரா (7 விக்.,), புவனேஷ்வர் (6) அணிக்கு திரும்புவது நல்ல செய்தி. 'சுழலில்' ஜடேஜா (7 விக்.,) குல்தீப் யாதவ் (7), சகால் (5) மீண்டும் இணைகிறார்கள்.

இவர்களுடன் 'பார்ட் டைம்' பந்துவீச்சாளர் கேதர் ஜாதவும் பந்தை சுழற்றுவது நம்பிக்கை தருகிறது.

**சபாஷ் முஷ்பிகுர்**

பங்களாதேஷ் அணியை பொறுத்த வரையில் தமிம் இக்பால் இல்லாதது, 'சீனியர்' சகலதுறை வீரர் சகிப் அல ஹசன் கைவிரல் காயத்தால் அவதிப்படுவது போன்றவை சிக்கல் தருகின்றன.


மஷ்ரபி மொர்டஷா

இருப்பினும் 'சுப்பர் 4' சுற்றில் முதலில் ஆப்கானிஸ்தான் அடுத்து சற்றும் எதிர்பாராமல் பாகிஸ்தானை வீழ்த்திய பங்களாதேஷ் அணி, ஆசிய கிண்ணத் தொடரில் (2012,16) மீண்டும் இறுதிக்கு முன்னேறியது.

துடுப்பாட்டத்தில் முஷ்பிகுரை (297 ஓட்.,) மட்டும் பெரிதும் நம்பியுள்ளது. இவருடன் மகமதுல்லாவும் (152) கைகொடுக்கிறார். மற்றபடி மொஹமட் மிதுன் (135), லிட்டன் தாஸ் சற்று உதவலாம்.

**முஸ்தபிசுர் பலம்**

பந்துவீச்சில் ஒரு நாள் கிரிக்கெட்டின் திறமை வாய்ந்த பந்து வீச்சாளராக உள்ள முஸ்த பிசுர் 'வேகம்' அணிக்கு பெரும் பலம். இதுவரை அதிக விக்கெட் சாய்த்த பந்து வீச்சாளர்களில் முதலிடத்தில் (8 விக்.,) உள்ள இவரது அசத்தலான பந்து வீச்சுத்தான் பங்களாதேஷ் அணி இறுதிக்கு முன்னேற முக்கிய காரணம். இவருக்கு அணித் தலைவர் மொர்டசா (5 விக்.,) 'அனுபவ' வேகப்பந்து வீச்சு உதவுகிறது. சுழலில் மெகிடி ஹசன் நம்பிக்கை கொடுக்கிறார்.

லீக் சுற்றில் பங்களாதேஷை 7 விக்கெட்டுக்களால் வீழ்த்திய நம்பிக்கையுடன் இருக்கிறது இந்தியா.

**10**

ஆசிய கிண்ணத் தொடரில்

இந்தியா, பங்களாதேஷ் அணிகள் 11 போட்டிகளில் மோதின. இதில் இந்தியா 10ல் வென்றது. பங்களாதேஷ் 1ல் மட்டும் வென்றது.

◆ ஒட்டுமொத்த ஒரு நாள் அரங்கில் இரு அணிகள் மோதிய 34 போட்டிகளில் இந்தியா 28ல் வென்றது. 5ல் பங்களாதேஷ் வெற்றி பெற்றது. 1 போட்டிக்கு முடிவில்லை.

**289**

பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஆசிய கிண்ணப் போட்டிகளில் 2012ல் இந்தியா 289/5 ஓட்டங்கள் (டாக்கா) எடுத்ததே அதிக பட்ச ஓட்டஎண்ணிக்கை.

# பாகிஸ்தான் 'அவுட்'

ஆசிய கிண்ண இறுதிக்கு பங்களாதேஷ் அணி முன்னேறியது. அரையிறுதி போன்ற 'சுப்பர் 4' போட்டியில் 37 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. பாகிஸ்தான் அணி பரிதாபமாக வெளியேறியது. இறுதியில் இந்தியா, பங்களாதேஷ் அணிகள் இன்று மோதுகின்றன.

ஐக்கிய அரபு எமிரேட்சில் (யு.ஏ.இ.,) 14 ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. அபுதாபியில் நடந்த 'சுப்பர் 4' போட்டியில் பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகள் மோதின.

**ஜுனைட் கான் அசத்தல்**

பங்களாதேஷ் அணிக்கு ஜுனைட் கான் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' செளமியா சர்க்கார் (0), லிட்டன் தாஸ் (6) வெளியேறினர். ஷஹீன் அப்ரிடி பந்தில் மொமினுல் ஹக் (5) போல்டானார். பங்களாதேஷ் ஒரு கட்டத்தில் 4.2 ஓவர்களில் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

**ரஹிம் அபாரம்**

பின் இணைந்த முஷ்பிகுர் ரஹிம், மொஹமட் மிதுன் ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது. ஷஹீன் அப்ரிடி, ஹசன் அலி, மொஹமட் நவாஸ் பந்தில் தலா ஒரு பவுண்டரி அடித்த ரஹிம், ஷதாப் கான் வீசிய 16ஆவது ஓவரில் 2 பவுண்டரிகள் விரட்டினார்.

அபாரமாக ஆடிய இவர், ஒருநாள் அரங்கில் தனது 30ஆவது அரைச்சதமடித்தார். மறுமுனையில் ஒத்துழைப்பு கொடுத்த மிதுன், ஹசன் அலி பந்தை பவுண்டரிக்கு அனுப்பி தன் பங்கிற்கு அரைச்சதத்தை பதிவு செய்தார்.

நான்காவது விக்கெட்டுக்காக 144 ஓட்டங்கள் சேர்த்தபோது ஹசன் அலி 'வேகத்தில்' மிதுன் (60) சிக்கினார். ஷதாப் கான் பந்தில் இம்ருல் கெய்ஸ் (9) வெளியேறினார். தொடர்ந்து அசத்திய ரஹிம் (99 ஓட்., 9 பவுண்டரி), ஷஹீன் அப்ரிடி 'வேகத்தில்' சதமடிக்கும் வாய்ப்பை இழந்து ஆட்டமிழந்தார். ஜுனைட் கான் 'வேகத்தில்' மெஹிடி ஹசன் மிராஸ் (12), மகமதுல்லா (25) ஆட்டமிழந்தனர். ருபெல் ஹொசைன் (1) 'ரன்-அவுட்' ஆனார். அணித் தலைவர் மொர்டசா (14) நிலைக்கவில்லை.

**144 ஓட்டங்கள்**

பங்களாதேஷின் முஷ்பிகுர் ரஹிம் - மொஹமட் மிதுன் ஜோடி 144 ஓட்டங்கள் சேர்த்தது. இதன்மூலம் ஆசிய கிண்ண வரலாற்றில் 4ஆவது விக்கெட்டுக்காக அதிக ஓட்டங்கள் சேர்த்த ஜோடிகள் பட்டியலில் 3ஆவது இடம் பிடித்தது. முதலிரண்டு இடங்களில் இந்தியாவின் ரெய்னா - தோனி (166 ஓட்., 2008, இடம் கராச்சி), பாகிஸ்தானின் மிஸ்பா உமர் அக்மல் (152 ஓட்., 2012, இடம் மிர்பூர்) ஜோடிகள் உள்ளன.

48.5 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 239 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஜுனைட் கான் 4, ஷஹீன் அப்ரிடி, ஹசன் அலி தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

**இமாம் அசத்தல்**

சுலப இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு பகர் ஜமான் (1) ஏமாற்றினார். முஷ்தபிசுர் ரஹ்மான் 'வேகத்தில்' பாபர் அசம் (1), அணித் தலைவர் சர்பராஸ் அகமட் (10) வெளியேறினர். பின் இணைந்த இமாம் உல் ஹக், சோயப் மலிக் ஜோடி நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தது. முஷ்தபிசுர் வீசிய 8வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரிகள் அடித்தார் மலிக். நான்காவது விக்கெட்டுக்காக 67 ஓட்டங்கள் சேர்த்தபோது ருபெல் ஹுசைன் பந்தில் மலிக் (30) ஆட்டமிழந்தார். ஷதாப் கான் (4) நிலைக்கவில்லை.



முஷ்பிகுர் ரஹீம்

**297 ஓட்.,**

இம்முறை பங்களாதேஷின் முஷ்பிகுர் ரஹிம், 4 போட்டியில் 297 ஓட்டங்கள் (144, 33, 21, 99) குவித்துள்ளார். இதன்மூலம் ஆசிய கிண்ண அரங்கில் ஒரு சீசனில் அதிக ஓட்டங்கள் எடுத்த பங்களாதேஷ் வீரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்தார்.

முன்னதாக கடந்த 2012ல் நடந்த இத்தொடரில் பங்களாதேஷின் தமிம் இக்பால், 4 போட்டியில் 253 ஓட்டங்கள் எடுத்திருந்தது அதிகபட்சமாக இருந்தது.

மூ தவிர இம்முறை அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் பட்டியலில் இந்திய அணித் தலைவர் ரோகித் சர்மாவை (269 ஓட்.,)

பொறுப்பாக ஆடிய இமாம் அரைச்சதம் கடந்தார். இவருக்கு ஆசிப் அலி ஒத்துழைப்பு கொடுக்க அணியின் ஓட்ட எண்ணிக்கை சீராக உயர்ந்தது.

இவ் இணை ஆறாவது விக்கெட்டுக்காக 71 ஓட்டங்கள் சேர்த்த போது மெஹிடி பந்தில் ஆசிப் (31) ஆட்டமிழந்தார். மகமதுல்லாவிடம் இமாம் (83) சரணடைந்தார். முஷ்தபிசுர் பந்தில் ஹசன் அலி (8), மொஹமட் நவாஸ் (8) ஆட்டமிழந்தனர்.

பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 37 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஜுனைட் (3), ஷஹீன் அப்ரிடி (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் முஷ்தபிசுர் ரஹ்மான் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதன்மூலம் பங்களாதேஷ் அணி 3ஆவது முறையாக ஆசிய கிண்ண இறுதிக்கு நுழைந்தது.

## 5 சுழல் வீரர்கள்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணியில் ஐந்து சுழற் பந்துவீச்சாளர்கள் இடம்பிடித்துள்ளனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஒக்டோபர் - நவம்பரில் இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து மூன்று வகை கிரிக்கெட் தொடரிலும் விளையாட இருக்கிறது. மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நவம்பர் 6ஆம் திகதி காலியில் தொடங்குகிறது.

இதற்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் கௌசல் சில்வா, டில்ருவன், ஹெரத், புஷ்பகுமார, சண்டகன் ஆகிய ஐந்து சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பிடித்துள்ளனர்.

# அறிவித்தல்

நவரட்ணம் சற்குணநாதன் ஆகிய நான் மற்றும் எனது சகோதர, சகோதரிகளால் இத்தால் மூலம் அறியத் தருவது என்னவென்றால் இலக்கம்-200, புன்னாலை வீதி, சங்கானையில் அமைந்துள்ள எங்களுக்கு சொந்தமான நிரஞ்சனா திரையரங்கு தொடர்பாக திருமதி. பிரபாலினி பராமநாதன் என்பவருக்கு விற்பனை, குத்தகை, ஈடு, உரிமை மாற்றம் போன்ற கொடுக்கல்-வாங்கலில் ஈடுபடவோ அல்லது எவ்வித ஆவணத்திலும் கையொப்பமிடவோ, உரிமை கொள்ளவோ, எவ்வித அதிகாரமும் உரிமையும் இல்லை என்று இத்தால் மூலம் அறியத் தருகின்றோம்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் கீழ்க்காணும் விலாசத்துடன் அல்லது தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளவும்.

**ந.சற்குணநாதன்**
**16/1, கிளிப்போர்ட் பிளேஸ்,**
**கொழும்பு. 071 278 6519**

(5787)

# தாய்நாட்டை நேசிக்கும் தலைவர் என்பதை ஜனாதிபதி மைத்திரி நிரூபித்துள்ளார்- மகிந்த

(கொழும்பு)

தாய்நாட்டை நேசிக்கும் தலைவர் என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் நிரூபித்திருப்பதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையானது ஆழமானது என்பதுடன், நாட்டை எந்தளவுக்கு அவர் நேசிக்கிறார் என்பதை வெளிப்படையாக எடுத்துக்காட்டியிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். அவருடைய இந்த உரை தொடர்பில் இலங்கையர்கள் அனைவரும் பெருமைகொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மகிந்த சமரசிங்க இதனைத் தெரிவித்தார். இலங்கை சுயாதீனமான நாடு. யுத்தம் முடிந்து 10 வருடங்கள் ஆகும் நிலையில் நல்லிணக்கம் நோக்கிய எமது பயணத்தை இலங்கையர் என்ற ரீதியில் தொடர்வதற்கு அனுமதிக்குமாறு சர்வதேசத்திடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். தேவையற்ற அழுத்தங்களை எம்மீது திணிக்க வேண்டாம் என்பதையும் ஜனாதிபதி சர்வதேசத்திடம் சுட்டிக்காட்டியிருப்பதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரி வித்தார். கடந்த மூன்றரை வருடங்களாக இலங் கையை ஜனாதிபதி காட்டிக் கொடுத்து வருவதாகவும், ஜெனீவாவில் பிரேரணை கள் நிறைவேற்றப் பட்டதன் ஊடாக இலங்கை யில் சர்வ தேசத் தின் தலையீடுகளுக்கு இட மளித்திருப்பதாகவும்; அரச தலைவர் என்ற ரீதியில் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும் என்றும் பல்வேறு கருத்துக்களும் குற்றச் சாட்டுக்களும் சுமத்தப்பட்டன. எனினும் தாய்நாட்டை நேசிக்கும் தலைவர் என்பதை ஜனாதிபதி தனது உரையின் மூலம் நிரூபித் துள்ளார். இதற்கு அப்பால் எவரும் கருத்துத் தெரிவிக்க முடியாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆன்ம சங்கமம்

ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மசங்கமம் நிகழ்வு இன்று 28 ஆம் திகதி வெள் ளிக்கிழமை மாலை 4.30 மணிமுதல் 6.30 மணிவரை யாழ்ப்பாணம் இராசா வின் தோட்டம் இல. 130/9. இல் இடம் பெறும்.

ஆன்மீகவுரையை சுவாமி அக்ஷராத் மானந்தஜி மகராஜ் வழங்குவார். (இ)

# வட இலங்கைச் சங்கீத சபை பரீட்சைகள் - 2019

வட இலங்கைச் சங்கீத சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பப் படிவங்கள் 01.10.2018 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத் திகதி 31.10.2018 ஆகும். விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல், வங்கிப் படிவம் உட்பட 100/= ரூபா மட்டும்.

இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் பரீட்சைக் கட்டணத்தை சபையினால் வழங்கப்படும் படிவத்தையும் வங்கியினால் வழங்கப்படும் படிவத்தையும் பூரணப்படுத்தி அதற்குரிய பணத்தினைச் செலுத்தி வங்கியினால் வழங்கப்படும் படிவம் ஒன்றை விண்ணப்பத்துடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

யாழ்.மாவட்ட தேர்வுநாடிகள் தமக்கு வேண்டிய விண்ணப்பப்படிவங்களை **வட இலங்கைச் சங்கீத சபை, கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம், சுன்னாகம்** எனும் முகவரியில் மட்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

சி.மானிக்கராஜா
யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரும்
வட இலங்கைச் சங்கீத சபை உப தலைவரும்.

(சி/3974)

# சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்
30
08
1941



மறைவு
08
08
2018

## அமரர். செல்லையா மாணிக்கராசா

(இளைப்பாறிய பொலிஸ் பரிசோதகர், அகில இலங்கை சமாதான நீதவான் மற்றும் போசகரும் முன்னாள் பொருளாளரும், வவுனியா குருமன்காடு காளியம்மன் தேவஸ்தானம்)

**அவர்களின் சபிண்டீகரண நிகழ்வு இன்று 28.09.2018 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.**

கரணவாய் கிழக்கு.
கரவெட்டி. 077 442 6025

(சி/3950)

தகவல்:
மனைவி-மா.சரஸ்வதி

# இந்து பௌத்த கலாசார பேரவையின் வடமாகாணத்திற்கான இரண்டாம் மொழி கற்கை நிலையங்களுக்கு ஒருங்கிணைப்பாளர் (co-ordinater) தேவை

வயது 30-45
கல்வித் தகைமை G.C.E.(A/L) சித்தி
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
குறிப்பு:- கொழும்பில் தலைமைச் செயலகத்திலும் வடமாகாணத்திலுள்ள கற்கை நிலையங்களுக்கும் சென்று பணியாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
விண்ணப்ப முடிவுத் திகதி:- ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி (05.10.2018)
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய

முகவரி:- Secretary,
Hindu Buddhist Cultural Association
No,172 A 104, Hulftsdorp street,
colombo-12
e-mail-mtsintlegalassociation@gmail.com

(5812)

# இராசி பலன்

**மீனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**மேடம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாய் இருப்பீர்கள்.

**இடபம்:** தொழில் நலன் கருதி பயணங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்:** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், உறவினர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர்; வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது. செவ் | | | |
| சனி | | .குரு. சுக் | சூரி. புத |

சந்திராஷ்டமம்
சித்திரை

**28.09.2018**
புரட்டாதி 12, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திருதியை முற்பகல் 8.48 மணிவரை
பரணி பின்னிரவு 3.09 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்
மகா பரணி

**வளவன்**

**கடகம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், அந்நியர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மகரம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப காரியச் செலவுகள் கூடும், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்

**சிம்மம்:** தித்திக்கும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** செய்தொழில் முன்னேற்றம் கருதி பெரிதும் பாடுபடுவீர்கள், மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**துலாம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, எடுத்த காரியத்தில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**கன்னி:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டியநாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பிரயான பயமுண்டு.

# இருள் சூழ்ந்துள்ள கிராமங்களுக்கு ஒளியேற்றுங்கள்-மக்கள் கோரிக்கை

(பொற்பதி)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள கிராமங்களில் பிரதேசசபையினால் பொருத்தப்பட்ட வீதி மின்விளக்குகளில் பெரும்பாலானவை ஒளிராமலும் பொருத்தப்பட்ட நிலையிலிருந்து மாறியும் காணப்படுகின்றன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது, பருத்தித்துறை பிரதேச சபையினரால் வடமராட்சி கிழக்கு கிராமங்களுக்கு ஒரு சில வருடங்களுக்கு முன்பு வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டன.

ஆனால் இவை பொருத்தப்பட்டதற்கு பின்னர் இன்று வரைக்கும் பழுதடைந்த மின்விளக்குகளைச் சீர் செய்வதற்கு எந்தவிதமான நடவடிக்கையினையும் உரிய தரப்பினர் மேற்கொள்ளவில்லையென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனைவிட இன்னும் பல வீதிகளுக்கு மின்விளக்குகளின் தேவை உள்ளதாகவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அநேகமான பிரதேசசபைகள்,நகரசபைகள், இருள் சூழ்ந்த கிராமங்கள் உள்ள இடங்களில் வீதி மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கையில் தீவிரம் காட்டும் நிலையில் பருத்தித்துறை பிரதேச சபையினர் மட்டும் ஏற்கனவே பொருத்தப்பட்டு செயலிழந்து காணப்படும் மின் விளக்குகளைக்கூட இதுவரைக்கும் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்காதது மன வேதனையளிப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே மாரிகாலம் மழை வருவதற்கு முன்னர் இருள் சூழ்ந்துள்ள வடமராட்சி கிழக்கின் கிராமங்களிலுள்ள சரியான இடங்களுக்கு வீதி மின் விளக்குகளைப் பொருத்த பிரதேச சபையுடன் தொடர்புடைய அனைவரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-64)

# பாட நெறியைப் பூர்த்தி செய்ய விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சினால் தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சி இறுதிப்பரீட்சை, பழைய பாடவிதானத்தின் கீழ் ஆசிரியர் கல்லூரிப் பரீட்சை மற்றும் பிரின்செட் ஆசிரியர் பயிற்சி பரீட்சையினைப் பூர்த்தி செய்ய முடியாத ஆசிரியர்களுக்காக சலுகை வழங்குதல் அடிப்படையில் விசேட மதிப்பீட்டு முறையின் கீழ் உரிய பாட நெறியைப் பூர்த்தி செய்வதற்கு வாய்ப்பினை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவத்தை கல்வி அமைச்சின் இணையத்தளம் மூலம் பார்வையிட முடியும்.

அத்துடன் வலயக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும். 2018.10.31 ஆம் திகதி இதற்கான இறுதித் திகதியாகும். விண்ணப்பப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி தங்களது சேவையாற்றும் திணைக்களத் தலைவரூடாக் கல்விப்பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இணையத்தளம் மூலம் பெற்றுக் கொண்ட இவ் அறிவித்தல் குறித்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தெரிவித் துள்ளார். சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இதுவிடயம் தொடர்பாக கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி. கௌரி பாலகிருஷ்ணன் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் ஓய்வு நிலை ஆசிரியரும், சமூக சேவையாளருமாவார். (இ)

# வல்லைவெளியில் விபத்தில் சிக்கிய ஒருவருக்கு தலையில் படுகாயம் ஒருவருக்கு கைமுறிந்தது

(கரணவாய்)

வல்லைவெளிப் பகுதியிலுள்ள முனியப்பர் கோவிலுக்கு அருகில் கோண்டாவிலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர் பிள்ளையாரை தரிசிப்பதற்காக மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வீதியைக் கடக்க முற்பட்டபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் தலைப்பகுதியில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் கை முறிந்த நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் 26 ஆம் திகதி காலை இடம்பெற்றுள்ளது. (இ-60)

# ஆண்டு நிறைவும் சிறப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 7 ஆவது ஆண்டு நிறைவு நாள் விழாவும் சிறப்பு நிகழ்வுகளும் நாளை மறுதினம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் முதியோர் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெறும். (இ




# மூத்த பிரஜைகள், சிறுவர்கள் கௌரவிப்பு விழா தெல்லியூரில்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஜே/230 செல்வாபுரம் மூத்த பிரஜைகள் சங்கமும் கலைவாணி சனசமூகநிலையமும் இணைந்து நடத்தும் மூத்த பிரஜைகள், சிறுவர்கள் கௌரவிப்பு விழா எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் மகாஜனக் கல்லூரி துரையப்பா மண்டபத்தில் மூத்த பிரஜைகள் சங்கத்தலைவர் வீ.தவராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச செயலர் ச.சிவசிறி, வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேசசபை செயலர் இ.பகீரதன், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. சிவயோகம் செல்வவிநாயகம், தந்தை செல்வாபுர கிராம உத்தியோத்தர் கா. துவாகரன், தெல்லிப்பழை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் த. ரஜீந்தன், தெல்லப்பழை பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் தி.கிருஸ்ணகுமார் ஆகியோரும்,

கௌரவ விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியா சாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் எஸ்.ரி.எஸ்.சந்திரகுமார், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சிவதாசன், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், மகாஜனக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன், தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஏ.ஏ.சி. சுமனசேகர ஆகியோரும்கலந்துகொள்வர். (இ

# பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி.ரி.நவரட்ணம் தலைமையில் நடைபெறும். இதில் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் சி.தவலிங்கம் கலந்து கொள்வார். பரிசில்களை தேசிய சேமிப்பு வங்கியின் நெல்லியடி கிளை முகாமையாளர் திருமதி.பாமா தவலிங்கம் வழங்குவார். (இ-60)

# அழகுசாதனப் பொருட்கள் வடிவமைத்தல் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதா தாவள நிலையத்தினால் டிஸ்வோஸ் தயாரிப்பு செயலமர்வு இன்றும் றெஜிபோமிலான அழகு சாதனப் பொருட்களைத் தயாரித்தல் செயலமர்வு 02.10.2018, 03.10.2018; 04.10.2018 ஆகிய தினங்களில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 09.30 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும்.

இப்பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்கு விருப்ப முள்ளவர்கள் அத்தினங்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

# சர்வதேச முதியோர் வாரம்

(சாவகச்சேரி)

சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு கைதடி சாந்தி நிலையத்தில் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை முதியோர் வார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முதியோர்களுக்கான கலை நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகள், கௌரவிப்பு நிகழ்வுகள் ஆகியன இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (7-30)

# இலவச சித்த மருந்தகம் மீண்டும் திறக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர மத்தியில் இயங்கும் யாழ்.மாநகர சபையின் இலவச சித்த மருந்தகம் திருத்த வேலைகளுக்காக தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மீளவும் திறக்கப்பட்டு நோயாளர்களுக்கான சேவையை ஆரம்பித்துள்ளது. (இ)

# "நீர் நெருக்கடி மற்றும் சமூகப் பொறுப்பு" தொடர்பில் யாழில் இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனம் "நீர் நெருக்கடி மற்றும் சமூகப் பொறுப்பு" தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இக் கலந்துரையாடலில் பேராசிரியர் முருகேசு சிவபாலன் கருத்துரைகளை வழங்குவார்.

பேராசிரியர் முருகேசு சிவபாலன் பேராதனைப் பல்கலைக்கழக்கத்தின் பொறியியல் பட்டதாரியா வார். தற்போது வட அமெரிக்காவிலுள்ள இலினேய் பல் கலைக் கழகத்தின் நீரியியல் துறையின் பேராசிரியரான இவர் நீர் ஆராய்ச்சியில் பல உயர் விருதுகளைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஒரு மகிழ்வுப் பகிர்வு நாளை

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் ஆதரவில் இந்திய சாகித்ய அக்கடமியின் பிரேம்சந்த் தகைசார் விருது பெறும் தமிழ், ஆங்கில எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தனுடன் ஒரு மகிழ்வுப் பகிர்வு நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் இடம்பெறும். (இ



வடமாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் யா/கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு வழங்கிய உறுதிமொழிக்கு அமைய 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கதிரைகளைப் பாடசாலைச் சமூகத்திடம் கையளிப்பதையும் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தொல்புரம் சர்வோதய நிலையம் நடாத்தும் மனவளக்கலை யோகா பற்றிய அறிமுகவுரை நிகழ்வு**

**இடம்:-** தொல்புரம் சர்வோதய நிலையம்

**காலம்:-** 30.09.2018 (ஞாயிற்றுக்கிழமை)

**நேரம்:-** பிற்பகல் 3.00 மணி

**தலைமையுரை:-** திருமதி. நாச்சியார் செல்வநாயகம்
(யாழ்/ பல்கலைக்கழக நுண்கலை/ இந்து நாகரிகத்துறை முன்னாள் தலைவர்)

**அறிமுகவுரை:-** மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல்
(தலைவர், யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

**ஆசியுரை:-** அருள்நிதி த.குழந்தைவேல்
(உபதலைவர், யாழ். மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

**பயிற்சிகள் பற்றிய அறிமுகவுரை:-** மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி மு.விஜயலக்சுமி (தமிழ்நாடு, இந்தியா)

மற்றும்

**யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் மனவளக்கலை பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.**

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் பேராசிரியை அருள்நிதி விஜயலக்சுமி அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். திங்கள் முதல் வெள்ளி வரை பகல் வேளைகளிலும் பயிற்சிகள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

- ❖ எளியமுறை உடற்பயிற்சிகள்
- ❖ எளியமுறை தியானப் பயிற்சிகள்
- ❖ காயகல்பப் பயிற்சிகள்
- ❖ அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்:- 29.09.2018 தொடக்கம் 05.10.2018 வரை
நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை

**அகத்தாய்வு 2 ஆம் நிலை 29.09.2018 சனி மற்றும் 30.09.2018 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.**

**பயிற்சிகளை வழங்குபவர்கள் மனவளக்கலை பேராசிரியை விஜயலக்சுமி துணைப் பேராசிரியர் த.நந்தகுமரன்**

**மனவளக்கலை யோகாப் பயிற்சிகளைப் பயின்று பயன்பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல. 81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 021 222 2772**

(சி-3973)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, ஆதன இல. 115/3 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் அ.தங்கராசாவின் பராயமற்ற பிள்ளைகள் யோகேந்திரன், விஜயேந்திரன், தயாளன், உதயன், ஜெகன், சுகந்தன் என்னும் பெயரில் ஆதன வரிப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், சிவியா தெருவைச் சேர்ந்த சின்னவன் வாரி என்பவர் பிரசித்த நொத்தாரிசு வெ.யுவக்கீம்பிள்ளை முகதாவில் 1932.02.17 ஆம் திகதியிட்டு 16659 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலம் பண்டத்தரிப்பு இராமு அப்புக்குட்டி பெண் முத்துப்பிள்ளைக்கு அறுதியாக விற்றுள்ளார். பிரசித்த நொத்தாரிசு ஸ்ரனிஸ்லஸ் செலஸ்ரின் முகதாவில் 2018.07.12 ஆம் திகதியிட்டு 680 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதியில் தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த தங்கராஜா கைம்பெண் பரிமளமும் அவரது பிள்ளைகளான தங்கராஜா யோகேந்திரன், தங்கராஜா விஜயேந்திரன், தங்கராஜா ஜெகன், தங்கராஜா உதயன், தங்கராஜா தயாளன், தங்கராஜா சுகந்தன் ஆகியோர் குறித்த ஆதனம் தங்கராஜா கைம்பெண் பரிமளத்தின் கணவரும் ஏனையவர்களின் பிதாவுமாகிய அப்புக்குட்டி தங்கராஜாவின் பெற்றோரான காலஞ்சென்ற இராமு அப்புக்குட்டி பெண் முத்துப்பிள்ளை என்பவரின் பெயரில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி சொந்தமும் ஆட்சியும் உரிமையுமாயிருந்து அவர்கள் விருப்பாவணம் இன்றி காலம் சென்றமையைத் தொடர்ந்து அவர்களது ஒரே மகனான 1 ஆம் பேரின் கணவரான அப்புக்குட்டி தங்கராஜாவினை வந்தடைந்ததென்றும் குறித்த அப்புக்குட்டி தங்கராஜாவும் விருப்பாவணமின்றி இறக்க குறித்த ஆதனம் அவரின் பிள்ளைகளான யோகேந்திரன், விஜயேந்திரன், தயாளன், உதயன், ஜெகன், சுகந்தன் ஆகியோருக்கு வந்தடைந்ததென்று வெளிப்படுத்தி கைம்பெண் இராசமணி என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி, கோவிற்பற்று, சிவியாதெரு இறை ''புங்கடியிற்புலம்'' இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வல்லிபுரம் சிவராஜா அவர்களின் வரைபட இலக்கம் 6358/10.07.2018 இல் துண்டு- 1 எனக் காட்டப்பட்ட நில.பர 2 குளி 14.17 ஆகும்.

கிழக்கு:- தம்பிப்பிள்ளை மணிவண்ணனினதும் நாகலிங்கம் றாயூவினதும் ஆதனம்
வடக்கு:- றெயில் றோட்
மேற்கு:- சின்னத்துரை பெண் சரஸ்வதியின் ஆதனம்
தெற்கு:- விநாயகமூர்த்தி மங்கயற்கரசியின் ஆதனம்

தற்போது இவ்வாதனத்தை நாகமுத்து கைம்பெண் இராசமணி தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது நாகமுத்து கைம்பெண் இராசமணி என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர் மாநகர சபை**
**எனது இல:- கச்சேரி கிழக்கு ஒழுங்கை**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்.**

(3976)

## காயத்திரி திருமாங்கல்ய சேவை

திருமணம், பொருத்தம் பார்த்தல், நிச்சயித்தல், குறிப்பு எழுதுதல் போன்ற சேவைகளை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

பதிவுகள் இலவசம்.

தொடர்புகளுக்கு:- 076 835 1932, 021 223 2222 உரும்பிராய்.

(5688)

## வேலைக்கு ஆள் தேவை

தீபன் கிறியேசன் ஸ்ரூடியோ மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். வீடியோ எடிட்டிங் தெரிந்தவர்கள் அல்லது பழக விரும்புவோர் கீழ்வரும் எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.**

**தொடர்பு: 0776216741, 0752278354**

# சேவை நயப்பு வாழ்த்துக்கள்

இன்று 28.09.2018 ஓய்வுபெறும் எமது ஆசிரியர்

## திருமதி. விமலாதேவி சர்வானந்தா



அவர்களை ஓய்வுக் காலத்தில் தேக ஆரோக்கியத்துடன் குடும்ப நல்வாழ்வில் இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

**சேவை**
யா/ மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் 26.03.1990- 14.02.2010
யா/ கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் 15.02.2010- 07.04.2015
யா/ கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலை 08.04.2015- 28.09.2018

**வாழ்த்துவோர்:**
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்,
யா/ கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலை.

(5811)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 11<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L/அரச தொழில்<br>தொ.இ: B/527 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 39 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/1358 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 39 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/541 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 58 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/1362 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 55 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/553 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 48<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/1376 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 31<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/3913 | பிறப்பு: 1982 RC<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 33 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/1377 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்று!

# மூன்று அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் அடையாள உணவு தவிர்ப்பு

## மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு





(மன்னார்)

அநுராதபுர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது உள்ளிட்ட மூன்று அம்சக் கோரிக் கைகளை முன்வைத்து மன்னாரில் அடையாள உணவு தவிர்ப்பு போரா ட்டம் மேற்கொள்ளப்பட்டு ள்ளது.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் முற்பகல் 10 மணியளவில் இந்த போரா ட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மதியரசன் சுலக்ஷன், இராசதுரை திருவருள், சிவசுப்பிரமணியம் தில்லைராஜ், இராசா பல்லவன் தபோரூபன், இராசதுரை ஜெகன், சூரிய காந்தி ஜெயச்சந்திரன், கிளி நொச்சியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் சிவசீலன், வவு னியாவைச் சேர்ந்த தங்க வேல் நிமலன் ஆகிய 8 அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அரசியல் கைதிகள் உள்ளிட்ட ஏனைய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு , கிழக்கில் தொடர் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கைதிகளை தமிழ் அரசியல் தலைமைகள் உள்ளிட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் நேரடியாக சென்று பார்வையிட்டு வருகின்றன.

அத்துடன் போராட்டத்தில் ஈடு பட்டுவரும் அரசியல் கைதிகள் உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில் சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. போராட்டத்தில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் உறுப்பினர்கள், சர்வமத தலைவர்கள், அரசியல் கைதிகளின் உற வினர்கள், மன்னார் நகர சபை தலைவர் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

போராட்ட களத்திற்கு வருகை தந்த மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்ராஜிடம் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்தந்தை ஞானப்பிரகாசத்தினால் மகஜர் கையளிக்கப்பட்டது. (2)




## வங்கித் திறப்புவிழா

மல்லாவி பிரதான வீதியில் சிவன்கோவிலுக்கு முன்பாக அமைந்துள்ள இலங்கை வங்கி மல்லாவிக் கிளையின் புதிய வங்கி வளாகத் திறப்பு விழா எதிர் வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் இலங்கை வழங்கியின் பிரதிப் பொது முகாமையாளரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இக் கிளையானது வாடிக்கையாளரின் நலன் கருதி , நவீன தொழில்நுட்ப இயந்திர வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. (2)

## வவுனியாவில் புனர்வாழ்வு பெற்ற மூவர் சமூகத்துடன் இணைவு



(குருமன்காடு)

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த ஒரு வருடமாக புனர் வாழ்வு பெற்று வந்த மூவர் நேற்று காலை சமூகத்துடன் இணைத்துவைக்கும் நிகழ்வு பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையப் பொறுப்பதிகாரி கப்டன் எதிரிசங்கவின் தலைமையில் இடம்பெற்றது.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணிமனையகத்தினால் கடந்த பல வருடங்களாக சிறையிலிருந்து புனர்வாழ்வு நிலை யத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டு ஒருவருடம் புனர்வா ழ்வு அளிக்கப்பட்டு சமூகத் துடன் இணைந்துகொண்ட ஜீ. புஸ்பராஜ் (தலவாக்கலை), கமலநாதன் (திருகோண மலை), புருஷோத்மன் (யாழ் ப்பாணம்) ஆகிய மூன்று பேருமே உறவினர்களிடம் இணைத்து வைக்கப்பட்ட னர். (2-281-250)

## குருந்தூர் மலை விவகாரம்

# தொல்பொருள் திணைக்களம் நகர்த்தல் பத்திரம் ஊடாக வழக்கு விசாரணை

## மீண்டும் 01.10.2018 இற்கு தவணை

முல்லைத்தீவு குமுழமுனை குருந்தூர் மலை தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் முன்வைத்த வழக்கு விடயம் நேற்று தொல்பொருள் திணைக்களத்தின் சட்டவாளர்கள் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் முன் னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட தரப்பாக தெரிவித்து பௌத்த பிக்குகள் இருவரும் அவர் கள் சட்டத்தரணி மூவரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். அவர்கள் தாங்கள் வாதத்தின் அடிப்படையில் குருந்தூர் மலை வர்த்த மானி மூலம் அறிவிக்கப் பட்ட இடம் என்றும் பௌத்த ஆலயம் ஒன்று இருந்தது தொடர்பாகவும் எடுத்துரை த்துள்ளார்கள். தற்போது புத்த ஆலயம் அமைப்பதற்கு வரவில்லை என்றும் இடத்தினை ஆராய்ச்சி செய்வதற்காக வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

இது விடயம் குறித்து மூத்த சட்டத்தரணி ரி.பரஞ்சோதி மன் றில் குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் பொலிஸாரால் தொடர ப்பட்ட வழக்கு தொடர்பிலும் எடுத்து ரைத்துள்ளார்கள். அதன் பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

கடந்த 13.09.18 அன்று நீதிமன்றத்தினால் குருந் தூர் மலைக்கு மக்கள் சென்று வரலாம் என்றும் அங்கு எந்தவித மாற்றங்களும் செய்யமுடியாது என இடைக்கால உத்தரவினை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவானது மறு தவணை 01.10.18 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அன்றைய தவணையில் வழக்கு தாக்கல் செய்து அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்த பொலிஸார் பாதிக் கப் பட்டவர்களிடம் இருந்தும் சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்தும் ஒரு முழுமை யான அறிக்கை தயாரிக்கப் பட்டு மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது.

இதன் பின்னர் தற்காலிக உத்தரவினை தளர்த்துவதா அல்லது நீடிப்பதா என நீதிமன்றம் முடிவெடுக்கும் என்று நீதிபதியால் தெரிவி க்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த வழக்கு 01.10.18 ஆம் திகதி குறுகிய தவணை இடப்பட்டு திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.(2-9)

## தியாக தீபம் திலீபனுக்கு கள்ளப்பாட்டில் அஞ்சலி



தியாகச்சுடர் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத் தீவு - கள்ளப்பாடு வடக்கு பகுதியிலு ள்ள வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது. (2-281)

# சிகை அலங்கரிப்புக்கு கட்டண அறவீடு அதிகரிப்பு

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் சிகை அலங்கரிப்பு உட்பட அழககச் செயற்பாடுகளுக்காக புதிய கட்டண அறவீடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது என வவுனியா மாவட்ட அழகக சங்கத்தின் தலைவர் விவேகானந்தன் அருண் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

பொருளாதார ஏற்றத்திற்கு ஏற்ப அழகக சங்கம் தமது அங்கத்தர்களின் ஆலோசனைப்படி கட்டண அதிகரிப்பொன்றை செய்துள்ளது. சிரமங்களை ஏற்படுத்தும் வகையில் அதிகரிப்பு இருக்காது என நாம் எதிர்பார்ப்பதுடன் தற்போது ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றத்தின் அடிப்படையில் இதனை அதிகரிக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இதன் பிரகாரம் அனைத்து அழககங்களிலும் குறித்த விலைப்பட்டியல் அதிகரிப்பை வாடிக்கையாளர்கள் பார்வையிட முடியும் என்பதுடன் அழககங்களின் சேவை நேரங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

## ஆசிரிய கிராமங்கள் அமைப்பு

# குடியிருப்புக்கான விண்ணப்பங்கள் அதிபர், ஆசிரியர்களிடமிருந்து கோரல்

(மல்லாவி )

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் ஏற்பாட்டிலும் மத்திய கல்வி அமைச்சின் ஒழுங்குபடுத்தலுடனும் நாடு தழுவிய ரீதியில் உள்ள 25, மாவட்டங்களிலும் 25, ஆசிரிய கிராமங்கள் அமைக்கப்படவுள்ளதாக மத்திய கல்வி அமைச்சின் செயலாளரினால் இந்த குடியிருப்புக்கான விண்ணப்பங்களை மாகாண கல்வி திணைக்களங்கள் ஊடாக பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்த ஆசிரியர் கிராம குடியிருப்பு திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு தகுதி நிலையாக விண்ணப்பதாரி வசிக்கும் மாவட்டத்தில் நிரந்தர வதிவிட உரிமையைக் கொண்டுள்ளதுடன், அரசாங்க அனுமதி பெற்ற பாடசாலைகளில் நிரந்தர நியமனம் பெற்று கடமையாற்றி வரும் 60, வயதுக் குட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன், இலங்கையில் எப்பாகத்திலும் விண்ணப்பதாரிக்கோ அல்லது வாழ்க்கைத் துணைக்கோ காணியற்ற நிலையில் வீடு இல்லாத அதிபர், ஆசிரியர்கள் இந்த வீட்டுத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்த வீட்டுத்திட்டத்தில் காணி அரசாங்கத்தினால் வழங்கப்படுவதுடன் வீடு அமைப்பதற்கு 05 வீத வட்டிக்கு 05 இலட்சம் ரூபா பணம் கடனடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

இந்த திட்டத்தில் அமைக்கப்படவுள்ள ஒவ்வொரு ஆசிரியர் கிராமத்திலும் 25 வீடுகள் அமைக்கப்படுவதுடன், ஏனைய அனைத்து பொது வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

இந்த குடியிருப்பு திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் அதிபர், ஆசிரியர்கள், தாங்கள் கடமையாற்றி வரும் வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பெற்று பூரணப்படுத்தி அதனை வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் வலயக் கல்வித் திணைக்களம் ஊடாக மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறும் மத்திய கல்வி அமைச்சின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# தமிழ் மக்கள் தினமும் கண்ணீருடன் வாழ்கின்றார்கள்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கவலை





(மன்னார்)

நாட்டல் இடம்பெற்று முடிந்த கொடிய யுத்தத்தினால் ஆயிரக்கணக்கானவர்கள், தங்கள் பிள்ளைகள், பெற்றோர் ஆகியோரை இழ ந்து கண்ணீா வடித்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

ஆதலால் எமது தமிழ் மக்கள் தினமும் எங்கேயோ ஒரு மூலையில் கண்ணீருடன் தான் வாழ்கின்றார்கள் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

மன்னார் சித்தி விநாயகர் இந்து கல்லூரி தேசிய பாடசாலையில் கல்வியமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும்வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப பீடத்தின் கட்டடம், வகுப்பறை கட்டடம், பெண் ஆசிரியர்களுக்கான விடுதிக் கட்டடம் ஆகியவற்றின் திறப்பு விழா நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் ரி.தனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த கட்டடங்களை மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஸ்ணன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

தங்களுடைய பிள்ளைகளை காணவில்லை என தாய்மார்களும் தங்களது பிள்ளைகள் சிறைகளில் இருக்கின்றனர், நீண்டகாலம் கடந்த நிலையிலும் விடுதலை செய்யப்படவில்லை எனவும் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது இன்றுடன் 600 நாட்கள் கடந்து 5 மாவட்டங்களில் பெற்றோர்கள் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட தங்களுடைய பிள்ளைகள் இருக்கின்றார்களா? இல்லையா? என்று தெரியாமல் வீதிகளில் இருகின்றார்கள்.

அநுராதபுர சிறைச்சாலைகளில் 10 தொடக்கம் 24 வருடங்கள் சிறையில் இருக்கின்றவர்கள் எப்போது விடுதலையாகி வெளியே வருவார்கள் என்று இருக்கின்றார்கள். இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் யுத்த காலத்திலே தங்கள் பிள்ளைகளை. பெற்றோர்களை இழந்து கண்ணீர் வடித்து கொண்டு இருக்கின்றார்கள்.

இவ்வாறான கொடிய யுத்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட சமூகம் என்ற வகையில் அவ் வீழ்ச்சியில் இருந்து மீண்டெழ வேண்டும் என்றால் கல்வியின் மூலம் துறைசார்ந்த நிபுணர்களாக வருவதன் மூலமே யுத்தவடுக்களில் இருந்து நிவர்த்தி செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் துறைசார்ந்த நிபுணர்களாக வருவது மட்டும் இன்றி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு எமது சேவையை வழங்க முன்வர வேண்டும் என மேலும் தெரிவித்தார். (2)




# தபால் சேவைகள் விழிப்புணர்வு செயற்றிட்டம்; கிளிநொச்சியில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்






(கிளிநொச்சி)

கிளிநொச்சி தபால் நிலைய ஊழியர்களின் ஏற்பாட்டில் தபால் சேவைகள் விழிப்புணர்வு செயற்றிட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் கிளிநொச்சி நகரில் முன்னெடுக்கப்பட்டது.

அஞ்சல் அதிபர் உள்ளிட்ட பலரின் பங்குபற்றலுடன் குறித்த விழிப்புணர்வு செயற்றிட்டம் இடம்பெற்றது.

இதன் போது முதல் தபால் சேவைகள் தொடர்பில் மக்கள், மாணவர்கள் ஆகியோருக்கு விழிப்பூட்டும் வகையில் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட விழிப்புணர்வு செயற்றிட்டம் பொதுச் சந்தை, பேருந்து நிலையம், பாடசாலை உள்ளிட்ட பல பகுதியிலும் முன்னெடுக்கப்பட்டு, கரடிப்போக்குச் சந்தியில் நிறைவு பெற்றது.

இதன்போது தபால் நிலையங்களில் மக்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய சேவைகள் தொடர்பில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# முல்லைத்தீவு, வவுனியாவில் திலீபனுக்கு நினைவேந்தல்





(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த 582ஆவது நாட்களாக போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட உறவுகளின் சங்கத்தின் உறவினர்களின் குடும்ப உறுப்பினர்களால் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் தியாக தீபம் திலீபனுக்கு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

"நீங்கள் மடியவில்லை ஐயா" என எழுதப்பட்ட வாசகத்துடன் காணப்பட்ட தியாக தீபம் திலீபனின் படத்திற்கு போராட்டக்களத்தில் உள்ளவர்களினால் மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி செய்யப்பட்டது.

இதில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மார்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை முல்லைத் தீவில் தமது பிள்ளைகளை தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது போராட்ட கொட்டகையில் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். (2-250-281)

# சுகாதார விதிகளை மீறிய உணவகங்கள், வெதுப்பகத்திற்கு தண்டப்பணம் விதிப்பு

(மல்லாவி)

மல்லாவி மற்றும் பாண்டியன் குளம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இரண்டு உணவகங்கள் மற்றும் வெதுப்பகம் ஒன்றும் சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்டமை ஆய்வின்போது கண்டு பிடிக்கப்பட்டு துணுக்காய் சுற்றுலா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது உணவகங்களின் உரிமையாளர்கள் தமது குற்றத்தை நீதிபதி செல்வநாயகம்-லெனின்குமார் முன்னிலையில் ஏற்றுக் கொண்டதை அடுத்து அவர்களுக்கு 61 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் உணவகம் ஒன்றை மறு அறிவித்தல் கிடைக்கும் வரை மூடுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் புதன் கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் அமர்வுகள் துணுக்காய் சுற்றுலா நீதிமன்றத்தில் நடைபெற்ற போதே நீதிபதியினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

மல்லாவி நகர்ப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்டமை மல்லாவி பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் ப. தினேஷ் தலைமையிலான சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில். உணவக உரிமையாளர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு 31 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், உணவகத்தினை மூடி புனரமைப்புச் செய்து சுகாதார பரிசோதகரின் ஆய்வின் பின்னர் உணவகத்தை நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று மீளவும் திறக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பாண்டியன் குளம் கிராமத்தில் இயங்கி வரும் வெதுப்பகம் ஒன்றினை திடீர் பரிசோதனை மேற்கொண்ட போது கடமையில் இருந்த பணியாளர்கள் மருத்துவச் சான்றிதழ் பெறாத பணியில் ஈடுபட்டதுடன், காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்தமை கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து, வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதையடுத்து உரிமையாளர் தனது குற்றத்தை நீதிபதி முன்பாக ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை அதே பகுதியில் இயங்கிய உணவகம் ஒன்றில் கடமையில் இருந்த பணியாளர்கள் மருத்துவச் சான்றிதழ் பெறாமல் கடமையில் ஈடுபட்டிருந்த வழக்கு விசாரணையின் போது, உணவக உரிமையாளர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து அவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், நீதிபதியினால் கடுமையாக எச்சரிக்கையும் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். (2-15)

# மூடப்பட்டிருக்கும் மனித புதைகுழி மழை பெய்யுமாகில் பாதிப்பு ஏற்படலாம்



(மன்னார்)

மன்னார் சதொச வளாகத்தில் தொடர்ச்சியாக பல்வேறு கேள்விகள், சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா மேற்பார்வையில் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ மற்றும் களனி பல்கலைகழக பேராசிரியர் தலைமையில் மன்னார் சதொச வளாகத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள மற்றும் புதிதாக அடையாளப்பபடுத்தப்படும் மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் மற்றும் ஆய்வு செய்யும் பணி இடம் பெற்று வருகின்றது.

இந்நிலையில் கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறுத்தப்பட்ட அகழ்வுப் பணியானது அதன் பிறகு இன்று வரை இடம் பெறவில்லை.

மன்னாரில் மழை பெய்வதற்கான காலநிலை காணப்படுவதால் குறித்த வளாகத்தில் தோண்டப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டு அப்புறப்படுத்தப்படாமல் உள்ள மனித எச்சங்கள் சேதப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றது.

மழை பெய்தால். மனித எச்சங்கள் பாதிக்காத வகை உரிய விதமாக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததன் காரணத்தால் மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

மன்னாரில் மழை பெய்யில் டெண்டுகளால் மூடப்பட்டு சாதாரண பாதுகாப்பு ஏற்பாடுகள் மட்டுமே செய்யப்பட்டு காணப்படுகின்றன.

இந்நிலையில் தற்போது அந்த ஏற்பாடுகளும் ஒழுங்கின்றி காணப்படுவதனால் மழை பெய்யும் பட்சத்தில் குறித்த புதைகுழியானது முற்றாக சேதப்படும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. எனவே உரிய நிறுவனங்கள் இவ் விடயத்தில் அக்கறையுடன் செயற்படுமாறு மன்னார் மாவட்ட சமூக ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (2)



தியாக தீபம் திலீபனின் 31ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் புதன்கிழமை வேலணை வங்களாவடிச் சந்தியில் இடம்பெற்றது.

# வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இராணுவச் சீருடை, கூரான வாள்கள் மீட்பு

(கம்பளை)

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கடகல பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கூரான வாள்கள், இராணுவச்சீருடை உட்பட பல பொருட்களைக் கண்டுபிடித்துள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கிணங்கவே கம்பளை பொலிஸார் தொழுவ பிரதேசத்தில் அமைந்துள்ள குருகெல என்ற இடத்தில் நேற்று அதிகாலை திடீர் சோதனை மேற்கொண்டபோது மேற்படி சந்தேகத்திற்கிடமான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபர் ஆட்டோச் சாரதி என்பது ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதுடன் மீட்கப்பட்ட பொருட்கள் கொள்ளைச் சம்பவங்களுக்காக பயன்படுத்தியிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# நடராஜர் கலையரங்கை புனரமைக்க நடவடிக்கை



(கரணவாய்)

பருத்தித்துறை நடராஜர் கலையரங்கினை மீளப் புனரமைப்பு செய்வதற்காக அப்பகுதிக்கு நேரடியாக சென்று பார்வையிட்டார் த.தே. கூட்டமைப்பின் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ.சுமந்திரன்.

பருத்தித்துறை நகரசபையின் முன்னாள் நகரபிதா நடராஜர் நினைவாக பருத்தித்துறை கொட்டடி கடற்கரையில் நடராஜர் கலையரங்கு அமைந்திருந்தது.

இதனை புனரமைப்பு செய்வதற்காக கடந்த திங்கட்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கள ஆய்வு மேற்கொண்டிருந்தார். அவருடன் பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் இருதயராசா சென்றிருந்தார்.

இக் கலையரங்கைப் புனரமைக்க கரையோர பாதுகாப்பு அமைச்சின் அனுமதியினைப் பெற்றுத்தருவதாக பாராளுமன்ற உறுப்பினர் உறுதியளித்துள்ளார். (இ-60)

# வீதிக்கு வெள்ளைக்கோடு



(பொற்பதி)

வடமராட்சிக்கிழக்கு பிரதேசத்தில் முதன்முறையாக பாதசாரிக் கடவைக்கு வர்ணம் (வெள்ளைக்கோடு) தீட்டும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

வடமராட்சிக்கிழக்கு நீண்டகாலமாக யுத்தத்திற்குள் அகப்பட்டு இருந்தமையால் அநேகமான வீதிகள் களிமணலினாலும் கிரவலினாலுமான வீதியாகவே காணப்படுகின்றன.


யுத்தத்தின் பின்னர் பகுதி பகுதியாக வீதிகள் தாரிட்டு சீர்செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட இடங்களில் பாதசாரிக் கடவைக்கு வெள்ளைக் கோடு வரையும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

இதில் முதற்கட்டமாக பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட இடங்களில் உள்ள பிரதேசசபை வீதிகளில் பாடசாலைக்கு அண்மையாகவுள்ள இடங்களில் வெள்ளைக்கோடு வரையப்பட்டு வருகின்றன.

யா/மருதங்கேணி இ.த.க. பாடசாலைக்கு அருகாமையிலும் யா/உடுத்துறை மகா வித்தியாலயத்திற்கு அண்மையாகவும் இக்கோடுகள் வரையப்பட்டுள்ளன.

தொடர்ந்து தார் வீதி உள்ள பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முக்கியமான இடங்களில் இந் நடவடிக்கை இடம் பெறுமெனவும் பிரதேசசபை தவிசாளர் அரியகுமார் தெரிவித்தார். இந்த நடவடிக்கைக்கு மக்கள் தவிசாளருக்கு நன்றிகளை தெரிவித்துள்ளனர். (இ-64)

# பழுதடைந்த மின்குமிழ்கள் மாற்றியமைப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கைதடிச் சந்தியில் இருந்து (மானிப்பாய் வீதி) முதலியார் கோவில் வரை உள்ள பகுதிகளிலுள்ள பழுதடைந்த மின் குமிழ்களை மாற்றியமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

பழுதடைந்த மின் குமிழ்களை மாற்றும் செயற்பாடு பிரதேசசபை உறுப்பினர் செல்லையா ஜெயபாலனின் வழிகாட்டுதலில் இடம்பெற்றது. (இ-30)

# கொடிகாமம் பேருந்து தரிப்பிடத்தை ஏ-9 வீதியோடு அமைக்க வேண்டும்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பேருந்து தரிப்பிடத்தை ஏ9 வீதியோடு அமைக்க வேண்டும் எனப் பல தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் கொடிகாமம் சந்தைக் கட்டடத் தொகுதியை நவீனமயமாக்குவது தொடர்பில் பலரது ஆலோசனைக்ளையும் சாவகச்சேரி பிரதேச சபை பெற்றுக் கொண்டது.

இதன் போதே கொடிகாமம் பேருந்து தரிப்பிடம் ஏ9 வீதியோடு இணைந்ததாக அமையப் பெற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். தற்போது கொடிகாமம் பேருந்து தரிப்பிடம் ஏ9வீதிக்கு சற்று தொலைவில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சில வர்த்தக நிலையங்களை அகற்றி பேருந்து தரிப்பிடத்தை அமைக்கும் போது சகலருக்கும் அது இலகுவானதாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளனர். கொடிகாமம் சந்தைத் தொகுதி நவீன கட்டடங்களுடன் புதுத் தோற்றப் பொலிவுடன் அமையப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதற்கு பொதுமக்கள் உள்ளிட்ட சகல தரப்பினருடைய ஆலோசனைகளையும் தவிசாளர் க.வாமதேவன் தலைமையிலான பிரதேசசபை பெற்று வருகின்றது.

நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மாதிரி வரைபடம் சாவகச்சேரி பிரதேச சபையிலும் கொடிகாமம்பொதுச் சந்தையிலும் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-30)

# வீதிகளை மக்கள் பாவனைக்குத் திறந்து விடுங்கள்

(சாவகச்சேரி)

மறவன்புலோ கிராம உத்தியோகத்தர் பிரிவு ஜே/298, மறவன்புலோ கிழக்கு, மறவன்புலோ மேற்கு பிரதேசத்தில் மணற்காட்டு வீதியின் கிளை வீதிகள் காற்றாலை உற்பத்தி நிறுவனத்தினால் மூடி அடைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த வீதிகள் உடனடியாக மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் தங்கவேலு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

காற்றாலை உற்பத்தியினை மேற்கொள்ளவிருந்த வாயுசக்தி நிறுவனம் இப் பிரதேசத்தின் மணற்காடு வீதியின் கிளை வீதிகள் மூன்றினை மூடி அடைத்துள்ளது.

இந் நடவடிக்கையானது இப் பிரதேசத்தின் பிரதான தொழிலாகக் கொண்ட நெற்செய்கையாளர்கள், தென்னை செய்கையாளர்கள் மற்றும் கடற்றொழிலாளர்களது தொழில்களை மிகவும் பாதிக்கும் ஒரு செயற்பாடாகும்.

இவ் விடயம் தொடர்பில் பிரதேச மக்கள், பிரதேச செயலர் மற்றும் தவிசாளருக்கும் தெரியப்படுத்தியுள்ளனர். எனவே இவ் வீதிகளைத் திறக்க தவிசாளர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (இ-30)

# தாக்குதல்; தலையில் படுகாயம்

(சாவகச்சேரி)

மீசாலை வடக்குப் பகுதியில் தலையில் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நபர் ஒருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மீசாலை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 44 வயது பூ. சசிகுமார் என்பவரே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகிறார். கடந்த 25 ஆம் திகதி இரவு 9 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-30)

# சங்கடஹர சதுர்த்தி விரதம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வடக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சங்கடஹர சதுர்த்தி விரதம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி அபிஷேகங்களைத் தொடர்ந்து மூலமூர்த்திப் பூஜை ,வசந்தமண்டபப் பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார்.(இ-7)



வடமராட்சி பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் திறன் வகுப்பறை திறப்பு விழா கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.விருந்தினர்களாக உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்த திறன் வகுப்பறை அமைக்க கே.ரி.ஜங்கரன் நிதியொதுக்கீடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:-மகாலிங்கம்)

# சேவை நயப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)


யாழ்.கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலையின் ஆசிரியர் திருமதி விமலாதேவி சர்வானந்தா தனது சேவையைப் பூர்த்தி செய்து இன்று ஓய்வு பெறுகின்றார்.

இவருடைய சேவை நயப்பு விழா பாடசாலை முதல்வர் க.நித்தியானந்தன் தலைமையில் இன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராகயாழ்ப்பாணவலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) சி.மாணிக்கராசா கலந்து கொள்வார். வாழ்த்துரையினை பழைய மாணவர் சங்கச் செயலாளர் சைவப்புலர் என்.தவராசா நிகழ்த்துவார். (இ)

# நெல்லியடி பொலிஸாரால் ஐவர் கைது





(கரணவாய்)

நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையில் 5 பேர் கைது செய்யப்பட்டதாக பொலி ஸார் தெரிவித்தனர். நெல்லியடி பொலிஸாரால் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 4 மணியிலிருந்து இரவு 9 மணிவரையான ஐந்து மணித்தியாலங்கள் விஷேட சோதனை நடவடிக்கையை மேற் கொண்டிருந்தனர்.

இதன்போது மூன்று கிராம் கஞ்சாவை வைத்திருந்த ஒருவரும், மது போதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற மூவர் மற்றும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவருமாக ஐவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-60)

# தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தென்னை சித்திர திறப்பு விழா யாழில்

(யாழ்ப்பாணம்)

தென்னை பயிர்ச்செய்கை சபையின் தென்னை நடுதல் தொடர்பான சுவர் ஓவியம் வரைதல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் கொழும்புத்துறை இந்துக்கல்லூரியில் தென்னை நடுதல் தொடர்பான சுவர் ஓவியம் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சே.சுதர்சினி மற்றும் பாடசாலை அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.





இந்நிகழ்வு குறித்து பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் கருத்து தெரிவிக்கையில், தென்னை ஓவியங்களின் ஊடாக தென்னை வளர்ப்பின் முக்கியத்துவம் தொடர்பாக பாடசாலை மட்டத்தினருக்கு விளக்கமளித்ததுடன் பாடசாலை மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களது வீட்டு வளவுகளில் உள்ள தென்னங்கன்றுகளை வளர்ப்பது தொடர்பான விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டமும் நடைபெற்றது.

இவ் ஓவியங்கள் கல்வித் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட 30 பாடசாலைகளில் வரையப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சர்வமதப் பேரவையின் மாதாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் மாதாந்த ஒன்றுகூடலானது நாளை 29.09. 2018 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் இல. 76, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் வளவாளர் கிருத்திகா தர்மராஜா நெறிப்படுத்தலில் பால்நிலைச் சமத்துவம் என்னும் தலைப்பில் இடம்பெறும்.

இதில் கலந்து கொண்டு பயன்பெற விரும்பும் சமூக ஆர்வலர்களை யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையினர் அழைத்துள்ளனர். (இ)

# சர்வதேச சிறுவர் தினம்

(சாவகச்சேரி)

யாழ்.கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலையின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு பாடசாலையின் முதல்வர் க.இளங்கோவன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வரணி ஆசிரிய மத்திய நிலைய ஆசிரிய கல்வியியலாளர் நீ.தவராசா கலந்து கொள்வார். (இ-30)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


## ஜெல்லி மீன்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

நற்போசணையாக்கத்தின் விளைவாக நீரில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவு அதிகளவில் குறைகின்றது. இதனால் உயிரியல் ஒட்சிசன் கேள்வி அதிகரிக்கின்றது. நீரில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவு அதிகளவில் குறைவதால் மற்றைய உயிரினங்கள் இறக்கும் நிலை ஏற்படுகின்றது. இது இறந்த வலயம் (Dead Zone) எனப்படும். ஆனால் ஜெல்லிமீன்கள் மிக குறைந்த அளவு ஒட்சிசன் நிலையிலும் உயிர்வாழக்கூடியன. இதனால் மற்ற உயிரினங்களின் வெற்றிடத்தையும் ஜெல்லிமீன்களின் தொகை நிரப்புகின்றன.

ஜெல்லி மீன்கள் பல்லுருத் தோற்றம் கொண்டவை. கடல் நீரில் Iodine அளவு அதிகரிப்பு ஜெல்லிமீன்களில் பொலிப் (polyp) நிலையில் இருந்து மெதுசா (medusae) நிலைக்கு உருமாற்றம் அடைவதற்கு ஏதுவான காரணியாக உள்ளது.

கடல் வெப்பநிலை உயர்வு மற்றும் காலநிலை மாற்றம் என்பனவும் ஜெல்லிமீன்களின் மலர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன. ஏனெனில் பல உயிரினங்கள் மிகவும் குறுகிய வெப்பநிலை மாற்றத்தையே தாங்கிக்கொள்ளக்கூடியன.



பெட்டி ஜெல்லி மீன்கள்



ஜெல்லி மீன்கள் மலர்கள்



அதிகளவில் கடல் வெப்பம் அதிகரிக்கும் போது அவை இறக்கின்றன. ஆனால் ஜெல்லிமீன்கள் நீரின் வெப்பநிலை அதிகரிப்பு மற்றும் தளம்பல்களை சகித்துக் கொள்ளக்கூடியனவாகவும் சூழலியல் மாற்றங்களுக்கு இலகுவில் இசைவாக்கம் அடையக்கூடியனவாகவும் காணப்படுகின்றன.

சில ஜெல்லிமீன்கள் ஆக்கிரமிப்பு இனங்களாக காணப்படுகின்றன. அவ் ஜெல்லிமீன்களின் இரைகௌவிகள் அற்றிருப்பதும் ஓர் காரணம். இதனால் அங்கு வாழும் சுதேச இனங்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றன.

மிகையான மீன்பிடித்தல் காரணமாக கடற்பறவைகள், கடலாமை, கடல் முலையூட்டிகள், மீன்கள் போன்ற இரை கௌவிகளின் எண்ணிக்கையில் ஏற்படும் வீழ்ச்சியும் ஜெல்லிமீன்களின் பெருக்கத்திற்கு காரணமாகின்றன. சில நாடுகளில் ஜெல்லி மீன்களை உணவாகவும் உட்கொள்கின்றனர். அது மட்டுமன்றி அவற்றின் நஞ்சு மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

ஜப்பானில் 2 மீற்றர் நீளமான 200 கிலோகிராம் எடையுடைய நொமுராச் ஜெல்லிமீன்கள் (Nomura's jellyfish) என்கிற இனம் எண்ணிக்கையில் அதிகரித்ததன் காரணமாக மீன்பிடித்தல் செயற்பாட்டை பெருமளவில் பாதித்துள்ளது. இவை வலைகளின் துவாரங்களில் ஒட்டிக்கொள்கின்றன. நீர் வளர்ப்பு இனங்கள் மற்றும் இயற்கை மீன்களினையும் அதிகளவில் சூறையாடுகின்றதுடன் பெரும் இடையூறை விளைவிக்கின்றன.

கடற்கரை பகுதிகள் ஜெல்லிமீன்களின் திரளால் மூடப்படும் போது சுற்றுலாத்துறை கடும் வீழ்ச்சி அடைகின்றது. இதன் திரட்சி உலகின் பல பாகங்களான கருங்கடல், கசுபியன் கடல் பகுதிகளில் அதிகரித்துள்ளது. மேற்குப்பகுதியில் கடல்நீரேரிகளிலும் மத்திய தரைக் கடல் பகுதிகளிலும் கடும் ஏற்றத்தை காட்டுகின்றன.

இவ் விளைவால் மீன்பிடி நடவடிக்கை மட்டுமன்றி மற்றைய கடல் வாழ் உயிரினங்களுக்கும் உணவின்றி இவையே அனைத்தையும் உட்கொள்கின்ற அச்சுறுத்தல் காணப்படுகின்றது. இவற்றின் எண்ணிக்கை பெருக்கம் மனிதர்களுக்கு மட்டுமன்றி பிற கடல் வாழ் உயிரினங்களுக்கும் ஓர் பெரும் அச்சுறுத்தலாகவே அமைகின்றது. (முற்றும்)

சுபோதினி
கணேசலிங்கம்
செயன்முறைக் காட்டுநர்
விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 213

தேனீக்கள் தேனை தவிர வேறு எவற்றை பூக்களில் இருந்து சேகரிக் கின்றன?

புதிர் 213 இற்கான விடைகளை 08.10.2018 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Dr. வி.சா.துளசிதா
விலங்கியல்துறை, விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 213

சரியான விடை:-........................................

முழுப்பெயர்:-........................................

முகவரி:-........................................

தொ.பே. இல:........................................

கையொப்பம்:........................................

# பாரதம்

## ராஜீவ் கொலை குற்றவாளிகளை தாமதிக்காது உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்

### தமிழர் வாழ்வுரிமை கட்சித்தலைவர் வேல்முருகன் வலியுறுத்து


▲ முருகன்



▲ சாந்தன்


▲ பேரறிவாளன்


▲ நளினி


▲ ரவிச்சந்திரன்


▲ ராபர்ட் பயஸ்


▲ ஜெயகுமார்

(சென்னை)

தமிழக அமைச்சரவையின் பரிந்துரையை ஏற்று, ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை தாமதிக்காது விடுதலை செய்ய வேண்டுமென தமிழர்வாழ்வுரிமை கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

பேரறிவாள்ன் உள்ளிட்ட ஏழு பேரின் விடுதலையை வலியுறுத்தி, தமிழர் வாழ்வுரிமை கட்சி சார்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை, சென்னையில் ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய அந்த கட்சியின் தலைவர் வேல்முருகன் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

இதேவேளை, குறித்த ஏழு பேரும் கடந்த 28 ஆண்டுகளாக தண்டனையை அனுபவித்து வருகின்றனர் என்றும், அவர்கள் கருணையின் அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் வேல்முருகன் கோரிக்கை விடுத்தார்.



ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் ஏழுபேரையும் விடுதலைசெய்யக் கோரி அவர்களின் குடும்பத்தினர் மற்றும் தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையின் தீர்ப்பு அண்மையில் வெளியிடப்பட்டது.

அதில், இவர்களை விடுவிக்கும் உ்ரிமை தமிழக அரசிற்கு உள்ளதென்றும், ஆளுநரின் அனுமதியுடன் அவர்களை விடுதலை செய்யலாம் என்றும் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழக அரசு சார்பில் இடம் பெற்ற அமைச்சரவை கூட்டத்தில், இவர்களை விடுவிப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, குறித்த தீர்மானப் பத்திரம் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

எனினும்இதுவரை ஆளுநர் அதற்கான பதிலை வழங்காத நிலையில், பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள் தன் மகன் உள்ளிட்டோரை விடுவிக்குமாறு கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அதேபோன்று ராஜீவ் கொலையின்போது நேரடியாக பாதிக்கப்பட்ட 13 பொலிஸ் அதிகாரிகளின் குடும்பங்கள் சார்பில் குற்றவாளிகளை விடுவிக்கக்கூடாதென நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த ஏழுபேரும் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரி தமிழர் வாழ்வுரிமை கட்சி சார்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

## ரஃபேல் விமான ஒப்பந்தத்தின்போது நான் பதவியில் இருக்கவில்லை

### பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரான் தடாலடி

(நியூயோர்க்)

இந்தியாவுடனான ரஃபேல் விமான ஒப்பந்த முறைகேடு புகார் குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரானிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது, அப்போது நான் பதவியில் இல்லை என கூறினார்.

பிரான்சில் இருந்து 36 ரஃபேல் போர்விமானங்களை ரூ.58 ஆயிரம் கோடிக்கு இந்தியா ஒப்பந்தம் செய்தது. அதில் முறைகேடு நடந்து இருப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டி வருகிறது.

அதை மத்தியில் ஆளும் பா.ஜனதா அரசு மறுத்துள்ளது. இந்த நிலையில் ரஃபேல் விமானங்கள் தயாரிப்பதற்கான உதிரிப்பாகங்களுக்கான டெண்டரை ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு வழங்க மத்திய அரசு பரிந்துரை செய்ததாக பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி பிராங்கோயிஸ்ஹோலண்டே தெரிவித்து இருந்தார்.



அது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. ஆனால் அது பற்றி பிரான்ஸ்ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் கருத்து எதுவும் தெரிவிக்காமல் மௌனம் காத்து வந்தார். இந்த நிலையில் நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள அவர் இடைவெளியின் போது நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவரிடம் ரபேல் போர் விமானம் வாங்கியதில் முறைகேடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் புகார் குறித்து நிருபர்கள் கேட்டனர். அதற்கு பதிலளித்த அவர் கடந்த ஒரு ஆண்டுகளுக்கு முன்பு பிரதமர் மோடி பாரிஸ் வந்த போது ரூபாய் 58 ஆயிரம் கோடி செலவில் 36 ரஃபேல் போர் விமானம் வாங்குவது தொடர்பாக இந்தியா ஒப்பந்தம் போட்டது.

இது இரு நாட்டு அரசுகளுக்கு இடையேயான ஒப்பந்தம். இந்த விவகாரத்தில் நான் மிக தெளிவாக இருக்கிறேன்.

இது 2 நாட்டு அரசுகளுக்கு இடையே விவாதிக்கப்பட்டது. அப்போது நான் ஜனாதிபதி பதவியில் இல்லை. கடந்த ஆண்டு மே மாதம் தான் நான் ஜனாதிபதியானேன்.

இதை இந்திய பிரதமர் நரேந்திர மோடி கடந்த சில நாட்களுக்கு முன்பே தெளிவாக கூறிவிட்டார்.

இதுகுறித்து வேறு எதுவும் என்னால் கூற முடியாது.


ஏனெனில் நான் அப்போது பதவிலும் இல்லை. நாங்கள் மிகத் தெளிவான சட்ட திட்டங்களுடன் செயற்படுகிறோம் என சுருக்கமாக முடித்துக் கொண்டார். (7)

## அமெரிக்காவில் கொடிய விஷமுள்ள இரட்டைத்தலைப்பாம்பு கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் வேர்ஜினியா மாநிலத்தில் உள்ள ரிச்மண்ட் பகுதியில் அரிய வகையான கொடிய விஷமுள்ள இரட்டைத் தலைப் பாம்பொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தோட்டப்பகுதியொன்றில் குறித்த இரட்டைத் தலை பாம்புக்குட்டி கடந்த வாரமளவில் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அதனை வேனெஸ் பொரோவைச் சேர்ந்த ஊர்



வனவியல் நிபுணர் ஜே.டி. லியோஃபர் (JD Kleopfer) பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து லியோஃபர் தனது முகநூலில், ஆய்வின் முடிவுகள் சார்ந்த குறிப்புகளை பதிவிட்டுள்ளார். "காடுகளில் வாழும் விஷம் நிறைந்த இரட்டை தலை ஊர்வன வகைகள் மிகவும் அரிதாகவே உள்ளன. ஏனென்றால், அவை நீண்ட காலம் வாழக்கூடியவை அல்ல.

இரண்டு தலைகளுடன் நீண்ட காலம் வாழ்வதற்கு இந்த வகையான உயிரினங்கள் மிகுந்த சவால்களை எதிர்கொள்கின்றன" என்று அவர் தனது பதிவில் சுட்டிக் காட்டியுள்ளார். (7)

## சிரியாவுக்கு ஏவுகணை வழங்கி அமெரிக்க

(டமாஸ்கஸ்)

சிரியாவுக்கு S300 ரக ஏவுகணைகளை வழங்குவதன் மூலம் ரஷ்யா மிகப் பெரிய தவறை செய்து விட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியு ளது.

சிரியாவில் கடந்த வாரம் ரஷ்ய போர் விமான சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு இஸ்ரேல் காரணம் என ரஷ்யா கூறியிருந்தது.



## கனேடிய பிர சந்திப்பை நி

### அமெரிக்கா ஜனாதிபதி

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனா சந்திப்பிற்கான, கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடே வின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கில் நடைபெற்றுவரும் ஐ.நா சபையின் பொதுக் கூட்டத்தின் ஒரு அங்கமாக இச் சந்தி பிற்கு கனேடிய பிரதமர் அழைப்பு விடுத்திருந்த நிலை யில், அமெரிக்க ஜனாதிபதி அதனை நிராகரித்துள்ளது

வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்த இருதரப்பு பேச்சுவார்த்தை மோசமான நிலை யில் காணப்படுகின்ற நிலையிலேயே இப்பேச்சுவார்

## ஐ.நா. கூட்டத்தில்

### ஆச்சரியத்தில் ஆழ்த்தி



(ஜெனிவா)

தனது 3 மாதப் பெண் குழந்தையுடன் ஐக்கிய நாடுகள் சபைக்கூட்டத்தில் பங்கேற்ற நியூசிலாந் பிரதமர் ஜெசிந்தா அர்டேர்ன் அனைவரையும் ஆ சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

நியூசிலாந்தின் வரலாற்றில் இளம் வயதிலேயே பிரதமரான பெண் என்ற பெருமை 38 வயதான ஜெசிந்தா அர்டேர்னையேச் சாரும். ஜெசிந்த தொலைக்காட்சி தொகுப்பாளரான கிளார்க் கே

# வெளிநாடு

## வுக்கு S300 ரக ணைகளை ரஷ்யா ங்கியமைக்கு ரிக்கா கண்டனம்

ஏவுகணைகளைக்
கப் பெரிய தவறைச்
குற்றம் சாட்டியுள்


ஷ்ய போர் விமானம்
ரல் காரணம் என

ஆனால் தாங்களே தவறுதலாக சுட்டுவிட்டதாக சிரியா தெரிவித்ததையடுத்து, சிரிய வான் பரப்பை பாதுகாக்க நவீனரக S300 ஏவுகணைகளை வழங்க ரஷ்யா முடிவு செய்துள்ளது.

இதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர், ரஷ்யாவின் ஏவுகணைகளால் அமெரிக்க படைகள் தாக்கப்படும் அபாயம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். (7)



# ஈரான் இராணுவ அணிவகுப்பில் 24 பேரை பலி கொண்ட பயங்கரவாதத் தாக்குதல்



## 22 பேர் கைது

(டெஹ்ரான்)

ஈரான் இராணுவ அணிவகுப்பில் 24 பேரை பலி கொண்ட பயங்கரவாத தாக்குதல் வழக்கில் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈராக் ஜனாதிபதியாக இருந்த சதாம் உசேன், 1980ஆம் ஆண்டு ஈரானை ஆக்கிர மித்ததால் இரு நாடுகளுக்கு இடையே நடந்த போரின் தொடக்கத்தை நினைவு கூர்ந்து ஈரானில் உள்ள அவாஸ் நகரில் கடந்த 22ஆம் திகதி இராணுவ அணி வகுப்பு நடந்தது.

அப்போது அணிவகுப்பு மைதானம் அருகே உள்ள ஒரு பூங்காவில் இருந்து அணிவகுப்பில் கலந்து



கொண்ட வீரர்களையும், பார்வையிட வந்திருந்த பொதுமக்களையும் குறி வைத்து பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இதில் 24 பேர் கொல்லப்பட்டனர். 69 பேர் படுகாயம் அடைந்தனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய 4 பேரில் 2 பேர் கொல்லப்பட்டனர். 2 பேர் கைது செய்யப்பட்டனர். ஈரானை உலுக்கிய இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கில் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதை ஈரான் உளவுத்துறை அமைச்சகம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் கூறும்போது, கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து ஆயுதங்களும், தகவல் தொடர்பு சாதனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இந்த தாக்குதலுக்கு அரபு பிரிவினைவாதிகளும், ஐ.எஸ். பயங்கரவாதிகளும் போட்டி போட்டுக்கொண்டு பொறுப்பேற்று இருப்பது குறிப்பிடத்தக்கது. (7)

## ப பிரதமருடனான பை நிராகரித்தார்

### னாதிபதி

ால்ட் ட்ரம்புடனான
ர் ஜஸ்ரின் ரூடோ
ப்பட்டுள்ளது.
ற்றுவரும் ஐ.நா.
அங்கமாக இச் சந்திப்
விடுத்திருந்த நிலை
ன நிராகரித்துள்ளது.
தக உடன்படிக்கை
மோசமான நிலை
யே இப்பேச்சுவார்த்

தைக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த ட்ரம்ப், கனடாவின் தீர்வைகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன.

அது மாத்திரமின்றி கனடாவுடனான பேச்சுவார்த்தைகள் மற்றும் பேச்சுவார்த்தை முறை குறித்து நாம் அதிருப்தி கொண்டுள்ளோம். நாம் அவர்களது பிரதிநிதித்துவத்தை விரும்பவில்லை.

கனடா எனக்கு பிடித்தமான நாடு. அங்கு எனக்கு நிறைய நண்பர்கள் காணப்படுகின்றனர். ஆனால், கனடா எம்மை மிக மோசமாக நடத்துகின்றனர் எனத் தெரிவித்தார். (7)

## டத்தில் 3 மாதக் குழந்தை

### ஆழ்த்திய நியூசிலாந்து பிரதமர்



தையுடன் ஐக்கிய
கேற்ற நியூசிலாந்து
னைவரையும் ஆச்

இளம் வயதிலேயே
மை 38 வயதான
சாரும். ஜெசிந்தா
ன கிளார்க் கேஃ

போர்டை திருமணம் முடித்துள்ளார்.

ஜெசிந்தா கிளார்க் தம்பதியினருக்கு கடந்த ஜூன் மாதம் பெண் குழந்தை பிறந்தது. பிரதமர் பதவியிலிருக்கும் போது குழந்தை பெற்ற உலகின் இரண்டாவது பிரதமர் என்ற பெருமை ஜெசிந்தா அர்டேர்னையேச் சாரும்.

குழந்தைளை கவனித்துக் கொள்ள 6 வாரங்கள் பேறுகால விடுமுறையிலிருந்த பிரதமர் ஜெசிந்தா தற்போது தனது வழக்கமான பணிகளுக்குத் திரும்பியுள்ளார்.

இந் நிலையில் ஐ.நா. சபை கூட்டத்தில் தனது 3 மாதப் பெண் குழந்தை நீவுடன் கலந்து கொண்ட பிரதமர் ஜெசிந்தா அனைவரது கவனத்தையும் ஈர்த்ததோடு வியப்பிலும் ஆழ்த்தியுள்ளார்.

கூட்ட அரங்கில் ஜெசிந்தா குழந்தையை அணைத்துக் கொண்டும், முத்தமிட்டுக் கொண்டும் குழந்தையை கையில் வைத்துக் கொண்டே மாநாட்டில் பேசியுமுள்ளார். (7)

# இத்தாலியில் காட்டுத் தீயால் மூடப்பட்ட விமான நிலையம்

## நூற்றுக்கணக்கானோர் இடப்பெயர்வு



(ரோம்)

இத்தாலியின் மத்திய டஸ்கனி பிராந்தியத்தில் ஏற்பட்ட காட்டுத்தீ காரணமாக அதனை அண்மித்த பகுதிகளில் வசித்த நூற்றுக்கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மரங்கள் நிறைந்த மலைப்பகுதியில் பரவிய காட்டுத்தீ காரணமாக பைசா கலிலியோ கலிலி (Galileo Galilei) விமான நிலையத்தின் செயற்பாடுகளும் முடங்கியுள்ளன.

இந்த காட்டுத்தீ கடந்த திங்கட்கிழமை மாலை தொடக்கம் பரவ ஆரம்பித்ததாகவும், பைசா மற்றும் லூக்காவின் டஸ்கன் தலைநகரங்களுக்கிடையில் அமைந்திருக்கும் மொன்டே செர்ரா பகுதியில்வேண்டுமென்றே தீவைக்கப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

காட்டுத்தீயை அடுத்து கல்கி மற்றும் வைகோ பிஸானோ நகரங்களைச் சேர்ந்த சுமார் 700 பேர் வரை தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் பாதுகாப்பு கருதி மூடப்பட்டுள்ள நிலையில், யாருக்கும் காயங்களோ அல்லது பாதிப்போ ஏற்பட்டதாக உடனடி தகவல்களையும் வெளியாகவில்லை.

600 ஹெக்டயருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பு தீயினால் நாசமாகியுள்ளதுடன், பாரிய புகைமூட்டங்கள் பிரதேசத்தின் வானில் சூழ்ந்துள்ளன. இரண்டு கனேட் எயார் விமானங்களும், நான்கு உலங்குவானூர்திகளும் காட்டுத்தீ ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு மேலாக பறந்து ஆயிரக்கணக்கான லீற்றர் நீரை இறைத்துச் சென்றுள்ளன. (7)

# தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பில் விடுவிக்கவும்

## த.தே.கூ.தலைவர் சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

ஜே.வி.பி. கலவரங்களிலும் 1983 கலவரங்களிலும் கைது செய்யப்பட்டவர்களைப் பொது மன்னிப்பில் விடுவித்ததைப் போன்று தமிழ் அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என பிரதமர் - நீதி அமைச்சர்-சட்டமா அதிபர் ஆகியோருடனான சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.



நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவருடன் நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி கைதிகளின் விடுதலை குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என அரச தரப்பு, எதிர்க்கட்சித் தலைவருக்கு வாக்குறுதி கொடுத்துள்ளது. (இ-7)

# அரசியல் கைதிகள் விவகாரம்; விரைவில் உரிய நடவடிக்கை

## சட்டமா அதிபர் கவனம்

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாதமை மற்றும் காலதாமதங்கள் குறித்து நான் உடனடியாக கவனம் செலுத்துகின்றேன் என சட்டமா அதிபர்ஜெயந்த ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அதேபோல் உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் விவகாரம் குறித்து இன்னும் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குள்நடவடிக்கைஎடுக்கின்றேன்.

யுத்த காலகட்டத்தில் கைதுசெய்யப்பட்ட அரசியல் கைதிகள் பலர் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். எனினும் இப்போதும்



தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள் பாரிய குற்றங்களின் பெயரில் கைதுசெய்யப்பட்டவர்கள். அவர்களை விடுதலை செய்வது கடினமானது எனவும் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே சட்டமா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இச் சந்திப்பின்போது சுமந்திரன் எம்.பி.யிடம் இருந்த அரசியல் கைதிகளின் விபரங்களையும் அவர் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தோட்டத்தொழிலாளர் சம்பள அதிகரிப்பை பிரதமர் உடன் உறுதி செய்தல் வேண்டும்

## இ.தொ.கா. வேண்டுகோள்

(ஹற்றன்)

தோட்டத்தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பிற்கு நல்லாட்சி அரசாங்கமும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாட்டின் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க உடன் தலையிட்டு நியாயமான தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என முன்னாள் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இ.தொ.கா. உதவிச் செயலாளருமான டி.வி. சென்னன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே பெருந்தோட்டங்கள் கம்பனி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ பெருந்தோட்டங்களை கம்பனிகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்க ஒப்பந்தத்தை மேற்கொண்டார்.

இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக் காலத்தில் தோட்டங்கள் நட்டத்தில் இயங்கியதுடன் பெரும்பான்மைச் சமூகத்தினைச் சேர்ந்தவர்கள் தோட்ட உத்தியோகத்தர்களாக பெருவாரியாக நியமிக்கப்பட்டனர். இதனால் தோட்ட மக்கள் அச்சமடைந்தனர்.

இந்நிலையில் தோட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பு கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது. இதை இ.தொ.கா.தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளவில்லை. தோட்ட நிர்வாகம் கம்பனி பொறுப்பில் வந்தாலும் தோட்டலயன் குடியிருப்புக்கள், ஆலயங்கள் என்பன கம்பனி நிர்வாகத்திற்குள் வராமல் சுயமாக இயங்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்தார்.

அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸ இவ்விடயத்தை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாலும் இதற்குப் பொறுப்பாக தோட்டங்களின் முகாமையாளர்கள் செயற்பட தொடங்கியதால் அத்திட்டம் நடைமுறையில் வரவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் கம்பனிகள் இன்று தோட்டத் தொழிலாளர்களின் அனைத்து நலன் விடயங்களிலும் புறக்கணிப்பையே மேற்கொண்டு வருகின்றன. புதிய சம்பள கூட்டு உடன்படிக்கையிலும் சம்பள உயர்வு பேச்சுவார்த்தையில் கையை விரித்துள்ளன.

தற்போதைய நிலையில் நல்லாட்சி அரசாங்கம் தொழிலாளர்களுக்கு அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவிற்கேற்ப 1000 ரூபாவிற்கு அதிகமான சம்பளத்தை நாளொன்றிற்கு பெற்றுக்



கொடுக்க முன்வர வேண்டும். ஐ.தே.கவின் பொறுப்பிலே தொழிலமைச்சு உட்பட முக்கிய அமைச்சுகள் உள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தல் மேடைகளில் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும் என பகிரங்கமாக அறிவித்துள்ளார். மலையக தொழிற்சங்கங்களும் அதே நிலைப்பாட்டில் உள்ளன. எனவே இவ்விடயத்தில் பிரதமர் உடன் தலையிட்டு நியாயமான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## விரும்பும் பதிலை வரவழைப்பது எப்படி?

மனிதர்களிடம் ஒரு முரண்பாடான குணம் உண்டு. இதைப் புரிந்துகொண்டு நாம் வார்த்தைகளை விடுவித்தால் சாதகமான பதில்களைப் பெற்றுவிட முடியும்.

சில நடைமுறையான உதாரணங்களைப் பார்ப்போம்!

''நீங்க செஞ்சது மறக்க முடியாத உதவி''

''என்னத்த பெரிய உதவி போங்க. அதெல்லாம் சாதாரண விடயம்''

அதே முதல் நபர், "நீங்க பண்ணினது சாதாரண உதவி தானுங்களே"

அதே இரண்டாம் நபர், "யோவ்! இதுவா சாதாரண உதவி? காரியம் முடிஞ்சதும் நன்றி கெட்டுப் போய் பேசறியே இப்படி!"

அடுத்த காட்சி , "சேர்! உங்கள் கம்பனி மாதிரி வராதுங்க சேர்!"

"எங்க கம்பனியை நீதான்யா பாராட்டிக்கணும்!" அதே முதல் நபர், "சேர்! ஏன் சேர் உங்க கம்பனி இவ்வளவு மட்டமா இருக்கு?"

அதே இரண்டாம் நபர், "யோவ்! என் கம்பனியைப் பத்தி தப்பாப் பேசினா நான் பொல்லாதவனாயிடுவேன்!"

கவனித்தீர்களா மனிதர்களின் முரண்பாட்டை! இப்படிப்பட்ட பல உதாரணங்களைச் சொல்லிக்கொண்ட போகலாம். மனிதர் ஒருவர்தான். ஆனால் அணுகுமுறையை அனுசரித்து அவர் தன் நிறத்தை எப்படி மாற்றிக்கொள்கிறார் என்று பார்த்தீர்களா!

மனிதர்களின் இந்த முரண்பாட்டை நாம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

''உங்களால் நான் சொல்லப் போற உதவியைச் செய்ய முடியுமான்னு தெரியலை. இருந்தாலும் உங்ககிட்ட கேட்டுடணும்னு தோணுது" என்பதுபோல் அணுகினால் காரியம் ஒரு வேளை வெற்றியடைலாம்.

ஆனால் "நீங்க என்ன செய்வீங்களோ தெரியாது. நீங்க இதை முடிச்சுத் தந்தாகணும்" என்று அணுகினால் அநேகமாக அந்த விடயம் தோல்விதான்.

''என்னோட காரில வர்றீங்களா?'' என்று ஒருவர் பாதியளவு கதவு திறந்தபடி அரைகுறை மனதுடன் கேட்டால் "உங்களுக்கு என்னத்துத்துக்குச் சிரமம்!'' என்று சொன்னால் போதும். முழுக் கதவும் திறந்து விடும்.

''உங்களோட ரொம்ப நேரம் பேசிக்கிட்டிருந்து உங்க வேலையெல்லாம் கெடுத்திட்டேன்" என்று சொல்லிப் பாருங்கள் . "அட என்னங்க நீங்க!எப்பவோ வர்றீங்க" என்ற பதில் வரும். இதைச் சொல்லாமல் புறப்படுங்கள். "படுபாவி ! வந்து அறுஅறுன்னு அறுத்துக் கொன்னுட்டான்யா. என் வேலையெல்லாம் கெட்டுப் போச்சு "என்பார் மற்றவர்களிடம்.

மனித நாக்கு இருக்கிறதே அதற்கு முறையான விதியே தெதரியாது. அது எப்படி வேண்டுமானாலும் புரளும். அதை நமக்குச் சாதகமாகப் புரளச் செய்யும் கலையைக் கற்றுக்கொண்டு விட்டால் போதும். நம்மை யாரும் அசைக்க முடியாது.

**லேனா தமிழ்வாணன்**

# வீடமைப்புத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்

## மலேசியப் பிரதமர் மைத்திரிக்கு வாக்குறுதி



(நியூயோர்க்)

குடிசைவாசிகளுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள வீடமைப்பு செயற்றிட்டத்திற்கு உட்சபட்ச ஒத்துழைப்பை வழங்குவதாக மலேசியா பிரதமர் ஜனாதிபதிக்கு உறுதியளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 73 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் நகருக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மலேசியாவின் பிரதமர் மஹதீர் மொஹமட்டுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

இதன்போது மலேசியப் பிரதமர் சார்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகுந்த கௌரவத்துடன் வரவேற்கப்பட்டார்.

இலங்கை தொடர்பில் தான் மிகவும் அக்கறையுடன் செயற்படுவதாக தெரிவித்த மலேசிய பிரதமர் மஹதீர் மொஹமட், இலங்கை பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கு எவ்விதமான ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

பெருநகர அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் குடிசைவாசிகளுக்காக புதிதாக வீடுகளை' நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க தாம் தயாராக இருப்பதாகவும் மலேசிய பிரதமர் ஜனாதிபதிக்கு இதன்போது உறுதியளித்தார். ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் இலங்கையானது மலேசியா மீது வைத்துள்ள நட்பினையும் பிரதமர் இதன்போது பாராட்டினார். (இ-7)




# கருகம்பாவெளியிலுள்ள குப்பைமேடு அகற்றப்படும்

(கரணவாய்)

தொண்டைமானாறு கருகம்பாவெளி குப்பை மேட்டை அகற்றித் தருவதாக பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் உறுதியளித்துள்ளார். தொண்டைமானாறுக்கும் சந்நிதி கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் சித்தர்களின் சமாதிகள் காண ப்படுகின்றன.

அங்கு 2011 ஆம் ஆண்டில் இருந்து குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன.

இதனை அகற்றித் தருமாறு அப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இதனையடுத்து அப்பகுதிக்குச் சென்ற சுமந்திரன் எம்.பி. பிரதேச சபைகளிடம் பேசி அகற்றுவதற்கான ஒழுங்கு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அவருடன் பருத்தித்துறை நகரசபை தவிசாளர் இருதயராசா, கரவெட்டி பிரதேசசபை தவிசாளர் த. ஐங்கரன், பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் அ. சா.அரியகுமார் ஆகியோர் உடன் சென்றனர். (இ-60)

# பிரேமதாஸ, லலித் அத்துலத் முதலியின் கொலையில் பொலிஸாருக்குப் பங்கு

## கூட்டு எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ, முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் கொலையில் பொலிஸாருக்கு பங்குள்ளது. அதுபோன்ற சூழ்நிலை நாட்டில் மீண்டும் ஏற்படும் அபாயம் உள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி எச்சரித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொறளை என்.எம். பெரேரா நிலையத்தில் நடைபெற்றது. அவ்வெதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா வின் சூழ்ச்சியானது குறித்த ஒரு காலப்பகுதிக்கு முன்னிருந்து முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு வேலைத்திட்டமாகும். முன்னாள் சிரேஷ்ட பொலிஸ்மா அதி பர் அநுர சேனநாயக்க செயற்றிறன்மிக்க ஒரு அதிகாரியாவார். அவரை ஒரு வருட காலம் சிறையில் அடைத்தனர். எனினும் அவருக்கு எதிராக இதுவரையில் எவ்வித குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவில்லை.

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியை பொலிஸாரின் பங்கு பற்றலுடன் அப்போதிருந்த அரசியல்வாதிகள் சிலரே கொலை செய்ததாக நாம் நம்புகிறோம் என அவர் மேலும் குற்றஞ்சாட்டினார். (இ-7)

# வடக்கில் மீண்டும் ஆயுதக் கிளர்ச்சியை உருவாக்க முயற்சி

வடக்கில் மீண்டும் ஆயுதக் கிளர்ச்சியை உருவாக்க சிலர் முயற்சி செய்து வருவதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொட தெரிவித்துள்ளார்.

காலி பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தெற்கில் உருவாகியுள்ள பாதாள உலக குழுவினரை போன்று வடக்கிலும் சில குழுக்கள் உருவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொலிஸ்மா அதிபர் மீது சிலர் அச்சம் கொண்டு இருப்பதாகவும் அதனால் அவருக்கு எதிராக செயற்படுவதாகவும் தெரிவித் துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடு செய்ய வேண்டும் எனின் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் தன்னியக்கத் தடுப்பு துலா அமைக்கவும்

## தென்மராட்சி மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் சன நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் ஐந்து பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளை பாதுகாப்பானதாக தன்னியக்கத் தடுப்புத் துலா உள்ளதாக மாற்றியமைக்க வேண்டும் என பெற்றோர் மற்றும் சமூக நலன் விரும்பிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள புகையிரதக் கடவையினை வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள், வர்த்தகர்கள் என அதிகளவானோர் தினமும் பயன்படுத்தி வருகின்றனர். குறித்த கடவையில் தன்னியக்க சமிக்ஞை ஒலி,ஒளி ஆகியன பொருத்தப்பட்டிருப்பினும் குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்ற அதிகரித்த வாகன இரைச்சல் காரணமாகவும், மோட்டார் சைக்கிள் சாரதிகளின் தலைக்கவசம் காரணமாகவும் சமிக்ஞை ஒலி கேட்பதில்லை. அத்துடன் மின்சாரம் தடைப்படுகின்ற வேளைகளில் சமிக்ஞை ஒலி,ஒளி ஆகியன தொடர்ந்து இயங்குகின்றன. இதனால் புகையிரதக் கடவையை கடக்க பொதுமக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். அத்துடன் கடந்த மாரி காலத்தின் போதும் குறித்த சமிக்ஞை விளக்குகளில் கோளாறு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. புகையிரதம் வருவதை அவதானிக்க முடியாத பாரிய வளைவினுள் குறித்த கடவை காணப்படுகிறது. ஆகவே சாவகச்சேரி கச்சாய் வீதி மற்றும் தனங்கிளப்பு வீதி கடவைகளில் தன்னி யக்க துலா இடப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் அதிகம் பயன்படுத்தும் சங்கத்தானை புகையிரதக் கடவை, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைச் சிறார்கள் அதிகம் பயன்படுத்தும் அரசடி புகையிரதக் கடவை ஆகியவற்றிலும் தன்னியக்கத் துலா அமைக்க வேண்டிய தேவை உள்ளது. குறித்த இரு கடவையிலும் புகையிரத விபத்து ஏற்பட்டு உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் இரு இளைஞர்கள் அரசடி புகையிரதக் கடவையில் புகையிரதத்துடன் மோதி உடல் துண்டாகிப் பலியானமை குறிப்பிடத்தக்கது. இதைத் தவிர மீசாலை புகையிரதக் கடவையும் அடிக்கடி விபத்து ஏற்படும் கடவையாக உள்ளது. அதற்கு முன்பாக உள்ள ஜயா கடைச் சந்தி புகையிரதக் கடவையில் சமிக்ஞை துலா எதுவும் இல்லாத நிலை உள்ளது. புகையிரதம் வரும் போது கடவைக்கு கயிறு கட்டி மறிப்பதனை அவதானிக்க முடிகிறது.

இது தொடர்பாக உரிய திணைக்களத்தினர், உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபை, பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்தி மக்களின் உயிர் காக்க உதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-30)


# மரண அறிவித்தல்

## திருமதி. சரஸ்வதி இராசலிங்கம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சரஸ்வதி இராசலிங்கம் 25.09.2018 செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா-அன்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கந்தையா இராசலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் பரமளராணி, நவநீதகாந்தன், ஜெயச்சந்திரகாந்தன், குபேரகாந்தன் (சுவிட்சர்லாந்து), கோமளராணி, ஸ்ரீகாந்தன் தொ.நு.உ. (வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

யோகரத்தினம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் இ.போ.சபை), திருமகள் (ஆசிரியர், யா/உயரப்புலம் மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்), தயாளினி, ஜமேலா (சுவிட்சர்லாந்து), ஸ்ரீரங்கநாதன், வனிதா ஆகியோரின் அன்பு மாமியும்,

சங்கீதா, சதீஸ், துளசிகா, தஷ்விகா, வர்மிலன், மகிஷா, டினிஷா, சங்கீர்த், கஜலக்ஷன், சஞ்சிகா, ஜனோஜ், சுசானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சந்தோஷ், சங்கவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 28.09.2018 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(5813)

14, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்: மகன்
இ.நவநீதகாந்தன்
TP:- 077 717 2031, 021 222 9795

# வைத்தியசாலைக்கு முன்பாக பொலிஸ் காவலரண் அமைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குமுன்பாக பொலிஸ் காவலரண் அமைக்கப்பட வேண்டும் என நெடுநாட்களாக வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ப.அச்சுதன் முயற்சி எடுத்து பொலிஸ் காவலரண் ஒன்றினை அமைத்துள்ளார்.

கடந்த 6 ஆம் மாத நடுப்பகுதியில் பொலிஸ் காவலரண் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. குறித்த பொலிஸ் காவலரண் பொலிஸாரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளது.

வைத்தியசாலையின் முன்பாக பொலிஸ் காவலரண் இல்லாத காரணத்தால் இரவு வேளைகளில் ரவுடிக் கும்பல்களின் அட்டகாசம், வாள் வெட்டுக் குழுக்களின் அட்டகாசம் என்பன இடம்பெற்று வைத்தியசாலை சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது பொலிஸ் காவலரண் வைத்தியசாலையின் பின் பகுதியில் காணப்படுவதால் வைத்தியசாலையின் முன் பக்கத்தில் இடம்பெறுகின்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்து பொலிஸார் வருவதற்கிடையில் குற்றவாளிகள் தப்பித்துச் செல்கின்ற நிலை காணப்படுகிறது. அதனைவிட மரண விசாரணைகள் ஆகியனவும் தற்போது வைத்தியசாலையின் பின் பகுதியிலேயே இடம்பெறுகிறது.

பொலிஸ் காவலரண் முன் பகுதிக்கு மாற்றப்பட்ட பின்னர் மரண விசாரணைகளையும் முன் பகுதிக்கு மாற்ற முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் காவலரண் வைத்தியசாலையின் முன் பகுதிக்கு மாற்றப்படுவதால் பல்வேறு குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்படும். அத்துடன் வைத்தியசாலையின் பாதுகாப்பிற்காக பத்து பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# ஜனாதிபதி மக்கள் சேவை சாவகச்சேரியில் இன்று

(சாவகச்சேரி)

உத்தியோகபூர்வப் பணி (நிலமெஹெவர) ஜனாதிபதி மக்கள் சேவை தேசிய நிகழ்ச்சித் திட்டமானது இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி ட்ரிபேர்க் கல்லூரியில் இடம்பெறும்.

தென்மராட்சி பிரதேச செயலர் தேவந்தினி பாபு தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

இதில் கலந்து கொள்ளும் பொதுமக்கள் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள், தேசிய அடையாள அட்டை வழங்குதல், மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல், கடவுச்சீட்டு பெற்றுக் கொள்ளல், ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகள், சமுர்த்தி நிவாரணம், சமூக சேவைகள், வீட்டுக் கடன் சேவைகள், சிறுதொழில் முயற்சி, பொலிஸ் சேவைகள் உள்ளிட்ட பல சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-30)

## சுற்றுலாத்துறையில் வேலைவாய்ப்பு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழில் வேலைவாய்ப்பற்று இருக்கும் இளைஞர், யுவதிகளை சிறந்த சுற்றுலாத்துறையில் பயிற்சியினை பெற்றுக்கொடுத்து யாழில் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஏற்ப நிரந்தர தொழில் வாய்ப்பினை வழங்கும் நோக்கில் மனிதநேய வேலைத்திட்ட அலுவலகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கும் தகுதியாகவயதெல்லை 18 முதல் 35 இற்கு இடைப்பட்ட கல்விப் பொது தராதர சாதாரண தரம் கற்றிருத்தல் சிறந்ததாகும் என்பதுடன் அனுபவம் தேவையில்லை

மேலும் உலகில் வளர்ந்து வரும் தொழில் துறையில் சுற்றுலாத்துறை சிறந்து விளங்குகின்றது. வளர்ந்து வரும் எதிர்கால உலகிற்கு நிகராக இளைஞர்களை பயிற்றுவித்து அவர்களுக்கு சிறந்த பொருளாதார ரீதியாக வருமானத்தினை பெற்றுத்தரும் இந்த துறைக்கு உடனடியாக நெல்லியடியில் அமைந்துள்ள அலுவலத்திற்கு வருகை தந்து ஒப்படைக்க முடியும் என்பதுடன் மேலும் தொடர்புக்கு 076 118 8404 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் பூஜிதவுக்கு எதிராக குற்றப்பிரேரணை

## கூட்டு எதிரணி நடவடிக்கை



(கொழும்பு)

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் பொலிஸ்மா அதிபருக்கு எதிராக பாராளுமன்றில குற்றப்பிரேரணை கொண்டு வரவுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன எம்.பி.தெரிவித்தார்.

பொறளை என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதாக இல்லை. எனவே நல்லாட்சி அரசாங்கத்தால் அது குறித்த செயற்பாடுகள் மற்றும் பொருளாதாரம், அரசியல் சிக்கல்களை தீர்த்துக் கொள்ள முடியாதென்பதை பொறுப்புடன் கூறிக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## எண் 7 (கேது)

## (தன்வழி நடப்பவர்கள்)

7ஆம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் 7, 16, 25 திகதிகளில் பிறந்தவர்களாவர். எந்தவொரு மாதமாக இருந்தாலும் மேற்கண்ட திகதிகளில் பிறந்தவர்கள் 7 எனும் கேது ஆதிக்கத்தில் பிறந்தவர் ஆவார்கள். தீவிரமான மத நாட்டமும், கொள்கைப் பிடிவாதமும், நிகரற்ற சாஸ்திர நம்பிக்கையும் உடையவர்கள். வேத சாஸ்திர நுட்பமறிந்தவர்கள். ஞானத்தை நோக்கிப் பிரயாணிப்பார்கள். தனக்கென்று தனிவழியை உருவாக்கி அதன் வழி நடப்பார்கள். வேதாந்தம் பேசுவார்கள். விஞ்ஞான, மெய்ஞ்ஞான விடயங்களில் ஈடுபட்டு அறிவாற்றல் நிரம்பிக் காணப்படுவார்கள். தீவிரமான கடவுள் நம்பிக்கை உடையவர்கள். இசையில் ஸ்வரங்கள் ஏழு, வர்ணங்கள் ஏழு, அபூர்வ தத்துவங்கள் ஏழு, தாதுக்கள் ஏழு, ரிஷிகள் ஏழு, மனித உடலில் மறைந்து கிடக்கும் ஞானச் சக்கரங்கள் ஏழு என்று 7 ஆம் எண்ணின் தனித்துவம் மின்னுகின்றது.

தவத்தினால் மேன்மை அடைவார்கள். பக்தி நெறிகளில் மிகவும் கவர்ந்திழுக்கப்படுவார்கள். உலக பந்தங்களில் ஈடுபாடு குறைந்துவிடும். கேது ஆதிக்கத்தினர் வேதாந்தத்தை விட யோகம், மந்திரம் முதலிய இரகசிய மார்க்கத்தையே அதிகம் விரும்பி தீவிரமாக ஈடுபடுவார்கள். கடவுள் நாட்டமிருக்கும். தீவிர சாதனை செய்வார்கள. துறவிகளாகவும் மனம் இடம்கொடாது. மனதிற்கு எட்டாத பொருட்கள் பற்றியும் தெய்வீக விடயத்தைப் பற்றியும் எப்போதும் ஆராய்ச்சிகள் செய்வார்கள். முன்னோர்கள் தெய்வீக விடயங்களை ஏழு பிரிவாக வைத்தனர். மனித சக்திகளுக்கு அப்பாற்பட்ட விடயங்களை ஏழாம் எண்ணுக்குள் அடைத்தார்கள். சப்த ரிஷிகள், சப்த ஸ்வரங்கள், சப்த கன்னிகள், சப்த லோகங்கள், சப்த நாடிகள் என்று அனைத்து மறைமுக விடயங்களையும் ஏழாம் எண்ணுக்குள் அடைக்கி வைத்தனர். கேது ஆதிக்கத்தினர் அலங்காரமில்லாத தூய ஆடைகளையே அணிவார்கள். கண்ணியமானவர்கள். உயரமான தோற்றமும் ஒருவித வசீகரமும் இருக்கும். அவ்வப்போது மாறுபாட்டை ஏற்படுத்திக் கொண்டே இருப்பார்கள்.

முன்கோபம், அபிப்பிராய பேதங்கள், ஏகாந்தப் பிரியம், ஏக்கமான தோற்றம், இனிய இல்லறத் துணை அமையாமை, தீவிரவாதக் குணம், துன்பத்தை அதிகம் அனுபவித்தல், மாற்றுக் கருத்தை வெளியிடுதல், எதிர்வாதம் எப்போதும் செய்தல், எதிர் அணியின் பலத்தை கூட்டப் பாடுபடுத்ல் இவற்றையே பிறவிக் குணம்போல பெற்றிருப்பார்கள். உடல்பலம் குறைந்து மனம் பலம் நிறைவாக இருந்தாலும் வீண் கற்பனையால் மனதை கலக்கமுறச் செய்வார்கள்.




உயர்ந்த எண்ணங்கள், மகிழ்ச்சியான சூழ்நிலைகளே இவர்கள் கவனத்தை பெரிதும் ஈர்க்கும். அப்போதுதான் சோர்வடையாமல் இருப்பார்கள். சுதந்திரமும் தனித்துவமான பாதையும் இவர்களுடையது. ஒருவித சக்தியின் வியாபிப்பினால் மகான்களாக மாறுவார்கள். சித்தர்கள் போல மற்றவர்கள் வாழ்க்கையை சிறப்படையச் செய்வார்கள்.

மற்றவர்கள் தங்களைப் பின்பற்றி நடக்கும் படி குருவாகவும் இருப்பார்கள். சுத்தமான ஆடைகளை அணிவார்கள். அலங்காரப் பிரியர்கள். கலகலப்பாக பழக மாட்டார்கள். வார்த்தைகளை நிதானமாகவே உபயோகிப்பார்கள். தன்னம்பிக்கை மிகுந்து காணப்படும். தன்னம்பிக்கை இல்லாதபோது மௌனம் சாதிப்பார்கள். திடீரென்று வாயாடியைப்போல பேசுவார்கள். ஊமை என்று நினைக்கும் அளவு அமைதியாக இருக்கக் கூடியவர்கள். இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அபிப்பிராயப் பேதங்கள் இருந்து கொண்டே இருக்கும். இதனால் நண்பர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள். இவர்களிடம் அதிகமாக மற்றவர்கள் நெருங்கப் பயப்படுவார்கள். இவர்களுக்கு உண்மையான நண்பர்களும் மனமொத்த மனைவியும் அமைவது கடினம். எதற்கும் சட்டென்று ஆத்திரப் படுவார்கள். மனித உல்லா சத்தைவிட ஏகாந்த வாசமே இவர்களுக்குப் பிடிக்கும். எவ்வளவு துன்பம் வந்தா லும் மற்றவர்களிடம் சொல்லி ஆறுதல் அடைய மாட்டார்கள்.

மனதிற்குள்ளேயே புழுங்கிக்கொள்வார்கள். ஒரு சிலர் பிறவியிலேயே கலை நாட்டத்துடன் தீவிரமாக ஈடுபட்டு வெற்றி பெறுவார்கள். ஒரு சிலர் கலைப் பற்று அறவே இல்லாமல் இருப்பார்கள். பொழுதையெல்லாம் வீணடிப்பது அறிவின்மை என்று பறை சாற்றுவார்கள். சங்கீதம், கவிதை, பேச்சு, நடனம், இரசாயன ஆராய்ச்சி போன்றவை இவர்களின் பிறவிச் சொத்தாகும். தீவிரமான தேசப்பற்று உடையவர்கள். காலம் செல்லச் செல்லக் குணத்தை மாற்றிக் கொள்வார்கள். தீவிரமாகத் தியானம் செய்வார்கள். பலமில்லாத எதிர்க்கட்சிகளில் சேர்ந்து அதன் பலத்தை அதிகரிக்க முற்படுவார்கள். பலமிக்க அணி என்று கூறுமளவிற்கு எதிர்க்கட்சியை உருவாக்குவார்கள்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

55

# யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி. 1200-கி.பி. 1500)



“ கஜபாகு, விக்கிரமபாகு என்போர் பொலநறுவை இராச்சியத்தை ஆள்கின்றார்கள். அதன்பின் முதலாம் பராக்கிரமபாகு ஆட்சியைத் தொடர்கின்றான். இவன் ஆட்சிக் காலத்தில் சிறிதுகாலம் யாழ்ப்பாண அரசு அவனது மேலாண்மையை ஏற்றிருந்தது. அதன் பின்னர் நிஸ்ஸங்க மல்லனின் ஆட்சி தொடங்கியது. இவன் தமிழர்களுக்கு எதிரானவன் அல்ல. எனவே சோழர் இலங்கையை விட்டுப் போனதில் இருந்து பொலநறுவை இராச்சியம் வீழ்ச்சியடையும் வரை யாழ்ப்பாண அரசை யாழ்ப்பாண அரசர்களே ஆண்டிருக்கலாம் ”

வலிமையுள்ள ஓர் அரசு, வலிமை குறைந்த ஓர் அரசை அடிமைப் படுத்துவதும் பின்னர் வலிமை குறைந்த அந்த அரசு வலிமை பெறும் போது, ஏற்கனவே வலிமை பெற்ற அரசை அடிமைப்படுத்தும் அரசியல் ஆதிக்கத்தில் இயல்பாக நடைபெறுபவையாகும்.

இதற்கு இலங்கையின் சிங்கள-தமிழ் அரசியல் வரலாறுகள் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகக் காணப் படுகின்றன. இந்தியாவிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலும் இதே மாதிரியான ஒரு நிலையே இருந்திருக்கின்றது என்பதை முன்னைய அத்தியாயங்களிலிருந்து அறிமுடிகிறது.

சுருங்கக்கூறின், யாழ்ப்பாண அரசு வரலாற்றுக் காலத்திலிருந்து தோன்றி வளர்ந்த ஓர் அரசாகும். அவ்அரசு கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியமாக உயர்ச்சி பெறும்வரை வரலாற்றுக் காலங்களிலிருந்து ஒரு சிற்றரசு என்ற நிலைமையில் இருந்திருக்கிறது.

அக்காலங்களில், அநுராதபுர, பொலநறுவை இராச்சியங்களின் மேலாண்மை சிற்சில காலப்பகுதியில் இடம் பெற்றிருக்கின்றன என்பதனையும் வரலாற்று ஆதாரங்கள் மூலம் அறியமுடிகிறது. சோழராட்சி இலங்கையில் எழுபத்தியேழு வருடங்கள் தொடர்ந்து நடைபெற்றதன் விளைவாக, வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தனித்தன்மை கொண்ட தமிழ் இராச்சியமொன்று தோன்றி வளர அத்திபாரம் இட்டுக் கொடுக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை.

ஆனால், மேற்படி காலத்தில் அவ்வாறான ஒரு சிற்றரசு, ஒரு பேரரசாக அல்லது ஒரு இராச்சியமாக வளர்நிலை அடையும் பொழுது, முதலில் கலிங்கத்திலிருந்து வந்த கலிங்க மாகனும், அவனைத் தொடர்ந்து சாவகத்திலிருந்து வந்த சந்திரபானுவும், பின்னர் அவனது மகனும் ஆட்சி செய்திருந்தார்கள். இவ்வேளையில் தென்னிந்தியாவில் எழுச்சி பெற்ற இரண்டாம் பாண்டிய அரசு யாழ்ப்பாண இராச்சியத்தின் மேல் படையெடுத்து, அவ் இராச்சியத்தினை இராமேஸ்வரத்திலுள்ள வம்சத்தினர் ஆட்சி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டமை மேலே கூறப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் வரலாற்று மாணவன் ஒருவனுக்கு சில கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாகும்.அதாவது, யாழ்ப்பாண இராச்சியம், தோன்றி வளர்ச்சி பெறும் போது, இலங்கையில் உள்ள பூர்வீகத் தமிழ் அரசர்களால் அல்லது அவர்களது வம்சங்களினால் அந்த யாழ்ப்பாண இராச்சியம் ஆளப் படவில்லையா? என்றும், ஆரியச் சக்கரவர்த்திகள், யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆட்சி செய்தமையை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ள முடியும்? என்றும் எழுகின்ற இவ் இரண்டு முக்கியமான கேள்விகளுக்கும் பின்வருமாறு விடைகளைக் கூறுவது பொருத்தமா? என்பது, எதிர்கால ஆய்வுக்குரியதாக அமைகின்றது.

முதலாவதாக, சோழர் பொலநறுவையை ஆட்சி பீடமாகக் கொண்டு இலங்கை முழுவதையும் ஆட்சி செய்தபோது தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்கனவே ஆட்சிசெய்த அரச அமைப்புகளின் அரசர்கள் அல்லது அதிகாரிகள் அப் பிரதேசங்களுக்குரிய ஆளுநர்களாக சோழ அரசினால் நியமிக்கப்பட்டிருக்கலாம். இரண்டாவதாக, சோழராட்சியைத் தொடர்ந்து பொலநறுவையில் சிங்கள மன்னர் ஆட்சி செய்த போது, தமிழ்ப் பிரதேசங்கள் தமிழரால் ஆளப்பட்டிருக்கலாம்.

மேலும் 1070களில் சோழராட்சி இலங்கையிலிருந்து நீங்கிய பின்னர் விஜயபாகு பொலநறுவையில் தனது ஆட்சியைத் தொடர்கின்றான். அவனுக்குப் பின்னர் முறையே, கஜபாகு, விக்கிரமபாகு என்போர் பொலநறுவை இராச்சியத்தை ஆள்கின்றார்கள். அதன்பின் முதலாம் பராக்கிரமபாகு ஆட்சியைத் தொடர்கின்றான்.

இவன் ஆட்சிக்காலத்தில் சிறிது காலம் யாழ்ப்பாண அரசு அவனது மேலாண்மையை ஏற்றிருந்தது. அதன் பின்னர் நிஸ்ஸங்க மல்லனின் ஆட்சி தொடங்கியது. இவன் தமிழர்களுக்கு எதிரானவன் அல்ல. எனவே சோழர் இலங்கையை விட்டுப் போனதில் இருந்து, பொலநறுவை இராச்சியம் வீழ்ச்சியடையும் வரை யாழ்ப்பாண அரசை யாழ்ப்பாண அரசர்களே ஆண்டிருக்கலாம்.

மூன்றாவதாக, பொலநறுவையில் சிங்கள இராச்சியம் வீழ்ச்சியடைந்து, அங்கிருந்து கலிங்கமாகன் நீக்கப்படுகின்றான். அவன் தன் படைபலத்தால், தமிழ் இராச்சியத்தைக் கைப்பற்றியிருக்கலாம் அல்லது தமிழ்ப் பிரதேசத்திலுள்ள ஆட்சியாளர்கள் மாகனை ஏற்றிருக்கலாம். அதே போன்று, சாவக மன்னன் ஆட்சியும் இடம் பெற்றிருக்கலாம்.

பாண்டிய மன்னன் மாறவர்மன் குலசேகரன் இலங்கைமீது படையெடுத்து, யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றிகொண்டு, திறை பெறும் உரிமையுடன் பாண்டிய நாட்டுக்குத் திரும்புகின்றான். சிறிது காலத்திற்குப் பின் குலசேகர பாண்டியனின் படையெடுப்பின் போது படைத்தளபதிகளாக வந்த ஆரியச்சக்கரவர்த்திகள் யாழ்ப்பாண இராச்சியத்தில் அரசராகின்றனர் எனத் தமிழ் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

இவர்கள் இங்கு வந்து அரசர்களானதற்கான எதுவித நேரடி ஆதாரங்களும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. யாழ்ப்பாண இராச்சியத்திற்கு வெளியே கிடைக்கப்பெற்ற ஒரு சில மூலாதாரங்களில், அவர்கள் பயன்படுத்திய இலச்சினை, கொடி போன்றவையும் ஆரியச் க்கரவர்த்திகள் என்ற பெயர்களும் காணப்படுவதால் இராமேஸ்வரத்திருந்து வந்த ஆரியச்சக்கரவர்த்திகளே யாழ்ப்பாண இராச்சியத்தில் பல ஆண்டு காலம் ஆட்சி செய்தனர் என்று அனுமானத்தின் அடிப்படையில் கருதமுடிகிறது.

அதனால் ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற தமிழ்நாட்டு வம்சப் பெயர்களையும் அவர்கள் உபயோகித்த சேது நாணயம், நந்திக்கொடி போன்றவற்றையும் யாழ்ப்பாணத்துத் தமிழ் அரசர்கள் ஏற்றிருக்கலாம். அவ்வாறு, யாழ்ப்பாணத் தமிழ் அரசர் ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற வம்சப் பெயரை பாவித்ததனால், அவ் ஆவணங்களில், அல்லது மூலாதாரங்களில் ஆரியச் சக்கரவர்த்தி என்றபெயர் தொடர்ச்சியாகப் பாவிக்கப் படுகின்ற ஒரு வரலாற்று மரபு வந்திருக்கலாம்.

பதினேழாம், பதினெ ட்டாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட தமிழ் வரலாற்று நூல்களில் ஆரியச் சக்கரவர்த்தி என்ற வம்சப் பெயர் வருவதற்கான காரணம், தென்னிந்திய, சிங்களப் பாரம்பரியங்களைப் பின்பற்றி, ஐதீகங்களையும் சேர்த்து ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற வம்சப் பெயரை உட்புகுத்தி யாழ்ப்பாண இராச்சிய வரலாற்றை எழுதியமையாய் இருக்கலாம்.

இதற்கு சிறந்த உதாரணமாக, கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை போன்ற தமிழ் வரலாற்று நூல்களில் வரும் உக்கிரசிங்கன் கதை, மாருதப்புரவல்லி கதை, விசயகூழங்கைச் சக்கரவர்த்தி கதை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இறுதியாக, தென்னிந்தியாவில், பாண்டியப் பேரரசு வீழ்ச்சியுற்று, விஜயநகரப் பேரரசு எழுச்சி பெற்றது என்றும், ஆறாம் பராக்கிரமபாகுவின் கோட்டை இராச்சியம் வீழ்ச்சியுற்றது என்றும் மேலே கூறப்பட்டது. அத்தோடு பதினேழு வருடங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட செண்பகப்பெருமாள், கோட்டை அரசில் ஆறாம் பராக்கிரமபாகு இறக்க, புவனேகபாகு என்ற பெயருடன் அதன் அரசனானான் என்றும் கூறப்பட்டது.

அதற்குப் பின் வருகின்ற எந்த ஒரு வரலாற்று ஏட்டிலும் ஆரியச் சக்கரவர்த்திகள் பற்றிய, வம்ச வரலாற்றுப் பெயர் காணப்படவில்லை.

(தொடரும்)

# நீண்டு செல்லும் கொலைப் பட்டியல் இந்தியரின் வாக்குமூலத்தில் அதிர்ச்சி

## மகிந்தவின் குடும்பமும் உள்ளடக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்ய சதி செய்யும் விதமாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா தொலைபேசியில் கலந்துரையாடியதாகக் கூறப்படும் விடயம் தொடர்பில், சி.ஐ.டி.முன்னெடுக்கும் விசாரணைகளில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள இந்தியரின் வாக்கு மூலத்தில் பல அதிர்ச்சி தரும் விடயங்கள் வெளிப் படுத்தப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரது மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோரை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக குறித்த இந்தியர் சி.ஐ.டி.க்கு தெரிவித்ததாகவும், எனினும் அவர் அது தொடர்பில் மேலதிக விடயங்களை வெளிப்படுத்தாத நிலையில் பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்து வருவதாகவும் சி.ஐ.டி.யின் உதவி பொலிஸ் அத்தியட்சர் இந்திக லொக்குஹெட்டி மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முணசிங்க ஆகியோர் கோட்டை நீதவான் லங்கா ஜெயரத்னவுக்கு அறிவித்தனர்.

அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய சதி செய்யும் விதமாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா தொலைபேசியில் கலந்துரையாடியதாக கூறப்படும் விடயம் தொடர்பில், குறித்த கலந்துரையாடல் பதிவு செய்யப்பட்ட தொலைபேசியை அரச இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்தியுள்ள நிலையில், அதில் உள்ள குரல்களை உறுதி செய்ய முறைப்பாட்டாளர் நாமல் குமாரவை குரல் சோதனைக்கு உட்படுத்தவும் சி.ஐ.டி. நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக் கொண்டது.

சி.ஐ.டியின் உதவி பொலிஸ் அத்தியட்சர் இந்திக சில்வா, பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முணசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் கே.எம்.எம். குமாரசிங்க ஆகியோர் இடையீட்டு மனுவூடாக கோட்டை நீதவானுக்கு அறிக்கை சமர்ப்பித்து இந்த அனுமதியைப் பெற்றுக்கொண்டனர்.

இதன்போது கோட்டை நீதவான் லங்கா ஜெயரத்ன, இந்த விவகாரத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பில் சி.ஐ.டி.யிடம் கேள்வி எழுப்பினார். இதற்கு சி.ஐ.டி. உதவி பொலிஸ் அத்தியட்சர் இந்திகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முணசிங்கவும் பதிலளித்தனர்.

அவர்களது பதிலில், "இந்த விவகாரத்தில் சந்தேகத்தின் பேரில் இந்தியர் ஒருவரை நாம் கைது செய்துள்ளோம். முறைப்பாட்டாளரின் வீட்டுக்கு அவரைத் தேடிச் சென்று சந்தேகத்துக்கு உரிய முறையில் நடந்துகொண்டமையால் அதனைமையப்படுத்தி அவரை கடந்த வாரம் கைது செய்தோம். சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட அவரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிக்கின்றோம். இதற்கான அனுமதியை பாதுகாப்பு செயலாளர் ஊடாக பெற்றுள்ளோம். இந்த இந்தியர் கடந்த பெப்ரவரி மாதமே இலங்கைக்கு வந்துள்ளார். அவர் தற்போது இங்கு தங்கியிருக்க சட்ட ரீதியிலான் அனுமதி பெற்ற விசா அவரிடம் இல்லை. அவர் இங்கு வந்து ராகம பகுதியில் 2500 ரூபா மாத வாடகைக்கு அறையெடுத்து தங்கியிருந்துள்ளார்.

அவரால் சிங்கள மொழி ஓரளவு பேச முடிகின்றது. எனினும் ஆங்கிலத்தில் சரளமாக பேசுகிறார். அவரிடம் நாம் வாக்கு மூலம் பெற்றோம். அதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரது மனைவி மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால ஆகியோரை கொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக கூறுகின்றார். எனினும் அது குறித்த மேலதிக தகவல்களை அவர் வெளிப்படுத்தவில்லை. இதனைவிட அந்த சதி குறித்து அவர் எந்த உத்தியோகபூர்வ இடங்களுக்கோ நபர்களுக்கோ முறைப்பாடுகளையோ தகவல் அளிப்புக்களையோ செய்யவில்லை. இவ்வாறான பின்னணியில் மேலதிக விசாரணைகளை நாம் பயங்கரவாதத் தடை சட்ட விதிவிதானங்களின் பிரகாரம் முன்னெடுத்து வருகின்றோம்" என்றனர்.

இதனையடுத்து இது குறித்து விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதவான் லங்கா ஜெயரத்ன, அதுவரை அது குறித்த வழக்கை நிலுவையில் வைக்க உத்தரவிட்டார். (இ-7)

# மங்களவின் டுவிட்டர் பதிவு அரசாங்கத்தின் கருத்தா?

## மகிந்த கேள்வி

(கொழும்பு)

கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை மனித உரிமைகள் தொடர்பில் வெளியிட்டிருந்த அறிவிப்புக்கு அமைச்சர் மங்கள சமரவீர விடுத்திருந்த பதில் அரசாங்கத்தின் நிலைப்பாடா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த பல நூற்றாண்டு காலம் சமய ரீதியில் செயற்பட்டு வரும் இலங்கை போன்ற நாட்டுக்கு மனித உரிமைகள் தொடர்பான பாடத்தை சொல்லிக் கொடுக்க மேலைத்தேயர்கள் முயற்சிக்கின்றனர் என கர்தினால் மல்கம் ரஞ்ஜித் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்தை விமர்சிக்கும் வகையில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் தனது டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்திருந்தார்.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் தேவை கத்தோலிக்க சமயத்தை ஏற்றுக் கொள்ளாத மற்றும் அந்த சமயம் தொடர்பில் வினா எழுப்பிய நபர்கள் அன்று துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இதனாலேயே மனித உரிமை தேவைப்பட்டது.

கர்தினால் ஆண்டகை பிரபல்யமாக வேண்டும் என்பதற்காக முன்னெடுக்கும் எல்லா நடவடிக்கையையும் தவறவிடுவதாகவும் அமைச்சர் தனது டுவிட்டர் தளத்தில் பதிவேற்றம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆழ்கடலில் மண் அகழ்ந்து கரையோரத்தை மீள்நிரப்பவும்

## ஜனாதிபதியிடம் பைசல் கோரிக்கை



(ஒலுவில்)

ஒலுவில் கடலரிப்பை உடனடியாகத் தடுக்கும் வகையில் ஆழ்கடலில் இருந்து மண்ணை அகழ்ந்து கரையோரத்தை மீள் நிரப்பும் செயற்றிட்டத்தை உடன் மேற்கொள்ளுமாறு சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காசீம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டபோது அது அப்பகுதி மக்களுக்கு விடிவைக் கொண்டு வரும் என்று எல்லோரும் மகிழ்ச்சியடைந்திருந்தனர். ஆனால், அது அழிவையே கொண்டு வரும் என்று யாரும் நினைத்திருக்கவில்லை.

இதன் நிர்மாணப் பணிக்காக மக்கள் காணிகளை இழந்தது ஒருபுறமிருக்க அவர்களை மேலும் துன்பத்துக்கு உள்ளாக்கும் வகையில் இப்போது நாலாயிரம் மீனவர்களின் வாழ்வும் பாதிக்கப்பட்டுள்ளது. கரைவலை மூலம் மீன் பிடித்து வாழ்வை நடத்தி வந்த இம்மக்களின் வாழ்வு இன்று கேள்விக் குறியாகியுள்ளது.

இது தொடர்பில் நான் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர, துறைமுக அபிவிருத்தி அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை அழைத்துச் சென்று காண்பித்துள்ளேன். இருப்பினும் நிரந்தரத் தீர்வுகள் எவையும் முன்வைப்படவில்லை. இதனால் கடலரிப்பின் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

பாறாங்கற்களைப் போட்டு இதைத் தடுக்க முடியாது. அவை கரைவலை மீனவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே, வென்னப்புவ போன்ற இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றிபெற்ற ஆழ்கடலில் இருந்து மண்ணை அகழ்ந்து கரையோரத்தை மீள் நிரப்பும் செயற்பாட்டின் மூலமாகவே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணமுடியும்.

ஆகவே, இந்தத் திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்தி பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களையும் ஊர்களையும் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நான் உங்களிடம் தாழ்மையாக வேண்டிக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனநாயக ஆட்சி இல்லை

# தோல்விக்கு அஞ்சும் அரசு தேர்தலைப் பிற்போடுகிறது

(கொழும்பு)

தேர்தல் தோல்விக்கு அஞ்சியே அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்தி வருகின்றது எனவும் மக்கள் பிரதிநிதிகள் அற்ற ஆட்சி ஜனநாயக ஆட்சியாக இருக்க முடியாது எனத் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணசபையின் மக்கள் பிரதிநிதிகள் அற்ற ஆட்சிக்கு ஒரு வருடமாகியுள்ளது என தெரிவித்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2017 செப்டெம்பர் 26 ஆம் திகதி சப்ரகமுவ மாகாணசபையின் ஆட்சிக்காலம் நிறைவடைந்தது. இற்றைக்கு ஒருவருடமாக மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாணசபை நிர்வகிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலூடாக தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் அற்ற ஆட்சியில் ஜனநாயகம் இல்லை. மாகாணசபை தேர்தல் இடம்பெறும் திகதி தொடர்பில் எந்த எதிர்பார்ப்பும் இல்லாததொரு சூழலே தற்போது ஏற்பட்டுள்ளது.

இற்றைக்கு ஒருவருடத்துக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்படுத்தும் நோக்கில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை முன்வைத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அதன் பிரதான நோக்கமாக இருந்தது தேர்தலை பிற்படுத்துவதே அன்றி, தேர்தல் முறைமையில் திருத்தம் மேற்கொள்வதல்ல என்பது தற்போது தெளிவாகின்றது என அந்த அமைப்பு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# பல்வேறு உதவிப் பொருட்கள் வழங்கல்






(பொற்பதி)

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைத்தலைமையகம் 55 ஆவது படைப்பிரிவு லயன்ஸ் (கொழும்பு) கழகமும் இணைந்து பொது வேலைத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளன. இந்த நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை வெற்றிலைக் கேணி புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

கட்டைக்காடு பங்குத் தந்தை அருட்திரு மைக்றொனால்டின் அழைப்பிற்கமைவாக இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் இப்பகுதி பாடசாலை மாணவர்கள் 250 பேருக்கு கற்றல் உபகரண பொதியும் 20 கர்ப்பிணிகளுக்குப் பல்வேறு பொருட்கள் அடங்கிய பொதியும் மாற்றுவலுவுடையோர் ஐவருக்கு சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள, ஆசிரியர்கள், அதிபர்கள், மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், யாழ். இராணுவக் கட்டளைத்தளபதி மற்றும் இராணுவத்தினர், மக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (படங்கள் பொற்பதி செய்தியாளர்)

# முதலாவது பாராளுமன்றத் தேர்தலின் பின் நடந்த அரசியல் மாற்றங்களும் தமிழர் பிரச்சினையும் 03



கலாநிதி
க. தவலிங்கம்,
தவிசாளர் - எல்லை
நிர்ணய ஆணைக்குழு



டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க



பீட்டர் கெனமன்



என். சண்முகதாசன்



வி. பொன்னம்பலம்

இடதுசாரி அரசியல் ஆழ்ந்த தத்துவங்களைக் கொண்டிருந்தாலும் பொதுவாக இது சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுடைய நலன்கள் கவனிக்கப்பட வேண்டும் என்றும், சமூகத்தில் காணப்படும் நியாயமல்லாத சமத்துவமின்மைகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் அல்லது குறைக்கப்பட வேண்டும் என்றும் கருதுகிறது. இதேபோல் ஏற்கனவே உள்ள சமூக, பண்பாட்டு பெறுமதிகளை அப்படியே காக்க முனைகின்ற அரசியல், தனிச்சொத்துடைமையை, முதலாளிய, நிலவுடைமைக் கட்டமைப்பை பேண நினைப்பவர்கள், சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் மதம் உட்பட பல கட்டமைப்புக்களை நியாயப்படுத்தவும் பேணிக்காக்கவும் விரும்புபவர்கள் வலதுசாரிகள் எனப்படுவார்கள். உதாரணமாக சேகுவாரா ஒரு இடதுசாரி. நேருவும் இடதுசாரிதான். முன்னவர் பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத போராளி, பின்னவர் ஜனநாயகவாதி. எனவே, இந்த வலது /இடது என்ற சொற்கள், முன்முடிவுகளை அளித்து, ஒருவரை பற்றிய சரியான எடைபோடுதலை செய்யவிடாமல் குழப்பும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் இருந்து பெயர் பெற்ற இடதுசாரிகள் தோன்றினர். காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த இலங்கைத்தீவை விடுதலை பெற்ற ஒரு நாடாக்குவதிலும் ஜனநாயகம், சோசலிசம், இன ஐக்கியம் போன்ற கொள்கைகளை இலட்சியபூர்வமாய் முன்வைத்த தலைவர்களாகவும் மேற்படி இடதுசாரிகள் முதலில் காணப்பட்டனர். 1956ஆம்ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச்சிங்கள சட்டத்தின் பின்னர் அவர்களின் சிந்தனையில் பெரிய மாற்றம் ஏற்பட்டதோடு தமிழர் மத்தியில் அவர்களது செல்வாக்கும் அற்றுப் போகத் தொடங்கியது. இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்று வளர்ச்சியில் சாதகமான பாதகமான அம்சங்கள் பலதை காண முடியும். பாராளுமன்றப் பாதை என்ற சந்தர்ப்பவாத அரசியலானது இவ் ஆரம்பகால இடதுசாரிகளை சீரழித்து செயலிழக்கச் செய்துவிட்டது. அது மட்டுமன்றி அதிகார மோகத்தால் பேரினவாத முதலாளித்துவத்திற்கும் அவை தம்மைப் பலியாக்கிக் கொண்டன.

### சி.சுந்தரலிங்கம், அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி துறத்தல்

அன்றைய அரசாங்கத்தில் வர்த்தக மற்றும் வணிகத் தொடர்பு அமைச்சராகவிருந்த வவுனியா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சி. சுந்தரலிங்கம் இந்திய வம்சாவளியினரின் பிரஜாவுரிமையைப் பறித்த சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தார். ஆனாலும், 1948 டிசெம்பர் 10 இல் சமர்ப்பிக்கப்பட்ட "இந்தியப் பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம்" பாராளுமன்றத்தில் வாக்களிப்புக்கு விடப்பட்ட போது அவர் வெளிநடப்புச் செய்தார். அன்றைய பிரதமர் இவரது நடத்தை குறித்துக் கேள்வி எழுப்பியதை அடுத்து, தனது அமைச்சர் பதவியைத் துறந்தார். 1951ஆம் ஆண்டில் இலங்கையின் தேசியக் கொடியாக சிங்கக் கொடி ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்து சுந்தரலிங்கம் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார். இதையடுத்து 1951 ஒக்டோபர் மாதம் 31இல் வெற்றிடமான வவுனியா தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலில் அவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

### தேசியக்கொடியின் வரலாறு

இலங்கை அரசியலில் தேசியக் கொடி பற்றிய விவாதங்கள் அடிக்கடி எழுகின்றன. தேசியக்கொடியின் வடிமைப்பின் வரலாறு பற்றிச் சில தகவல்களை நினைவுகூருவது பயன்தரும். இது பற்றி **samuthran.net** இல் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. "1948ஆம்ஆண்டு இரண்டாம் மாதம் இலங்கை பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற போது 1815ஆம் ஆண்டு பிரிட்டிஷ் காலனித்துவத்தால் கைப்பற்றப்பட்ட கண்டி இராச்சியத்தின் கொடியாய் விளங்கிய சிங்கக்கொடியே முழு இலங்கையின் தேசியக்கொடியாகப் பயன்படுத்தப்பட்டது.







கண்டி இராஜ்யத்தின் கொடியாய் விளங்கிய சிங்கக்கொடியைக் கொண்ட 15சத தபால் முத்திரை

1948 மூன்றாம் மாதம் பின்வரும் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு 'தேசியக்கொடி செயற்குழு' நியமிக்கப்பட்டது. **S.W.R.D** பண்டாரநாயக்க (தலைவர்), சேர் ஜோன் கொத்தலாவல, **J.R.** ஜயவர்த்தன, **T.B.** ஜயா, **L.A.** ராஜபக்ஷ, **G.G.** பொன்னம்பலம் மற்றும் **S.** நடேசன்.

ஒரு இலங்கைத் தேசியக் கொடியை வடிவமைப்பதில் இந்தச் செயற்குழுவிற்குள் முரண்பாடுகள் தோன்றின. நடேசனின் கருத்தால் ஏறக்குறைய இரண்டு வருடங்களாக செயற்குழு ஒருமித்த கருத்தை அடையக்கூடிய சாத்தியப்பாடுகள் அற்பமாகவே இருந்தபோதும் இறுதிநேரத்தில் **G.G.** பொன்னம்பலத்தின் சமரச ஆலோசனையைப் பெரும்பான்மையினர் ஏற்றுக் கொண்டனர். அப்பொழுது **D.S.**சேனநாயக்க அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த பொன்னம்பலம் சிங்கக்கொடியின் ஒரு புறத்தில் தமிழர் மற்றும் முஸ்லிம்களைக் குறிக்கும் சின்னங்களாக முறையே ஒரு மஞ்சள் மற்றும் பச்சைக் கோட்டினை உள்ளடக்கும்படி ஆலோசனை வழங்கினார். இதை நடேசனைத் தவிர மற்றைய அங்கத்தவர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். தனது முடிவுக்கான காரணங்களை விளக்கித் தனியான அறிக்கை ஒன்றினை நடேசன் கையளித்தார். அதில் அவர் வலியுறுத்திய முக்கிய கருத்து செயற்குழுவினால் வடிவமைக்கப்பட்ட கொடி நாட்டின் சகல இனங்களின் ஒருமைப்பாட்டைக் குறிக்காது பிரிவினையையே வெளிக்காட்டுகிறது என்பதாகும். தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் சின்னங்களாக வரையப்பட்ட இரு கோடுகளும் சிங்கக்கொடியைச் சுற்றியுள்ள தங்க



இலங்கைத் தேசியக்கொடி

நிற எல்லைக் கோட்டிற்கு வெளியே இருப்பது பிரிவினையையே குறிக்கிறது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். அந்த இரு கோடுகளும் தேசியக்கொடியின் பிற்சேர்க்கைகள் போலவே தெரிகின்றன எனவும் கூறினார். பிரிவினையைக் குறிப்பதுபோல் அமைந்துள்ள அந்த எல்லைக் கோட்டை நீக்குவதன் மூலம் மூன்று மக்களையும் தொடர்புபடுத்தும் குறியீடாகக் கொடியை மாற்றலாம் எனவும் ஆலோசனை வழங்கினார். ஆனால் அந்த நியாயமான ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆரம்பத்தில் நடேசன் மஞ்சள், சிவப்பு, வெள்ளை அல்லது மஞ்சள், சிவப்பு, பச்சை மூவர்ணங்களைக் கொண்ட ஒரு கொடியை வடிவமைக்கும் ஆலோசனையை முன்வைத்தார்.

ஆனால் அது சிங்கச் சின்னத்தின் முக்கியத்துவத்தின் பிரதிபலிப்பைப் பாதிக்குமென பல அங்கத்தவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். அந்த ஆலோசனையும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தேசியக்கொடி நாட்டின் சகல சமூகங்களையும் ஒருங்கிணைக்கும் பரந்த சிந்தனையின் சின்னமாக விளங்க வேண்டும் என்பதே நடேசனின் வாதம். ஆனால் சிங்கள-பௌத்தமெனும் ஒரு இன-மத இணைப்பிற்கே இலங்கைத் தேசியக் கொடியில் மேலாதிக்க அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

கொடியில் மைய முக்கியத்துவம் பெறும் வாளேந்திய சிங்கம் சிங்கள சமூகத்தின் வீரத்தையும், நான்கு மூலைகளிலும் காணப்படும் அரச இலைகள் பௌத்தத்தின் நான்கு விழுமியங்களான அன்புடைமை (மைத்ரீ அல்லது மெத்த), கருணை (கருணா), பரிவிரக்கமுடைய ஆனந்தம் (முடித்த), சாந்தம் (உபேக்கா) ஆகியவற்றையும் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது." இதுதான் **samuthran.net** இல் கூறப்பட்டிருந்த கருத்தாகும்.

இக்கொடியே தற்போது இலங்கையில் பயன்பாட்டில் உள்ளது. அன்றைய காலத்தில் இக் கொடியில் நந்தியும் இடம்பெற வேண்டுமென சி. சுந்தரலிங்கம் வாதிட்டார். அது பயனளிக்காததால் அவர் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார். **S.** நடேசன் தேசியக் கொடியை எதிர்த்தபோதும் அடுத்து வந்த தேர்தலில் காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

### சகல சமூகங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய கீதம்

இலங்கையின் இயற்கை வளம், அழகு என்பவற்றை எடுத்துக் கூறும் இலங்கையின் தேசிய கீதம், இலங்கையர்களுக்கு இலங்கைத் தாயின் முக்கியத்துவம் பற்றியும் விபரிக்கிறது. நாட்டின் சகல பிரிவினருக்கும் இடையேயான ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் இப்பாடல் நாட்டுப்பற்றை ஊட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

# சிறுவர் அரங்கம்

## மானமே பெரிது

சோழ நாட்டின் தலைநகரம் காவிரிப் பூம்பட்டினம்.

அரசவை கூடியுள்ளது. அரியணையில் அரசர் பெருவளத்தான் பெருமிதத்துடன் அமர்ந்து உள்ளார். அமைச்சர்களும் படைத் தலைவனும் அவையினரும் இருக்கைகளில் அமர்ந்து உள்ளனர்.

"அமைச்சரே! சேர நாட்டின் மீது போர் தொடுக்க முடிவு செய்தோம். முறைப்படி நம் தூதரை அந்த நாட்டிற்கு அனுப்பி வைத்தோம். எங்கு எப்பொழுது இரு நாட்டுப் படைகளும் போரிடுவது? இது குறித்து சேர நாட்டு அரசரே முடிவு செய்ய வேண்டும் என்றோம். இதுவரை அந்த அரசரிடம் இருந்து எந்தச் செய்தியும் இல்லை"

"வெற்றி வேந்தே! சேர அரசரும் போருக்கு அஞ்சுபவர் அல்லர். எங்கு போர் செய்வது? ஏற்ற இடத்தைத் தேர்ந்து எடுப்பதில் தாமதம் என்று நினைக்கிறேன். விரைவில் செய்தி வரும்" என்றார் அமைச்சர்.

அப்பொழுது வீரன் ஒருவன் அரசவைக்குள் வந்தான். அரசரைப் பணிவாக வணங்கினான்.

"காவிரி நாடே வாழி! வெற்றி வேந்தே வாழி! நீதிநெறி தவறாத வேந்தே வாழி" என்று வணங்கினான்.

"வீரனே! என்ன செய்தி?"

"அரசே! சேர நாட்டுத் தூதர் வந்திருக்கிறார். உங்கள் அனுமதிக்காக வாயிலில் காத்திருக்கிறார்"

"தூதனை உடனே இங்கு அழைத்து வா"

"கட்டளை அரசே" என்று வணங்கிவிட்டு வீரன் சென்றான்.

தூதன் உள்ளே நுழைந்தான். அரசரைப் பணிவா வணங்கினான்.

"அரசே! வாழி! எங்கள் பேரரசர் சேரமான் நெடுஞ்சேரலாதன் செய்தி அனுப்பியுள்ளார்"

"தூதனே! உன் வருகையைத் தான் எதிர்பார்த்து இருந்தோம். அந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொல். எங்களுக்குத் திறை செலுத்த உங்கள் அரசர் ஒப்புக் கொண்டாரா? அல்லது சோழர் பெரும்படையைச் சந்திக்க உள்ளாரா? எதைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்?"



"அரசே! எங்கள் அரசர் பெருமான் வீரர்களுக்கு எல்லாம் வீரர். பகை அரசர்கள் நடுங்கும் பேராற்றல் வாய்ந்தவர். எம் நாட்டு மக்களும் வீர மறவர்கள். போர் வேண்டி எங்கள் நாட்டிற்கு ஓலை வந்தது இல்லை.

உங்கள் ஓலையைக் கண்டு எங்கள் அரசர் மகிழ்ச்சி அடைந்தார். வீரர்களோ நல்விருந்து கிடைத்தது என்று ஆரவாரம் செய்தார்கள்.

போர் என்று முடிவு செய்து விட்டார் எங்கள் அரசர். போரிடுவதற்கு ஏற்ற இடத்தையும் தெரிவு செய்து விட்டார்.

வெண்ணிப் பறந்தலை என்ற இடம்தான் அது. வரும்முழுமதி நாளன்று இரு படைகளும் அங்கே சந்திக்கலாம். இதுதான் எங்கள் அரசர் அனுப்பிய செய்தி" என்றான் தூதன்.

சோழ அரசரை வணங்கி விட்டுப் புறப்பட்டான்.

"அமைச்சரே! கடல் போன்ற பெரும்படை நம்மிடம் உள்ளது. போர்ப் பயிற்சி மிக்க எண்ணற்ற வீரர்கள் உள்ளனர். நம்மை வெல்லும் ஆற்றல் யாருக்கு உளது? நம் பேரரசுக்கு உட்பட்ட சிற்றரசனாக சேரன் இருந்து இருக்கலாம். வீணாக நம்முடன் போரிட்டு அழியப் போகிறான்"

"அரசே! சேர அரசரின் தன்மானம் நமக்குக் கீழ்ப்படிய மறுக்கிறது. வரும் முழுமதி நாள் நம் நாட்டிற்கு வெற்றி நாள். உங்கள் வீரச் சிறப்பை உலகமே அறியும் நன்னாள்" என்றார் அமைச்சர்.

"நன்று சொன்னீர்! அமைச்சரே! படைத்தலைவரே! நம் பெரும் படை நாளையே வெண்ணிப் பறந்தலை நோக்கிப் புறப்படட்டும். சேரர் படையின் வருகைக்காக நாம் அங்கே காத்திருப்போம்.

வீரம் பேசிய அந்தச் சேரனைப் போர்க்களத்தில் நேருக்கு நேர் சந்திக்கிறேன். என் வேலுக்கு அவன் பதில் சொல்லட்டும்"

"கட்டளையை உடனே நிறைவேற்றுகிறேன்" என்றார் படைத் தலைவர். அரசரை வணங்கி விட்டுச் சென்றார்.

சோழர் படை வெண்ணிப் பறந்தலையை அடைந்தது.

"படைத் தலைவரே! இந்த இடம் தான் வெண்ணிப் பறந்தலையா? கண்ணுக்கு எட்டிய தொலைவு மணற்பரப்புத்தான் உள்ளது. செடிகளோ கொடிகளோ மரங்களோ எதுவும் இல்லை.

நல்ல இடத்தைத்தான் சேர அரசர் தேர்ந்து எடுத்துள்ளார்" என்றார் சோழ அரசர்.

"ஆம் அரசே" என்றார் படைத் தலைவர்.

முழுமதி நாள் வந்தது.

காலை நேரம். இரு நாட்டுப் படைகளும் எதிரெதிரே அணி வகுத்து நின்றன.

சோழர் பெரும்படை முன் சேரர் படை சிறுத்துக் காட்சி அளித்தது.

கரிகாற் பெருவளத்தான் சோழர் படைக்குத் தலைமை தாங்கித் தேரில் அமர்ந்தார்.

அதேபோலச் சேரமான் நெடுஞ்சேரலாதனும் தன் தேரில் அமர்ந்தார்.

இரு நாட்டு முரசங்களும் ஒரே நேரத்தில் முழங்கின. போர் தொடங்கியது. வீரர்கள் வீர முழக்கம் செய்தனர். ஒருவரோடு ஒருவர் கடுமையாகப் போரிட்டனர்.

யானைகளின் பிளிறல் ஒரு பக்கம் கேட்டது. குதிரைகளின் கனைப்பொலி இன்னொரு பக்கம் கேட்டது. வாளோடு வாள் மோதும் ஓசை பல இடங்களில் கேட்டது.

எங்கும் ஆரவாரம் இருந்தது.

கரிகாற் பெருவளத்தானும் நெடுஞ்சேரலாதனும் போர்க் களத்தில் நேருக்கு நேர் சந்தித்தனர். சினத்தால் இருவர் கண்களும் தீ உமிழ்ந்தன.

இருவரும் போர் செய்யத் தொடங்கினர். வெற்றி.தோல்வி அறியவே முடியவில்லை. இருவரும் இணையாகப் போர் செய்து கொண்டிருந்தனர்.

கண் இமைக்கும் நேரத்தில் அது நடந்து முடிந்தது.

சோழ அரசர் தன் வேலைச் சேர அரசரின் மார்பில் பாய்ச்சினார். சேர அரசரின் மார்பை ஊடுருவிப் பாய்ந்தது அந்த வேல்.

அப்படியே மண்ணில் சாய்ந்தார் சேர அரசர். அவர் உடலிலிருந்து வழிந்த குருதி நிலத்தைச் செம்மை ஆக்கியது.

"ஆ! நம் அரசர் வீழ்ந்து விட்டார்" என்ற சேர வீரர்களின் அவலக் குரல் எங்கும் கேட்டது.

"நாம் வெற்றி அடைந்து விட்டோம். நம் வீரத்திற்குப் பெருமை சேர்ந்து விட்டது. வீரத்துடன் போரிட்டான் சேர அரசன். என்ன பயன். என்னிடம் தோற்று வீழ்ந்தான்.

வெற்றி அடைந்த நம் படை போரிடுவதை நிறுத்தட்டும். ஆரவாரத்துடன் நாடு திரும்பட்டும்" என்று கட்டளை இட்டார் சோழ அரசர்.

வேல் பாய்ந்ததால் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார் சேர அரசர். வீரர்கள் அவரைப் பாசறைக்குக் கொண்டு சென்றனர்.

அரசரைச் சோதித்த மருத்துவர் "அரசரின் மார்பில் பாய்ந்த வேல் முதுகைத் துளைத்து உள்ளது. ஏராளமான குருதி வெளியேறி விட்டது.

வேலைப் பிடுங்கி விட்டேன். மேலும் குருதி வெளியேறா வண்ணம் மருந்திட்டு உள்ளேன்.

உடனே நம் அரசரை அரண்மனைக்குத் தூக்கிச் செல்லுங்கள். ஆற்றல் வாய்ந்த மூலிகைகள் பல அங்கு உள்ளன. அவர் உயிர் பிழைக்க வாய்ப்பு உண்டு. நாடித் துடிப்பு அடங்கிக் கொண்டே வருகிறது. விரைந்து செயற்படுங்கள்"

மயங்கிக் கிடந்த சேர அரசரைப் பல்லக்கில் வைத்தார்கள் வீரர்கள். பல்லக்கு விரைந்து கருவூரை அடைந்தது.

சோழ நாடெங்கும் விழாக் கோலம் பூண்டது. வீதியெங்கும் தோரணங்கள் கட்டப்பட்டன.

வெற்றியுடன் திரும்பும் அரசரையும் வீரர்களையும் வாழ்த்தொலி எழுப்பி வரவேற்றனர் மக்கள்.

எங்கும் வெற்றி விழாக் கொண்டாட்டங்கள் நிகழ்ந்த வண்ணம் இருந்தன.

(தொடரும்...)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் - 2018.09 28

- 1795-யாழ்ப்பாணத்தை ஜெனரல் ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படைகள் கைப்பற்றினர்.
- 1939-இரண்டாம் உலகப் போர்: போலந்தின் தலைநகர் வார்சா ஜேர்மனியிடம் வீழ்ந்தது.
- 1950-இந்தோனேசியா ஐ.நாவில் இணைந்தது.
- 1958-பிரெஞ்சு ஐந்தாவது குடியரசு அமைக்கப்பட்டது.
- 1960-மாலி, செனெகல் ஆகிய நாடுகள் ஐ.நாவில் இணைந்தன.
- 1961-டமாஸ்கசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் பின்னர் எகிப்து, சிரியா ஒன்றியமான ஐக்கிய அரபுக் குடியரசு முடிவுக்கு வந்தது.
- 1993-புலோப்பளைச் சமர்: கிளாலிப் பாதையை மூடும் இலக்குக் கொண்ட "யாழ்தேவி இராணுவ நடவடிக்கை" விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.
- 2005-ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்தது.

### பிறப்புகள்

- 1852-ஆன்றி முவாசான், நோபல் பரிசு பெற்ற பிரான்சிய வேதியியலாளர் (இ. 1907)
- 1907-பகத் சிங், இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், புரட்சியாளர் (இ. 1931)
- 1920-வீ.கே, ஈழத்து ஓவியர், எழுத்தாளர்.
- 1929-லதா மங்கேஷ்கர், இந்தியப் பின்னணிப் பாடகி
- 1947-துரை.மனோகரன், ஈழத்து எழுத்தாளர், கல்வியாளர்
- 1947-சேக் அசீனா, வங்காளதேசத்தின் 10 ஆவது பிரதமர்
- 1966-பூரி ஜெகன்நாத், இந்தியத் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர்
- 1975-இசுப்லவ் கிளார்க், அவுஸ்திரேலியத் துடுப்பாளர்
- 1982-ரன்பீர் கபூர், இந்திய நடிகர்

### இறப்புகள்

- 1991-சங்கர் குஹா நியோகி, இந்திய-சத்தீஸ்கர் தொழிற்சங்கத் தலைவர் (பி. 1943)
- 1994-கே.ஏ.தங்கவேலு, நகைச்சுவை நடிகர் (பி. 1917)
- 1998-சாருமதி, ஈழத்துக் கவிஞர் (பி. 1947)
- 2004-முல்க் ராஜ் ஆனந்த், இந்திய எழுத்தாளர் (பி. 1906)
- 2012-பிரிஜேஷ் மிஸ்ரா, இந்திய அரசியல்வாதி, முதலாவது தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (பி. 1928)

### சிறப்பு நாள்

- ஆசிரியர் நாள் (சீனக் குடியரசு)
- உலக வெறிநாய்க்கடி நோய் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 95 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 100 | 120 |
| தக்காளி | 80 | 30 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 40 |
| கோவா | 120 | 80 | 120 | 120 |
| கரட் | 160 | 150 | 160 | 200 |
| பூசணி | 40 | 40 | 50 | 60 |
| புடோல் | 60 | 60 | 50 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 160 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 60 | 60 | 50 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 80 | 120 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 100 | 80 |
| போஞ்சி | 120 | 140 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | — | 100 |
| கீரை - 1பிடி | 30 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 120 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 55 | 50-55 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 140 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 140 | 120 | 160 |
| முள்ளங்கி | 50 | 50 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | — | 50 | 80 |

ஆறு கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி.
அதன்பின் நீ யாரோ நான் யாரோ.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பதவிக்கு வந்துவிட்டால் அவர்களும் அப்படித்தான் இவர்களும் அப்படித்தான்

நல்லாட்சி என்ற கோசத்துடன் ஆட்சிக்கு வந்தவர்கள் முன்னைய ஆட்சிக்கும் சிங்கள மக்களுக்கும் நல்லாட்சியாக இருப்போம் என்று மறைமுகமாகக் கூறியதை நாங்கள் தவறாகப் புரிந்துகொண்டு, ஒட்டுமொத்த இலங்கைக்கும் என்று நினைத்துவிட்டோம்.

உண்மையில் நல்லாட்சி என்பது அவர்களுக்கானதேயன்றி எங்களுக்கானதல்ல என்பதே நிதர்சனம்.

இவை ஒருபுறமிருக்க, பதவிக்கு வரும் வரையில் தங்களை நல்லவர்கள்போல் காட்டிக் கொண்டவர்கள் பதவிக்கு வந்ததும் தங்களின் சுயரூபத்தைக் காட்டிவிடுகின்றனர். இதற்கு சிங்கள அரசியல்வாதிகள் மட்டுமல்ல நம் தமிழ் அரசியல்வாதிகளும் விதிவிலக்கல்ல.

சிங்கள அரசியல்வாதிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் எனத் தேர்தல் பிரசாரம் செய்து ஆட்சியைக் கைப்பற்றுகின்றனர்.

இவ்வாறு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறுகின்ற சிங்கள அரசியல்வாதிகளை ஆதரிக்கின்ற நடைமுறை நம் தமிழ் மக்களிடம் இருப்பதால், இனப்பிரச்சினையை முன்மொழிந்து அதற்குத் தீர்வு காணப்படும் என்று தேர்தல் பிரசாரம் செய்கின்றவர்கள் ஆட்சியைப் பிடித்து விடுகின்றனர்.

ஆட்சியைப் பிடித்ததும் அவர்கள் முதலில் கூறுவது; இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதுதான்.

தவிர, தமிழ் மக்களுக்கு அதிகாரம் கொடுத்தால்; அதனை சிங்கள மக்கள் எதிர்ப்பர் என்றும் தென்பகுதியில் குழப்பம் ஏற்படும் என்றவாறும் சாட்டுக்கள் தாராளமாக தமிழர்களுக்குக் கூறப்படும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று பிரசாரம் செய்ததன் காரணமாக சிங்கள மக்களின் வாக்குகளையும் தமிழ் மக்களின் வாக்குகளையும் பெற்று ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல்வாதிகள், இனப்பிரச்சினையைத் தீர்த்தால் சிங்கள மக்கள் குழம்புவார்கள் எனக் கூறுவதற்குள் எத்தனை திருகுதாளம் உள்ளதென்பதை எவரும் இலகுவில் புரிந்து கொள்வர்.

இதுதான் என்றால், நம் அரசியல்வாதிகள், சமஷ்டி என்பர். சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்பர். காணாமல்போனவர்களை உடன் கண்டுபிடிப்போம் என்று கூறுவர். அரசியல்கைதிகளை உடன் விடுதலை செய்விப்போம் என்று நாக்கூசாமல் கூறிமுடிப்பர்.

தேர்தலில் வென்று விட்டால் எல்லாம் அவ்வளவுதான். அரசாங்கத்துடன் சேர்ந்து கிடைக்கின்ற பிரசாதத்தைப் பெற்றுக் கொள்வதுதான் புத்திசாலித்தனம் என்று முடிவெடுப்பர்.

என்ன செய்வது இரண்டு கோடி ரூபாய் வ்வாங்கியதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை மறுதலித்து எங்கே நிரூபியுங்கள் என்று கேட்கத் திராணியற்றவர்கள் தமிழ் அரசியல்கைதிகளை விடுதலை செய்விப்பார்கள் என்று யார் நம்பினாலும் கைதிகள் சிறைக்குள் இருப்பது தான் விதியாகிவிடும்.

ஆகையால் பதவிக்கு வந்துவிட்டால் அவர்களும் இவர்களும் ஒன்றென்றறிவதுதான் எங்களின் அறிவுடைமையாக இருக்க வேண்டும்.

# பண்டாரநாயக்க காலத்தில் ஆயுதக்கலாசாரமற்ற ஓர் இளைஞர் சமுதாயம் நாட்டுக்காக உழைத்தது

## சபாநாயகர் கரு ஜெயசூரிய நினைவுபடுத்தல்

(கொழும்பு)

தேர்தலில் தோல்வியுற்றவர்களுக்கு அல்லது அதிருப்தி தெரிவிப்பதற்கு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளவில்லை. மாறாக எமது வீடுகளுக்கு முன்பாக வெறும் யானை மலமும் அல்லது காய்ந்த சருகுகளே வீசப்படும். இது அன்றைய காலகட்டத்தில் ஆட்சி புரிந்த பண்டாரநாயக்க போன்ற தலைவர்களின் ஆட்சி திறமையைக் காட்டுகிறது என தெரிவித்த சபாநாயகர் கரு ஜெயசூரிய, இக்காலத்தை போன்றல்லாது அந்த காலத்தில் ஆயுதக் கலாசாரமற்ற ஓர் இளைஞர் சமுதாயம் நாட்டுக்காக உழைத்தது எனவும் தெரிவித்தார்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் 59ஆவது ஞாபகார்த்த நினைவுதினத்தை முன்னிட்டு அரசியல் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பண்டாரநாயக்க குடும்பத்தை சேர்ந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் அனுர பண்டாரநாயக்கவை நினைவுகூரும்நிகழ்வு நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது சபாநாயகர் கரு ஜெயசூரிய, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்த்தன, ரோகன லக்ஸ்மன் பிரியதர்ச, எச்.எம்.பௌசி, டக்ளஸ் தேவானந்தா, அநுர குமார திஸாநாயக்க, மேல் மாகாண ஆளுநர் கலாநிதி ஹேமா குமார உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (இ-7)

# கடலில் தீர்த்தமாடல்

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் பத்தாம் திருவிழா இன்று இரவு 7 மணியளவில் ஆரம்பமாகி நாளை அதிகாலையில் நாகர்கோவில் கடலில் தீர்த்தமாடும் நிகழ்வுடன் நிறைவடையும்.

இந்நிகழ்வில் இரவு மேள வாத்திய இசை, தென்னிந்திய பாடகர்களின் இசை நிகழ்ச்சி என்பன இடம்பெறவுள்ளதாக திருவிழா உபயகாரர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

# குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சத்குரு சம்ஹார மூர்த்தி மஹாபரணி குருபூசை இன்று 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை கோண்டாவில் ஸ்ரேசன் வீதியிலுள்ள குருவின் ஆலயத்தில் நடைபெறும்.(இ)

# நன்றி மறவாமல்...

- பிறர் செய்த உதவியை உயிருள்ளவரை மறவாதீர்கள்.
- அடுத்தவர்கள் செய்த உதவிக்கு நன்றிகூற மறவாதீர்கள். தேவைகளை அறிந்து உதவி செய்த உள்ளங்களை எப்போதும் மறக்கக் கூடாது.
- நன்றி என்கிற வார்த்தை எப்போதும் நம்மை நல்வழிப்படுத்தும். ஆகவே நன்றியை மறவாதீர்கள்.
- பிறரிடம் நீங்கள் சிறு உதவியைப் பெற்றிருந்தாலும் அந்த உதவியைச் செய்தவர்களுக்கும் இறைவனுக்கும் நன்றி கூற மறவாதீர்கள்.
- நன்றி என்ற சொல்லுக்குள்தான் அன்பு, கருணை, பாசம் போன்றவைகள் அடங்கி வாழ்வை இனிமையாக்குகிறது.



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## உங்கள் ஆத்மதாபத்தின் ஆழ்ந்த உன்னத நிலை (Longing)

இறைவனை அடைவது என்பது ஏக்கப் பேராவலின் தவ்ரததைப பொருததே தவிர, ஒருவருடைய தகுதியையும் காலத்தையும் பொருத்தது அல்ல.

ஒரு மலரைப் பறிக்கச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இறையைக் காண சற்று நேரம் கூடத் தேவையில்லை என்று இந்தியாவில் கிராம மக்களிடையே நிலவி வரும் ஒரு பழமொழி சொல்கிறது. இறைவனை அடைவதற்குத் தேவை தீவிரமான ஏக்கப் பேராவல் தானே தவிர உங்களுடைய திறமைகளோ தகுதிகளோ அல்ல.

உடனடியாக இப்போதே இறையைக் காணும் தீவிர ஆவலினைக் கொள்ளுங்கள். நீங்கள் ஒன்றும் இல்லை என்றும் உங்களுக்காக எதையும் விரும்பவில்லை என்றும் நீங்கள் அறியும்போதுதான் இது நிகழ்கிறது.

**சுனீதா:** நாம் ஒன்றுமில்லை. நாம் எதையும் விருமபவிலலை எனுமபோது ஏககப பேராவல எபபடி வரும்?

**ஸித்தப்பா:** நீங்கள் ஒன்றுமில்லை என்றும் நீங்கள் எதையும் விரும்பவில்லை என்றும் அறியும்போது அது எல்லாம் நம்முடையதே என்னும் உணர்வைக் கொண்டு வருகிறது.

**ஸ்ரீஸ்ரீ:** எலலாம நமமுடையதே என்பது ஏககப பேராவலைத் தீவிரப்படுத்துகிறது.

**பில்:** ஆசைக்கும் ஏக்கப் பேராவலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**ஸ்ரீஸ்ரீ:** மனதின் வேகம் (ஜ்ரம்) ஆசை. இதயத்தின் தாபம் தெய்வீக விரகம்.

# சத்சங்கம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் சத்சங்கம் நிகழ்வு நாளை 29ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் 6 மணிவரை பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மகராஜ் ஆன்மீக வுரை வழங்குவார். (இ)

# இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

உடம்பிற்கு வரும் நோய்களுக்குப் பல மருந்துகள் இருக்கின்றன. அவற்றைத் தரும் மருத்துவர்களும் பலர் இருக்கின்றார்கள். ஆனால் உளநோய்க்கு மருந்து எங்கே? அதைத் தரும் மருத்துவர் யார்?

உள நோய்க்கு மருந்து தெய்வ சிந்தனை. உளநோய்க்கு மருத்துவர் கடவுள்தான்.

" தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்கிறார் பொய்யில்லாப் புலவர்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பெண்களுக்கு ஏற்படும் திருமணத்தடை நீங்க செய்ய வேண்டிய எளிய பரிகாரங்கள்

இந்த காலத்தில் எல்லா அம்சங்களும் நிறைந்த பெண்களுக்கு திருமணம் நடப்பது என்பதே மிகவும் அரிதான செயலாக இருக்கின்றது.

அத்தகைய திருமண தோஷம் உடைய பெண்கள் ஸ்ரீகருடனை வழிபட்டால் தோஷம் நீங்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**திருமண தடைக்கு காரணமான தோஷங்கள்**

**செவ்வாய் தோஷம்**

ஜாதக கட்டத்தில் லக்னத்துக்கு 2, 4, 7, 8, 12 ஆகிய இடங்களில் செவ்வாய்க்கிரகம் இருந்தால் செவ்வாய் தோஷம்.செவ்வாய் தோஷம் காரணமாகத் திருமணம் நடைபெறக் காலதாமதம் ஆகும்

**ராகு- கேது தோஷம்**

லக்னம், 2, 7, 8 ஆகிய இடங்களில் ராகு அல்லது கேது இருப்பதால் சர்ப்ப தோஷம் ஏற்படுகிறது. மேலும் ராகு - கேது இருவரும் அவர்கள் கிரகத்தின் வீட்டில் இருக்கிறார்களோ அந்த கிரகத்தின் தன்மையை பிரதிபலிப்பார்கள். (தொடரும்)

# இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

## அன்புடன் வாழ்வோம்

✦ மனிதர்கள் செய்த உதவியை சிந்திப்பதை விட இறைவன் செய்த உதவியை சிந்தனை செய்வீர்!

✦ நங்கள செயத நனமைகளை சிநதிபபதை விட உஙகளில நிகழநத பாவஙகளைச சிநதியுஙகள.

✦ மற்றவர்களின் குற்றங்களை நோட்டமிடுவதை விட உங்களின் குற்றங்களை நோட்டமிடுங்கள்.


✦ உன வாயிலாக இறைவன ஒரு மனிதனுககு நேர்வழி காட்டுவது, இவ்வுலகத்தையும் இதிலுள்ள யாவற்றையும் விட உனக்கு நன்மை பயப்பதாகும்.

✦ எவர் அண்டை வீட்டாரை துன்புறுத்துகிறாரோ, அவர எனனைத துனபுறுததியவராவார.

✦ அன்பு செலுத்தாதவன் அன்பு செலுத்தப்படுவதற்கு அருகதை அற்றவன்.

✦ தருமம் செய்ய இயலாதவன் ஒரு நற்செயல் செய்வானாக அல்லது ஒரு கெட்ட செயலிலிருந்து விலகிக் கொள்வானாக. அதுவே அவனது ஈகை.

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டியில் கே.சி.சி.சி – சென்றலைட்ஸ் அணிகள் மோதல்





ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிக்கு கே.சி.சி.சி. அணியும் சென்றலைட்ஸ் அணியும் தெரிவாகியுள்ளன. கே.சி.சி.சி. அணி AB அணியை 95 ஓட்டங்களால் வெற்றிபெற்றும் சென்றலைட்ஸ் அணி யாழ். பல்கலைக்கழக அணியை 6 இலக்குகளால் வெற்றி பெற்றும் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின்

## மாபெரும் தாச்சி போட்டி முடிவுகள்





கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக்கழகமும் இணைந்து யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் தென்மராட்சி ரீதியில் நடத்தி வந்த மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி தொடரில் இறுதிப்போட்டி கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது.

இப்போட்டியில் நாவற்குழி சரஸ்வதி A விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி கள்ளிநகர் துர்க்கா C விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் ஆரம்பம் முதல் இறுதிவரை சிறப்பாக விளையாடிய நாவற்குழி சரஸ்வதி A விளையாட்டுக் கழகம் 12:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது.

இப்போட்டித்தொடரினது ஆட்ட நாயகனாகவும் இறுதிப்போட்டியின் சிறந்த விளையாட்டு வீரனாகவும் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த இ.சிந்துயன் தெரிவானார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



ஜனாதிபதி தங்கக்கிண்ண பெண்களுக்கான கரப்பந்தாட்டச்சுற்றுப்போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சம்பியன் பட்டத்தை வென்றது. கடந்த 23ஆம் திகதி ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் கோப்பாய் கே.எம்.வி. விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக பெண்கள் அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது. (க)

# சங்கானை உதயதாரகையை வீழ்த்தி சம்பியனாகியது கார்மேல் போய்ஸ்



கார்மேல் போய்ஸ் அணி



சங்கானை உதயதாரகை அணி

கோப்பாய் விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 7 பேர் 6 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் சங்கானை உதயதாரகை அணியினை வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியது கார்மேல் போய்ஸ் அணி. முதலில் துடுப்பெடுத்தாடிய உதயதாரகை நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றது.

அவ் அணி சார்பாக சூரி 12 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் றகீம் 2 இலக்கினை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல்போய்ஸ் 3.4 பந்துப் பரிமாற்றத்தில் ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது. றகீம் 15, அஜன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்ட நாயகனாக றகீம் தெரிவு செய்யப்பட்டார். (க)

## ஐ.நா அடுத்த கட்ட...

ஜெனிவாவில் வழங்கிய செவ்வியில் அவர் இதனை கூறியுள்ளார். அடுத்த மார்ச் மாதம் இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இது மிகவும் முக்கியமானது. 2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்டு, இலங்கையும் கையெழுத்திட்டு நிறைவேற்றப்பட்ட யோசனை மிகவும் முக்கியமானது.

2015ஆம் ஆண்டு முதல் இதுவரை சிறியளவான நகர்வுகளே இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த 2017ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் யோசனைகளை அமுல்படுத்த மேலும் இரண்டு ஆண்டுகள் காலஅவகாசம் கோரியது. மேலதிக காலத்தை வழங்க ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையும் இணங்கியது.

இதற்கு அமைய எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் இலங்கை அரசாங்கம், 2009ஆம ஆண்டு இறுதிக்கட்டப் போரில் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் இலங்கை படையினர் மேற்கொண்ட போர் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்த நீதிக் கட்டமைப்பை நியமிக்க வேண்டும் என்பது முக்கியமானது.

உறுதியளித்தப்படி நீதி விசாரணை பொறிமுறை கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்டினேன்.

இலங்கை இதனை செய்ய தவறினால், சர்வதேச சட்டங்களுக்கு அமைய புதிய நடவடிக்கைகளை எடுத்து இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியதாகவும் ஸ்டீபன் திம்ஸ் குறிப்பிட்டுள்ளார். (ம)

## சமையல் எரிவாயுவின்...

அசேல சம்பத் கூறியுள்ளார்.

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால், மாதாந்தம் சுமார் 6,000 ரூபாவிற்கும் மேலதிக செலவு ஏற்படும்.

எனினும், இந்த நஷ்டத்திற்கு அரசாங்கம் பொறுப்பேற்காது என்ற காரணத்தால், சிற்றுண்டிகளின் விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, பால்தேநீர், அப்பம், பிட்டு, ரொட்டி உள்ளிட்ட அனைத்து உணவுப் பொருட்களுக்கும் விலையை அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அப்பம் ஒன்றின் விலை 15 ரூபாவாக அதிகரிக்கப்படும் என அகில இலங்கை ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம)

## வட மாகாண அமைச்சரவை...

மாகாணசபை சபாமண்டபத்தில் நடைபெற்றது.

அமைச்சர் சபை தொடர்பாக தெளிவுபடுத்தலை இந்த அவைக்கு தெரியப்படுத்த வேண்டும் என தெரிவித்த அவைத்தலைவர், நீதிமன்ற கட்டளை அதனுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் அவையில் குறிப்பிட்டுள்ளோம் ஆனால் அந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரவில்லை

ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் நான் அனுப்பிய கடிதத்தில், அமைச்சர் சபையானது மாகாண சபைக்கு கூட்டாக பொறுப்பு கூறவேண்டும் என சட்டத்தில் உள்ளது. அந்த நிலையில் தற்போது சட்ட வலுவான அமைச்சர் சபை இருக்க வேண்டும். தற்போது மாகாண சபையில் அவ்வாறு இல்லை என தெரிவித்துள்ளேன்.

நீதிமன்றில் இந்த விடயம் இடம்பெற்று வருகிறது. சபையோ அதிகாரிகளோ தமக்கு நீதிமன்ற உத்தரவு தரவில்லை என நினைத்து செயற்பட்டால் பிற்காலத்தில் சிக்கலை உருவாக்கும், அனைவரும் இதில் கவனமாக நடந்துகொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

அப்போது எழுந்து கருத்து தெரிவித்த எதிர்க்கட்சிதலைவர் தவராசா, கடந்த 3 மாதங்களாக இந்த விடயம் தொடர்பாக பேசிவருகிறோம். ஒவ்வொருவரும்தாம் அமைச்சர் என செயற்படுகிறார்கள். தற்போது அமைச்சர்கள் யார், அவர்கள் என்ன செய்கிறார்கள், சட்ட ஏற்பாட்டின் படி செயற்படுகிறார்களா என கோரினார்.

அந்த நேரம் கருத்து தெரிவித்த கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், நீதிமன்றம் போன்று சபையை நடத்தி வருகிறோம். ஆளுநர் செய்யவேண்டிய விடயங்களை மாகாணசபை விவாதிக்கமுடியாது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து இவ்விடயம் தொடர்பாக கடும் வாக்குவாதம் ஆரம்பித்தது. வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான தவராசா, தவநாதன், அகிலதாஸ், சிவாஜிலிங்கம், பரஞ்சோதி, சுகிர்தன், அஸ்மின், ஜெயதிலக ஆகியோர் கடும் விவாதத்தில் ஈடுபட்டனர்.

அதனை தொடர்ந்து சபையை அமைதிப்படுத்திய அவைத்தலைவர் கருத்து தெரிவிக்கையில், அமைச்சர் விவகாரம் தொடர்பில் எனது முயற்சி சாத்தியப்படவில்லை, பல முறை முயற்சித்திருந்தோம் ஆனால் முடியவில்லை. இதில் தனித்து எவரையும் குற்றஞ்சாட்டவில்லை, கூட்டு நடவடிக்கை தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தேன். அதிகாரிகள் உதவி இல்லாத நிலைப்பாட்டில் உள்ளார்கள.

இந்த விடயத்தை இனி சபை சார்ந்து எடுக்க வேண்டிய தேவை இல்லை, இந்த விடயத்தை தற்செயலாக கரும்புள்ளி என தெரிவித்த விடயம் உண்மையாகவே கரும்புள்ளியாக மாறியுள்ளது.

உணர்வால் இடம்பெற்ற விடயம், நாம் நிர்வாகம் செய்ய தெரியாதவர்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது. எம்மிடம் இதற்கு முடிவில்லை என மேலும் தெரிவித்தார். (ம-9)

## இராணுவத்தால்...

மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

எனினும், எந்த விதமான அச்சுறுத்தல் வந்தாலும் தான் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு் நீதிகோரும் நடவடிக்கையிலிருந்து பின்வாங்க போவதில்லை எனவும் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 39-வது கூட்டத்தொடர் கடந்த 10-ம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகியது. இந்த கூட்ட தொடர் இன்று 28-ம் திகதி நிறைவடையவுள்ளது.

இந்த கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக ஜெனிவா சென்றுள்ள அனந்தி சசிதரன் கருத்து தெரிவித்த போதே அவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர்,

இறுதி யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஒன்பது ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் காணாமல் போனவர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் முன்னெடுக்கவில்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இது குறித்து மனித உரிமைகள் பேரவையில் பேசி வருகின்றேன். எனினும், காணாமல் போனவர்கள் விடயத்தில் கால இழுத்தடிப்பு மாத்திரமே நடந்துள்ளது.

இந்நிலையில், குறித்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபையும் துணைபோகின்றதா? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது என் அவர் மேலும் கூறியுள்ளார். (ம)

## வாள்வெட்டுக்குழு...

இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட கும்பல் நவாலி பிரதான வீதியில் வாள்களை வீசிக்கிக் கொண்டு வீதியால் செல்வோரை வாள்களைக் காட்டி அச்சுறுத்திக் கொண்டு சென்று அங்குள்ள கடை ஒன்றிற்குள் புகுந்து அங்கு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண்களை அச்சுறுத்தி பணம் மற்றும் பொருட்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர். இதேவேளை நேற்றுமுன்தினம் நவாலி சென்பீற்றர்ஸ் வீதியிலுள்ள அரச உத்தியோகத்தரின் வீட்டிற்குள் புகுந்த வாள் வெட்டுக்குழுவினர் வீட்டு ஜன்னல் கதவு, கண்ணாடி என்பவற்றை உடைத்து அட்டூழியம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-78)

## தமிழ் அரசியல்...

தேசிய கலை இலக்கியப் பேரவையின் மண்டபத்தில் இடம்பெற்ற இவ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துகின்ற யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் சந்திப்பின் போது இம் முடிவு எட்டப்பட்டதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப் போராட்டத்தில் மனிதாபிமானமுள்ள அனைவரையும் அணிதிரளுமாறு இப் போராட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம)

## யுத்தத்தால் வடக்கில்...

கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவுக்கு வந்து 9 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் வட பகுதியின் சுற்றுலாத்துறை வளர்ச்சியானது எதுவித முன்னெடுப்புகளும் இன்றி முடங்கிக் கிடப்பது கவலைக்குரியது.

இதற்கு போதுமான நிதி வசதிகள் மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்படாமை ஒரு காரணம். அடுத்து சுற்றுலா பற்றி எம்மிடையே போதிய அறிவும், அனுபவமும் இல்லாமையும் ஒரு காரணம்.

சுற்றுலா சம்பந்தமாக உள்ளூர் அரசாங்கம் போதியவாறு சிந்தித்து செயலாற்ற வேண்டிய அவசியம் இருப்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பல மக்கள் பிரதிநிதிகள் பணம் ஒன்றையே பார்க்கின்றார்கள். வருங்காலப் பாதிப்புக்களை மனதில் எடுக்கத் தயங்குகின்றார்கள் என குறிப்பிட்டுள்ளார். (ம)

## மீளாய்வு செய்வதற்கு...

மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது..

வடக்கு மாகாண சபையின் 132ஆவது சபை அமர்வு நேற்று கைதடியில் அமைந்துள்ள மாகாணசபை சபாமண்டபத்தில் நடைபெற்றது. அதன் போது சபையில் காற்றாலை விவகாரம் தொடர்பாக நீண்டநேரம் விவாதம் இடம்பெற்றது.

வடமாகாண சபைக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் 2016ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையை சபையில் அவைத்தலைவர் வாசித்தார். அதில் காற்றாலைகள் மூலமான மின்சார மின்பிறப்பாக்கி பொறிகளை நிறுவுதல் தொடர்பான விடயம் வாசிக்கப்பட்டது. அதன் போது உறுப்பினர்கள் அது தொடர்பில் சில கருத்துக்களை தெரிவித்தனர்.

குறித்த விடயத்தில் தொடர்புடையவர் என்ற வகையில் உறுப்பினர் ஐங்கரநேசன் தனது விளக்கத்தை அளித்துக்கொண்டிருந்தார். அப்போது மேற்குறித்த விடயத்தின் ஒப்பந்தத்தில் கையெழுத்து இடம்பெறவில்லை என்ற விடயம் குறித்து அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திற்கும் ஐங்கரநேசனுக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

அப்போது உறுப்பினர் ஐங்கரநேசன் அவைத்தலைவரை பார்த்து நீங்கள் என் சார்ந்து என் அமைச்சு சார்ந்து வேண்டுமென்று திட்டமிட்டு செயற்படுகிறீர்கள் என குற்றம் சாட்டினார்.

அதற்கு பதிலளித்த அவைத்தலைவர், ஐங்கரநேசனுடைய கருத்தை மறுத்ததுடன் இவ்வாறான பிரச்சினைகளுக்கு என்னால் இடம் அளிக்க முடியாது. காற்றாலை ஒப்பந்தம் சபைக்கு இன்று வரை சமர்ப்பிக்கவில்லை என தெரிவித்தார்.

அப்போது கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், இங்கு ஊழல் இடம்பெற்றால் இனிமேல் இது தொடர்பாக விவாதிக்கவேண்டாம். ஆளுநர் மூலமாக நிதி குற்றவியல் விசாரணைக்கு முறைப்பாடு செய்து உடனடி விசாரணையை மேற்கொள்ளவேண்டும் என தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் சரியான முறையில் செய்யப்படவில்லை. காற்றாலை ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து மாகாண சபைக்கு வருமானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என உறுப்பினர் ஜெயசேகரம் மற்றும் குருகுலராஜா ஆகியோர் தெரிவித்தனர்.

காற்றாலை தொடர்பாக மீளாய்வு செய்து மாகாண சபைக்கு 25 வீதம் வருமானம் கிடைக்க கூடிய வகையில் ஒப்பந்தம் மீளாய்வு செய்ய வேண்டும் என தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டது. (ம-9)

## எரிபொருள் விலை...

உயர்ந்துள்ளது. இதன் தாக்கம் உள்நாட்டிலும் இருக்கும் எனவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான முரண்பாடு அதிகரித்தால் ஒரு பீப்பா மசகு எண்ணெயின் விலை 100 டொலரையும் தாண்டி விடும் என எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார். (ம)

## இராணுவத்தை...

சிரேஷ்ட வீரர்கள் என்றும் அவர்களின் அபிமானத்தை பாதுகாக்க அரசாங்கம் கடமைப்பட்டிருப்பதாகவும் அவர்களுக்கு வழங்க வேண்டிய அதிகபட்ச வரப்பிரசாதங்களை குறைவின்றி நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் நியூயோர்க் நகரில் அமெரிக்க வாழ் இலங்கையர்களை சந்தித்து கலந்துரையாடியபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்விமான்கள், புத்திஜீவிகள், தொழில் வாண்மையாளர்கள், வியாபாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட குழுவினர் இச்சந்திப்பில் கலந்துகொண்டதுடன், ஜனாதிபதி அவர்களுக்கு உற்சாக வரவேற்பளித்தனர்.

யுத்தம் நிலவிய காலகட்டத்திலும் அதற்கு பின்னரும் யுத்தத்துடன் எவ்வித சம்பந்தமும் அற்ற பல சம்பவங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவற்றை இராணுவத்தினரின் மீது மேற்கொள்ளப்படும் வேட்டையாக கருதமுடியாது என்று தெரிவித்த ஜனாதிபதி, 2015ஆம் ஆண்டில் தன்னை ஜனாதிபதியாக தேர்ந் தெடுத்த மக்கள் தன்மீது கொண்டிருந்த நம்பிக்கைகளில் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்பதும் முக்கியமானதாக அமைந்திருந்தது எனவும் தெரிவித்தார். (ம)

## வடக்கு, கிழக்கு...

அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தால்தான் அபிவிருத்தியைக் கொண்டு வர முடியுமென்பதும் தவறான நோக்கமெனவும் அவர் தெரிவித்தார். (ம)

நீரோகா
திகதி 2018/09/27
சீட்டிழுப்பு இலக்கம் 452
லக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 04 12 17 60
45
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1511 திகதி 2018/09/27
M O K
வெற்றி இலக்கங்கள் 20 37 52 55
போனஸ் இலக்கம் 15
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.09.27
சீட்டிழுப்பு இலக்கம் 1895
ஆங்கில எழுத்து M
வெல்லப்பட்ட இலக்கங்கள் 23 48 55 70
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/09/27
சீட்டிழுப்பு இலக்கம் 3755
ஆங்கில எழுத்து M
வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 6 2 2 4 5
தேசிய லொத்தர் சபை

## ஆலய கோபுரத்...

லுள்ள கோவில் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கூரிய ஆயுதங்களும் உருமறைப்புச் செய்யும் ஆடைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

சட்டவிரோத கும்பல் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் நேற்று காலை சுன்னாகம் பகுதியில் தேடுதல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இருபது மற்றும் பத்தொன்பது வயதுடைய இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கோண்டாவில் மற்றும் தெல்லிப்பழை பகுதிகளைச் சேர்ந்த இவர்களிடமிருந்து 5 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

அவர்களிடம் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அதனடிப்படையில் கொக்குவிலிலுள்ள இந்து ஆலயம் ஒன்றின் கோபுரத்திற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி கூரிய ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

ஆறு கைக் கோடரிகள் மற்றும் மூன்று வாள்கள், அடையாளம் தெரியாத முறையிலான உருமறைப்புச் செய்யும் ஆடைகள் இரண்டும் இவ்வாறு மீட்கப்பட்டன என்று சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ம-9)


### வெளிநாட்டு வேலைவாய்ப்பு

வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists

ஆரம்பக் கட்டணம் எதுவும் இல்லை!
பதிவுக் கட்டணம் 200/- மட்டுமே

இப்போது யாழ்ப்பாணத்தில்
மத்திய கிழக்கு - ஐரோப்பா - மேலைத்தேய நாடுகள்
077 00 38 215 ☎ 021 222 00 11
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

### விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

### Mobile Phone Repairing Course



I Phones & Smart Phones
Hardware , Software and Unlocking;
20th Batch start on 6.10.2018
*சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
*தனிப்பட்ட கவனிப்பு.
*சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
(Network Engineering கற்கைநெறி 6.10.2018 முதல் ஆரம்பம்
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம்
076-7013060 , 021-7306000

### புதிய இரண்டு வீடுகள் விற்பனைக்கு உண்டு

உடையார்லேன், பொற்பதி வீதி, கொக்குவிலில் நவீன வசதிகளுடன் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு வீடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:
0763156520

### பயிற்சியுடன் வேலை வாய்ப்பு

பயிலுனர்கள் - 2018 இல் A/L எடுத்தவர்கள்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை
● எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால வேலை வாய்ப்பு பயற்சிகள் உண்டு.
● விரும்பியவர்கள் பயற்சி முடிவில் வேலையில் சேரலாம்.
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7'500/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226236 v2vacancies@gmail.com

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1kg 450/= மட்டும். கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும். U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
தொடர்பு: 077 868 9500
(5797)


## கொக்குவில் நந்...

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

2 மோட்டார் சைக்கிள்களில் 6 பேர் வந்தனர். அவர்கள் முகங்களை மூடி துணியால் கட்டியிருந்தனர். எம்மை அச்சுறுத்தும் வகையில் வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களை அடித்து உடைத்துவிட்டு ஆறு பேரும் தப்பித்தனர் என்று வீட்டிலிருந்தவர்களால் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஆவா எதிர்ப்புக் குழுவின் உறவினர் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆவா குழுவைச் சேர்ந்தவர்களே தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-9)


### ஆடம்பர வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.நகரில் அமைதியான சூழலில் புதிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு. திருமண நிகழ்வுகள், சுபகாரியங்கள், வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு சகல வசதிகளும் உண்டு. A/C, Non A/C, தளபாட வசதிகள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் என அனைத்து வசதிகளும் உண்டு.

தொடர்பு: 077 711 0015,077 311 0015 (5818)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்



### நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். தொடர்பு:
நிறஞ்சன் நகைமாடம் சந்தை வீதி, உடுப்பிட்டி. 0763836129 (5824)

AL, OL பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
### இலவசக்கணினிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 2000ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் மாணவர்களிற்கு பயிற்சியினை வழங்கிய நிறுவனம்.
18 வது ஆண்டு நிறைவில் உலகின் தரமானதும் அதிக வேலைவாய்பினை உடைய நிறுவனங்களாகிய Oracle Campus, Microsoft IT academy, Cisco Academy, CIMA மற்றும் கொழும்பு பல்கலைககழக தகவல் தொழில்நுட்ப பிரிவு என்பனவற்றுடன் இணை நிறுவனாக தொழிற்படும் MCS IT CAMPUS இலவசக்கணினிப்பயிற்சி த்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள்
Type<FREE><Name><DOB><District>sendTo772395895
MCS IT CAMPUS
34 Sir Pon Ramanathan Rd, near University of Jaffna
சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகம், Microsoft,CIMA-UK விருதுகளை வென்ற நிறுவனம்

### A/L பொருளியல் - 5

பணம், விலை மட்டம் & வங்கி முறைமை
புதிய பாடத்திட்ட நூல் - வங்கியாளர் போட்டிப் பரீட்சைகளுக்கும் ஏற்றது.
A/L 2015, A/L 2016 பரீட்சைகளில் 99 புள்ளிகளும், A/L 2017, A/L 2018 பரீட்சைகளில் 100 புள்ளிகளும் பெற வைத்த நூல்களின் ஆசிரியர்
புள்ளிகள் 100/100
வே.கருணாகரன் ரூபாய் 350/=
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு
நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய
37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...
(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி நிபுணர்களில் ஒருவர்)
கிளினிக் நடைபெறும் திகதி:
யாழ்ப்பாணத்தில் 29.09.2018 (நாளையதினம்)
பரந்தனில் 06.10.2018
90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்
I.A.S. HOSPITAL ஐ.ஏ.எஸ் மருத்துவமனை
இல.101, பிரதான வீதி, (2-ம் குறுக்குத் தெரு சந்தியில்) யாழ்ப்பாணம்.
பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம், பரந்தன் சந்தி, பரந்தன்
தொடர்பு: 0774405969, 0774441082
(C-3978)


## தொண்...

கிழமை இடம்பெற்றது. இந்த சம்பவத்தில் க.சறோஜினிதேவி வயது 74 என்பவரே மரணமடைந்தவராவார்.


உயிரிழப்பு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையினைப் பார்வையிட்ட நீதவான் மரண விசாரணை அதிகாரி மூலம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டார்.

நீதவானின் பணிப்பின் பிரகாரம் திடீர் மரண விசாரணை அதிகாரி விசாரணையை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பணித்தார்(ம-29-30)


O/L சிங்களம் Paper Class
ஆரம்பம் 30.09.2018 ஞாயிறு 11.00am
கோலாசிற்றி
234,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0778435224

### போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
சமய பாட மற்றும் வழிகாட்டல் ஆலோசனை போன்ற ஆசிரியர் தெரிவுப் பரீட்சைகள் மற்றும் ஏனைய போட்டிப் பரீட்சை வகுப்புக்கள் உட்பட அனைத்து பரீட்சைகளுக்கும் ஞாயிறு மற்றும் மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்பு: 076 688 3394


# காணவில்லை



## மிக்கல்அல்பிறட் (அழகு)

யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு சென்ற மிக்கல்அல்பிறட் என்பவரை நேற்று முன்தினம் (26.09.2018) காலை 10.50 மணியில் இருந்து காணவில்லை.

சொந்த இடம்: சின்னத்தோட்டம், பருத்தித்துறை.

அடையாளம் : இந்தோனேசியா சாரமும், பட்டர் கலருடன் பிறவுண் கோடு சேர்ந்த சேட்டும் அணிந்திருந்தார்.

இவரை காண்பவர்கள் தயவுசெய்து 0776184467, 0776589791, 0768547822 என்ற எண்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.